ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1818/37 - 2013 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2013.07.12
*1818/37 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2013*

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126ஆம், 321ஆம் பிரிவுகளினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2013, யூலை 1.

ஒழுங்குவிதிகள்

தலைப்பு :

1. இவ்வொழுங்குவிதிகள், 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இது 2010ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல் பற்றிய நியமனங்கள் மீதான சர்வதேச சமவாயத்திற்குப் பயனளிப்பதாக, 2013, யூலை 01ஆந் திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

2. (அ) ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றெட்டு யூலை 17ஆந் திகதிய 1036/21ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1998ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல்) ஒழுங்குவிதியானது 2013 யூலை 01ஆந் திகதி முதல் இல்லாதொழிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் 1998 யூலை 17ஆந் தேதிய 1036/21ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1998ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் காத்தல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க 2016, டிசெம்பர் 31ஆந் திகதி வரையில் சான்றிதழ்கள் வழங்கப்படலாம்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகள் சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் சேவை நிபந்தனைகள்) பற்றிய ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள், சட்டத்தின் 333(ஈ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 139ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக பாதுகாப்பான கப்பற்றொழிற்பாடுகளுக்குப் பொறுப்பினைக் கொண்டுள்ள கம்பனிச் சொந்தக்காரர் முகவராண்மை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*வரைவிலக்கணங்கள் :*

4. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம்" என்பது, சமவாயத்தின் II/5ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"இயலக்கூடிய கடலோடி எந்திரம்" என்பது, சமவாயத்தின் III/5 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற கப்பற்றுணையாளர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"சட்டம்" என்பது, 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் எனப் பொருள்படும் ;

"நிர்வாகம்" என்பது, இவ்வொழுங்குவிதிகளின் அமுலாக்கத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றவரான வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"அங்கீகரிக்கப்பட்ட" என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும் ;

"அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, பரீட்சை அத்துடன் மதிப்பீடு" என்பது, சமவாயத்தின்கீழ் சான்றிதழ்களை வழங்கல் அத்துடன்/அல்லது புறக்குறிப்பிடுதல்கள் என்பனவற்றின் நோக்கத்திற்காக பரீட்சை மற்றும் மதிப்பீடுகள் உள்ளடங்கலாக மொத்தப் பயிற்சி தேவைப்பாடு மற்றும் நியமங்களை விதித்துரைக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறான கடலோடிகளின் பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று எனப் பொருள்படும்;

"அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர்" என்பது, கடலோடிகளின் மருத்துவப் பரீட்சையை நடாத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"தகுதிச் சான்றிதழ்" என்பது, சமவாயத்தின் II, III, IVஆம் அல்லது VIIஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் ஜி. எம். டி. எஸ். எஸ். வானொலி இயக்குனர் என்போருக்காக வழங்கப்பட்டு புறக்குறிப்பிட்ட சான்றிதழ் ஒன்று எனப் பொருள்படும் என்பதுடன் அதனில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு மட்டங்களில் சம்பந்தப்பட்ட பதவியில் சேவையாற்றுவதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அதனை சட்டமுறையாக வைத்திருப்பவருக்கு உரித்துடையதாயிருக்கும்;

"தேர்ச்சிச் சான்றிதழ்" என்பது, சமவாயத்திலான பயிற்சி, தகுதிகள் அல்லது கப்பற்பயண சேவையின் இயைபான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன எனக் கூறி கடலோடி ஒருவருக்கு வழங்கப்பட்ட தகுதிச்சான்றிதழ் ஒன்றைத் தவிர வேறு சான்றிதழ் ஒன்று எனப் பொருள்படும் ;

"பிரதம பொறியியல் அலுவலர்" என்பது, கப்பலின் பொறியியல், மின்சார நிறுவுகைகளின் தொழிற்பாட்டுக்கும், பராமரிப்புக்கும் அத்துடன் பொறிமுறை உந்துகைக்கும் பொறுப்பான சிரேட்ட பொறியியல் அலுவலர் எனப் பொருள்படும் ;

"பிரதம பரீட்சகர்" என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கப்பற்றலைவர்கள், மற்றும் கப்பற்றளத் திணைக்கள ஆளணியினரின் பிரதம பரீட்சகர் அல்லது பொறியியல் திணைக்கள ஆளணியினரின் பிரதம பரீட்சகர் எனப் பொருள்படும்;

"பிரதம கப்பற்றுணைத் தலைவர்" என்பது, கப்பற்றலைவர் பதவித் தரத்திற்கு அடுத்த பதவித் தரத்தைச் சேர்ந்தவரும், கப்பற்றலைவர் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் கப்பலில் ஆணை, கட்டுப்பாடு அல்லது பொறுப்பு அவர்மீது சார்ந்துள்ளவருமான கப்பற்றள அலுவலர் எனப் பொருள்படும் ;

"இரசாயனத் தாங்கி கப்பல்கள்" என்பது, சர்வதேச இரசாயனப் பொதிக் கோவையின் 17ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ உற்பத்திப் பொதியைக் காவிச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்டு அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும் ;

''நடைமுறைக் கோவை (நமுகோ)'' என்பது, எந்தப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவசியமாகத் திருத்தப்படக்கூடுமோ அந்தப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கடலோடிகளின் கடல்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றிதழ் தேவைப்பாடுகள் அடங்கிய அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு ஆவணம் அல்லது கைநூல் எனப் பொருள்படும் ;

''கம்பனி'' என்பது, கப்பற் சொந்தக்காரர் என அல்லது கப்பற் சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுப் பொறுப்பை ஏற்று, அத்தகைய பொறுப்பை ஏற்றவுடன், இவ்வொழுங்குவிதியினால் கம்பனிமீது விதிக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்க உடன்பட்டுள்ளவருமான ஆள் அல்லது வேறு ஏதேனும் ஸ்தாபனம் எனப் பொருள்படும் ;

''சமவாயம்'' என்பது, 1978, யூலை 7ஆந் திகதியன்று கடலோடிகளின் பயிற்சி மற்றும் சான்றளித்தல் பற்றிய சர்வதேச மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 1984, ஏப்பிறல் 28ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதும் 1978ஆம் ஆண்டின் கடலோடிகளின் பயிற்சிக்கும் சான்றளித்தலுக்கும் காவல் பேணலுக்கும் எஸ். ரிசிடபிள்யூ நியமங்கள் பற்றிய சர்வதேச சமவாயம் என்று பொருளாகும். இது அடுத்துவரும் எல்லாத் திருத்தங்களையும் உள்ளடக்குகின்றது.

''அபாயகரமான கப்பற்சரக்கு'' என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்–

(அ) பெருமளவிலான மசகு பெற்றோலியம் அல்லது அதனிலிருந்து பெறப்படும் எவையேனும் துணை உற்பத்திப் பொருட்கள் ;

(ஆ) சர்வதேச வாயுவைக் காவிச்செல்லும் கோவையின் 19ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ வாயு அல்லது வேறு உற்பத்திப்பொருள் ;

(இ) சர்வதேச கப்பலில் சரக்கு ஏற்றிச்செல்லும் இரசாயனக் கோவையின் 17ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ உற்பத்திப்பொருள்.

''கப்பற்றள அலுவலர்'' என்பது, 2010ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறான சமவாயத்தின் IIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தகைமைபெற்ற கப்பற்போக்குவரத்து அலுவலர் எனப் பொருள்படும்;

''கப்பற்றள அலுவலர் பயிலிளவல்'' என்பது, கப்பற்றள அலுவலராக வருவதற்கென பயிற்சி பெறும் ஆள் எனப் பொருள்படும்;

''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்பது, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

''ஆவணச் சான்று'' என்பது, சமவாயத்தின் இயைபான தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என கூறுவதற்குப் பயன்படும் தகுதிச்சான்றிதழ் அல்லது தேர்ச்சிச்சான்றிதழ் தவிர வேறு ஆவணம் எனப் பொருள்படும்

''சேறு வாரும் கருவி பொருத்தப்பட்ட கலம்'' என்பது, கால்வாய்களையும், துறைமுகங்களையும் ஆழப்படுத்துவதற்கும் நீரின் கீழ்மட்டத்திலுள்ள மணற் திட்டுகள் உலோகச் சலாகைகள் போன்ற முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்ற அகழ்ந்தெடுக்கும் பொறித்தொகுதி பொருத்தப்பட்ட இயந்திரப் பொறியினால் இயக்கப்படும் கப்பலொன்று என்று பொருள்படும்;

''மின் இயக்க தொழில்நுட்ப அலுவலர்'' என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/6 இன் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்;

''மின் இயக்க தொழில்நுட்ப கப்பற்றுணைத் தலைவர்'' என்பது, சமவாயத்தின் ஒழுங்குவிதி III/ 7 இன் ஏற்பாடுகளுக்கிணங்கத் தகைமைபெற்ற கப்பற்றுணைத்தலைவர் ஒருவர் எனப் பொருள்படும்;

''புறக்குறிப்பு'' என்பது, தகுதியுடைமைச் சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு அமைய விடயத்துக்கேற்ப, கப்பற்றலைவரின் அல்லது அலுவலரின் கடமைகளை அவர் நிறைவேற்றுவதற்கு அவருக்கு அதிகாரத்தை வழங்கும் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் அல்லது சான்றிதழ் ஒன்றை ஏற்றங்கீகரித்தல் என்பவற்றை அத்தாட்சிப்படுத்தல் எனப் பொருள்படும்;

''பொறியியல் அலுவலர்'' என்பது, 2010ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான சமவாயத்தின் IIIஆம் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தகைமைபெற்ற அலுவலர் எனப் பொருள்படும்;

''பொறியியல் அலுவலர் பயிலளவில்'' என்பது, பொறியியல் அலுவலராகப் பயிற்சிபெறும் ஆளொருவர் எனப் பொருள்படும்;

*"பரீட்சகர்" என்பது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கப்பற்றலைவர்கள், கப்பற்றளத் திணைக்கள ஆளணியினரின் அல்லது பொறியியல் திணைக்கள ஆளணியினரின் பரீட்சகர் எனப் பொருள்படும்;*

*"மீன்பிடிக் கலம்" என்பது, கடலில் மீன்களையும் ஏனைய உயிர்வாழ் மூலவளங்களையும் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கப்பல் எனப் பொருள்படும்;*

*"பணி" என்பது, கப்பற்றொழிற்பாட்டுக்கும், கடலில் செல்பவர்களின் உயிர்ப்பாதுகாப்புக்கும், கடலோர சூழல் பாதுகாப்பிற்கும் அவசியமென எஸ்ரிசிடபிள்யூ கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு தொகுதிப் பணிகளும், கடமைகளும் பொறுப்புக்களும் எனப் பொருள்படும்;*

*"ஜிஎம்டிஎஸ்எஸ்" என்பது, உலகளாவிய கடலோர இடர்கள், பாதுகாப்பு முறைமை எனப் பொருள்படும்;*

*"ஜிரி" என்பது, முழுமொத்த தொன்னிறை எனப் பொருள்படும்;*

*"சர்வதேச சாதனங்கள்" என்பது, சர்வதேசச் சமவாயங்களுக்கான திறத்தவரொருவராகக் கடலில் செல்பவர்களின் உயிர்ப்பாதுகாப்புக்கும், கடலோரத் தீழ்ப்பைத் தடுப்பதற்குமென இலங்கையினால் சட்டமாக்கப்பட்ட ஏற்பாடுகள் எனப் பொருள்படும்;*

*"ஐஎஸ்பிஎஸ் கோவை" என்பது, சர்வதேச கடலோர ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறான 1974 (எஸ்ஓஎல்ஏஎஸ்) கடலில் செல்பவர்களின் உயிர் பாதுகாப்புக்கான சர்வதேச சமவாயத்திற்கு ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களின் மாநாட்டின் 2 ஆவது தீர்மானத்தின்மூலம் 2002 டிசெம்பர் 12ஆந் திகதியன்று எற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்பு (ஐஎஸ்பிஎஸ்) எனப் பொருள்படும்;*

*"சர்வதேசக் கப்பல் பயணம்" என்பது, கரையோரத்தை அண்மித்த பயணங்கள் தவிர வேறு கப்பல்களின் பயணம் எனப் பொருள்படும்;*

*"திரவ வாயுத் தாங்கிக் கப்பல்" என்பது, சர்வதேச வாயு காவிக் கோவையின் 19ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவ வாயுவை அல்லது ஏனைய உற்பத்திப் பொருளை பொதியாக்க காவிச் செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டு அல்லது ஏற்றிசைவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும்;*

*"கப்பற்றலைவர்" என்பது, ஒரு கப்பலிற்கு ஆணையிடும் ஆள் எனப் பொருள்படும்;*

*"மாதம்" என்பது, ஒரு பஞ்சாங்க மாதம் அல்லது ஒரு மாதத்திற்குக் குறைந்த காலப்பகுதிகளைக் கொண்ட முப்பது நாட்கள் எனப் பொருள்படும்;*

*"கரையோரத்தை அண்மித்த பயணங்கள்" என்பது, பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய இடங்களிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து சொல்லப்பட்ட நாடுகளில் உள்ள வேறு ஏதேனும் துறைமுகத்திற்கான அல்லது இடத்திற்கான கரையோர வியாபாரத்தில், கடற் பயணங்களின்போது நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான பாதுகாப்பான துறைமுகங்களின் அண்மைத் தூரம் சம்பந்தப்பட்ட குறிப்பீடுகளுக்கு அமைவாக ஈடுபட்டுள்ள கப்பல்களின் பயணங்கள் எனப் பொருள்படும்;*

*"அலுவலர் " என்பது, தேசிய சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது கூட்டு உடன்படிக்கையினால் அல்லது வழக்காறினால் அத்தகைய பதவிப்பெயர் இல்லாமையினால் கப்பற்றலைவர் தவிர்ந்த வேறு பணிக்குழுவின் ஒரு உறுப்பினர் எனப் பொருள்படும்;*

*"எண்ணெய்த் தாங்கிக் கப்பல" என்பது, பெற்றோலியத்தையும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களையும் பொதியாகக் காவிச்செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எனப் பொருள்படும்;*

*"ஒழுங்கமைப்பு"என்பது, சர்வதேச கடலோர ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்;*

*"உந்துதல் சக்தி" என்பது, கப்பலின் எல்லாப் பிரதான உந்துபொறித் தொகுதியின் மொத்த ஆகக்கூடிய தொடர்ந்து கணிக்கப்பட்ட சக்தி வெளிப்படுத்துகையென கப்பலின் பதிவுச் சான்றிதழில் அல்லது வேறு உத்தியோகபூர்வ ஆவணத்தில் காணப்படுகின்ற கிலோவாற்றுக்கள் கொண்ட உந்து பொறி எனப் பொருள்படும்;*

"வானொலிக் கடமைகள்" என்பது, பொருத்தமானவிடத்து, வானொலி ஒழுங்குவிதிகளுக்கும் திருத்தப்பட்டவாறான 1974 (எஸ்ஓஎல்ஏஎஸ்) கடலில் உயிர்பாதுகாப்புக்காகச் சர்வதேசச் சமவாயத்திற்கும், பணிப்பாளர் தலைமையதிபதியின் தற்றுணிபின்படி சர்வதேச கடலோர ஒழுங்கமைப்பின் இயைபான விதப்புரைகளுக்கும் இணங்க, காவல் பேணல், தொழில்நுட்ப பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்களை உள்ளடக்கும்;

"வானொலி இயக்குநர்" என்பது, வானொலி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் அல்லது ஏற்றங்கீகரிக்கப்படும் பொருத்தமான சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கும் ஓர் ஆள் எனப் பொருள்படும்;

"கப்பற்றுணையாளர்" என்பது, கப்பற்றலைவர் அல்லது அலுவலர் தவிர்ந்த கப்பற் பணிக்குழுவின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்;

"ஒழுங்குவிதிகள்" என்பது, 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் பேணல்) ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்;

"பயணிகள் கப்பல்" என்பது, 1974 (எஸ்ஓஎல்ஏஎஸ்) இல் திருத்தப்பட்டவாறான கடலில் உயிர்பாதுகாப்புக்கான சர்வதேச சமவாயத்தில் வரையறுக்கப்பட்டவாறு பயணிகள் கப்பல் ஒன்று எனப் பொருள்படும்;

"றோ-றோ பயணிகள் கப்பல்" என்பது, 1974 (எஸ்ஓஎல்ஏஎஸ்) இல் திருத்தப்பட்டவாறான கடலில் உயிர் பாதுகாப்புக்கான சர்வதேச சமவாயத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறன றோ-றோ சரக்கு இடவெளிகள் அல்லது விசேட வகுதி இடவெளிகள் கொண்ட பயணிகள் கப்பல் எனப் பொருள்படும்;

"கடல் செல் கப்பல் சேவை" என்பது, சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு அல்லது மீளச் செல்லுபடியாக்குவதற்கு அல்லது வேறு தகைமைகளுக்கு இயைபான ஆழ்கடல் பயணக் கப்பல் ஒன்றில் கப்பல் தளம் மீதான சேவை எனப் பொருள்படும்;

"கடல் செல் கப்பல்" என்பது, பிரத்தியேகமாக உள்நாட்டு நீர்ப்பரப்புகளில் அல்லது காப்பளிக்கப்பெற்ற நீர்ப்பரப்புகளுக்கு நெருக்கமாய் அண்டியதாக அமைந்த நீர்ப்பரப்புகளில் கடற்செலவு செய்கின்ற கப்பல் தவிர்ந்த வேறு வியாபாரக் கப்பல் எனப் பொருள்படும்.

"இரண்டாவது பொறியியல் அலுவலர்" என்பது, பிரதான பொறியியல் அலுவலர் இயலாது போனால், கப்பலின் இயந்திரப் பொறி உந்துகைப் பொறுப்பு மற்றும் கப்பலின் எந்திர மின்சார நிறுவகங்களின் தொழிற்பாடும் பராமரிப்பும், எப்பொறியியல் அலுவலர்மீது சாருமோ, அவ்வலுவலரும் பிரதான பொறியியல் அலுவலருக்குப் பதவிவரிசையில் அடுத்துவருகின்றவருமான பொறியியல் அலுவலர் எனப் பொருள்படும்;

"பாதுகாப்புக் கடமைகள்" என்பது, 1974 கடலில் செல்பவர்களின் பாதுகாப்பு வாழ்க்கைக்கான (எஸ்ஓஎல்ஏஎஸ்) சர்வதேச சமவாயத்தின் XI-2ஆம் அத்தியாயத்தினால் வரையறுக்கப்பட்டதும் சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதி பாதுகாப்பு (ஐஎஸ்பிஎஸ்) கோவையினால் திருத்தப்பட்டவாறானதுமான கப்பலிலுள்ள அனைத்து பாதுகாப்புப் பணிகளையும் கடமைகளையும் உள்ளடக்கும்;

"கப்பல் பாதுகாப்பு அலுவலர்" என்பது, கப்பலின் பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்துதலும் பேணுதலும் அத்துடன் கம்பனி பாதுகாப்பு அலுவலருடனும் துறைமுக வசதி பாதுகாப்பு அலுவலர்கள் உள்ளடங்கலாக கப்பலின் பாதுகாப்புக்கு பொறுப்புடையவராக கம்பெனியினால் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கப்பற்றலைவருக்கு வகைசொல்ல வேண்டியவரான கப்பலின் ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

"எஸ்ரிசிடபிள்யூ கோவை" என்பது, 1995ஆம் ஆண்டின் மாநாட்டு தீர்மானம் 2 இனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறும் ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக் கூடியவாறானதுமான கடலோடிகளின் பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்பேணல் கோவை எனப் பொருள்படும்;

"தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்பது, சர்வதேச தொலைத்தொடர்பு சமவாயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள வானொலி, ஒழுங்குவிதிகளுக்குப் பொறுப்பான, 1996ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை எனப் பொருள்படும்;

"வியாபாரக் கப்பல்" என்பது, கப்பற்சரக்கை, பயணிகளை அல்லது கால்நடைகளைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படும் கடல்செல் கப்பல் எனப் பொருள்படும்;

"இழுவைப்படகு" என்பது, கடலில் துறைமுகங்களுக்குள்ளேயும் வெளியேயும், நதிகளில் அத்துடன் கலத்துறைகளில் கப்பல்களை இழுப்பதற்கு அல்லது அவற்றிற்கு உதவிபுரிவதற்கு அல்லது வள்ளங்களை, சரக்கு ஏற்றியிறக்கும் படகுகளை அல்லது வேறு சிறிய கலங்களை இழுப்பதற்கு அல்லது தள்ளுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற, கப்பற் சரக்கு கொண்டுசெல்ல இடமெதுவும் இல்லாது குறைந்த தொன் எடையுள்ள இயந்திரப் பொறியினால் உந்தப்படும் கப்பலொன்று எனப் பொருள்படும்;

"பல்கலைக்கழகங்கள் சட்டம்" என்பது, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

*ஏற்புடைமை :*

5. (1) இவ்வொழுங்குவிதிகள் பின்வருவோருக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் கொடியின்கீழ் பதிவுசெய்யப்படட மீன்பிடிக் கலங்களும் வியாபாரத்தில் ஈடுபடாத பொழுதுபோக்குப் படகுகளும் தவிர்ந்த கடலில் செல்லும் கப்பல்கள் அனைத்தும்;

(ஆ) தொடர்ச்சியான வெளியேறல் சான்றிதழை அல்லது தகுதிச் சான்றிதழை அல்லது புறக்குறிப்பை அல்லது வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் சான்றிதழை அல்லது ஆவணத்தை உடைமையில் வைத்திருக்கும் கடலோடிகள் அனைவரும்; அத்துடன்

(இ) ஏனைய கொடிகளைக் கொண்ட கப்பல்கள், இவ்வொழுங்குவிதியின்கீழ் வெளிநாட்டு தொடர்ச்சியான வெளியேறல் சான்றிதழ்களை, தகுதிச்சான்றிதழ்களை, புறக்குறிப்புக்களை அல்லது வேறேதேனும் சான்றிதழ்களை அல்லது ஆவணங்களை உடைமையில் வைத்திருக்கும் கடலோடிகள்.

(2) இவ்வொழுங்குவிதிகள், இவ்வொழுங்குவிதிக்கான அட்டவணை "அ" மற்றும் அட்டவணை "ஆ" வில் முறையே தரப்பட்டவாறான பொறுப்பு மட்டங்களிலான பணிகளை அடிப்படையாகக்கொண்டு தகுதி நியமங்களைத் தாபிக்கும்.

*அட்டவணை "அ"*

***பணிகள்***

1. கடற் போக்குவரத்து
2. சரக்கு கையாளுகையும், தொகுத்துவைத்தலும்
3. கப்பற் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்துதலும், கப்பலில் உள்ள ஆட்களைக் கவனித்தலும்
4. கடல் பொறியியல் முறை
5. மின்சார, மின்னியக்க, கட்டுப்பாட்டுப் பொறியியல் முறை
6. பராமரிப்பும், பழுதுபார்த்தலும்
7. வானொலித் தொடர்புமுறைகள்.

*அட்டவணை "ஆ"*

***பொறுப்பு மட்டங்கள்***

1. முகாமைத்துவ மட்டம் (கப்பற்றலைவர், பிரதம கப்பற் துணைத்தலைவர், பிரதம பொறியியலாளர், இரண்டாவது பொறியியலாளர்)

2. தொழிற்பாட்டு மட்டம் (கப்பற் போக்குவரத்து, காவல் காத்தல் அலுவலர், பொறியியல் காவல் காத்தல் அலுவலர், மின்னியக்கத் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் வானொலி தொழிற்பாட்டாளர்).

3. ஆதார மட்டம் (இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம், இயலக்கூடிய கடலோடி எந்திரம், மின்னியக்க தொழில்நுட்ப கப்பற்றுணையாளர் மற்றும் காவல் பேணும் கப்பற்றுணையாளர).

*பணிப்பாளர் தலைமையதிபதியின் பங்கு :*

6. பணிப்பாளர் தலைமையதிபதி அப்போதைக்கு வலுவிலுள்ள, இலங்கைச் சட்டங்களின் கட்டுக்கோப்பினுள் இவ்வொழுங்குவிதிகளின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாகவிருப்பார். சமவாயத்தின்கீழ் தகுதிச்சான்றிதழ்கள் மற்றும் புறக்குறிப்பிடுதல்கள் என்பன பணிப்பாளர் தலைமையதிபதியினால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

*சான்றுப்படுத்தல் வகுப்புகளும், புறக்குறிப்புகளும் :*

7. (1) பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக, கப்பற்றளத் திணைக்களத்தில் பின்வரும் வகுப்பினவான சான்றிதழ்களையும், புறக்குறிப்புகளையும் வழங்குதல் வேண்டும்:-

*தகுதிச்சான்றிதழ்கள் :*

(அ) தகுதிச்சான்றிதழ் - கப்பற்றலைவர்;
(ஆ) தகுதிச்சான்றிதழ் - பிரதம கப்பற் துணைத் தலைவர்;
(இ) தகுதிச்சான்றிதழ் - கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;
(ஈ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் பிரதான தலைவர்;
(உ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் பிரதம கப்பற் துணைத்தலைவர்;
(ஊ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் தலைவர்;
(எ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களின் தலைவர்;
(ஏ) தகுதிச்சான்றிதழ் - கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள கடற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்;
(ஐ) கப்பற் துணைச் சேவைச் சான்றிதழ் - 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேல் கடல்செல் கப்பல் ஒன்றின் கப்பற் போக்குவரத்துக் காவலின் ஒரு பகுதியாக அமையும் கப்பற் துணையாளர்;
(ஒ) இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம் - 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் ஆழ்கடல் பயணக் கப்பல் ஒன்றின்மீது சேவையாற்றுகின்ற இயலக்கூடிய கடலோடி கப்பற்றளம்;

*புறக்குறிப்புகள் :*

(ஓ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள (என்சிவி) 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கப்பற்றலைவர்களுக்கான புறக்குறிப்பு;
(ஔ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள (என்சிவி) 3000 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரதம கப்பற் துணைத்தலைவருக்கான புறக்குறிப்பு;
(க) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள (என்சிவி) 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவான கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கப்பற்றலைவருக்கான புறக்குறிப்பு.

(2) கப்பற்றள அலுவலர்களின் விடயத்தில் பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் புறக்குறிப்புகளைச் செய்தல் வேண்டும்:-

(அ) தகுதிச்சான்றிதழ்கள் (ஆ) மீது (ஓ) புறக்குறிப்பு;

(ஆ) தகுதிச்சான்றிதழ்கள் (இ) மீது (ஔ மற்றும் க) புறக்குறிப்பு;

(இ) தகுதிச்சான்றிதழ் (உ) மீது (க) புறக்குறிப்பு.

ஆயின், புறக்குறிப்பு ஒன்றை வைத்திருக்கும் ஒவ்வொரு கப்பற்றள அலுவலரும் உயர் சான்றிதழ் ஒன்றின் வழங்கலுக்குத் தகைமைபெறும்போது, அப்புறக்குறிப்பை அச்சான்றிதழுக்கு மாற்ற உரித்துடையவராதல் வேண்டும்.

(3) வானொலித் தொடர்புகளும் வானொலி ஆளணியினர் புறக்குறிப்புகளும்.

1. பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய, வானொலிக் கடமைகளுக்காக, புறக்குறிப்புக்களின் பின்வரும் வகுப்புக்களை வழங்கலாம்:-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஏற்புடையற்பாலதான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அல்லது வேறேதேனும் பொருத்தமான அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஜிஎம்டிஎஸ்எஸ் வானொலி இயக்குநர்களின் சான்றிதழ்களுக்கான புறக்குறிப்பு;

(ஆ) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஜிஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட வானொலி இயக்குநர்களின் சான்றிதழுக்கான புறக்குறிப்பு.

2. ஜிஎம்டிஎஸ்எஸ் சான்றிதழ்கள் மேல் உள்ளவாறாக புறக்குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி இலங்கைக் கப்பல்களில் சேவையாற்றுவதற்குச் செல்லுபடியானதாகாது.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக, பொறியியல் திணைக்களத்தில், பின்வரும் வகுப்பினவான சான்றிதழ்களையும், புறக்குறிப்புகளையும் வழங்குதல் வேண்டும்:-

*தகுதிச்சான்றிதழ்கள் :*

| | | |
|---|---|---|
| (அ) தகுதிச்சான்றிதழ் | - | பிரதம பொறியியல் அலுவலர்; |
| (ஆ) தகுதிச்சான்றிதழ் | - | இரண்டாவது பொறியியல் அலுவலர்; |
| (இ) தகுதிச்சான்றிதழ் | - | பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்; |
| (ஈ) தகுதிச்சான்றிதழ் | - | கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோ வோற்றுக்கும் 3000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரதம பொறியியல் அலுவலர்; |
| (உ) தகுதிச்சான்றிதழ் | - | கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோ வோற்றுக்கும் 3,000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இரண்டாவது பொறியியல் அலுவலர்; |
| (ஊ) தகுதிச்சான்றிதழ் | - | கரையோரத்தை அண்மித்த பயணங்களின் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோ வோற்றுக்கும் 3,000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பொறியியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலர்; |
| (எ) கப்பல் துணையாளர் சான்றிதழ் | - | பொறியியல் அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர்; |
| (ஏ) மின்னியக்க தொழில்நுட்ப அலுவலர் | | |
| (ஐ) இயலக்கூடிய கடலோடி எந்திரம் | | |
| (ஒ) மின்னியக்க – தொழில்நுட்ப கப்பற்றுணையாளர் | | |

*புறக்குறிப்புகள் :*

(ஓ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோ வோற்றுக்கும் 3,000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்து சக்தி கொண்ட கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரதான பொறியியல் அலுவலராகக் கடலில் செல்வதற்கான புறக்குறிப்பு;

(ஔ) கரையை அண்மித்த பயணங்களில் (என்சிவி) ஈடுபட்டுள்ள 750 கிலோ வோற்றுக்கும் 3,000 கிலோ வோற்றுக்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியல் அலுவலராகக் கடலில் செல்வதற்கான புறக்குறிப்பு;

பொறியியல் அலுவலரின் விடயத்தில், பணிப்பாளர் தலைமையதிபதி இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்பாட்டுக்கு அமைய பின்வரும் புறக்குறிப்புக்களை ஆக்கலாம்-

(i) தகுதிச்சான்றிதழ் (ஆ) வின்மீது (ஓ) புறக்குறிப்பு;
(ii) தகுதிச்சான்றிதழ் (இ) வின்மீது (ஔ) புறக்குறிப்பு.

ஆயின் புறக்குறிப்பு ஒன்றை வைத்திருக்கும் ஒவ்வொரு பொறியியல் அலுவலரும் உயர் சான்றிதழ் ஒன்று வழங்கப்பெறுவதற்கு தகைமைபெறும்போது, அதே புறக்குறிப்பை அந்தச் சான்றிதழுக்கு மாற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*தகுதிச்சான்றிதழ் :*

(5) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அந்தந்தத் தேவைப்பாடுகளுக்கு அமைய நிர்வாகமானது கடலோடிகளுக்குத் தேவைப்படுகின்ற தகுதிச்சான்றிதழ்களை வழங்கலாம். அத்தியாயம் II, III, V/1-1, அத்துடன் ஏ/1-2 என்பவற்றின்கீழ் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்களுக்கான தகுதிச்சான்றிதழ்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் மட்டும் வழங்கப்படுதல் வேண்டும். வேறு ஒழுங்குவிதிகளின்கீழ் தகுதிச்சான்றிதழ்களை வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களுக்குக் கையளிக்கப்படலாம்.

*நுழைவு நிபந்தனைகளும் தகவுத் தேவைப்பாடுகளும் :*

8. (1) தகுதிச்சான்றிதழ் அல்லது புறக்குறிப்புக்கான ஒவ்வொரு தேருநரும், பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) அவரது பிறப்புச்சான்றிதழ்;

(ஆ) அவர் பதவி வகிக்கின்ற தன்மையில் அவர் தொடர்பிலான கண்பார்வை நியமங்கள் பரிசோதனைச் சான்றிதழொன்று. இது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய பரிசோதனையை நடாத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலரினால் நடாத்தப்படும். இப்பரிசோதனையானது சமவாயத்தின் அட்டவணை ஏ-1/9 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்;

(இ) அவர் வகிக்கின்ற பதவியில் அவர் தொடர்பிலான மருத்துவ உடற்தகுதிப் பரிசோதனைச் சான்றிதழ் ஒன்று. இது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய பரிசோதனையை நடாத்துவதற்கென அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவரினால் நடாத்தப்பட்டிருத்தல் வேண்டும். இப்பரிசோதனையானது சமவாயத்தின் அட்டவணை பீ-1/9 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அலுவலர்களின் விடயத்தில் விண்ணப்பத் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட கப்பலில் சேவையாற்றுதல் தொடர்பிலான நற்குணம், நன்னடத்தை, மதுவிலக்கிய நிலை, அனுபவம் பற்றிய நற்சான்றிதழ்கள், அத்தகைய சான்றிதழ்கள் பிரதமப் பரிசோதகர் வேறு விதமாக அனுமதித்தால் தவிர, அச்சேவை எக்கப்பலில் புரியப்பட்டதோ அக்கப்பலின் கப்பற்றலைவரினால் அல்லது பிரதம பொறியியலாளரினால் அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட கப்பற்றொழில் பிரதிநிதியினால் ஒப்பமிடப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) சேறு வாரும் கருவிகள், ஆராய்ச்சிக் கலன்கள், மீட்புக்கலன்கள், இழுவைப் படகுகள் போன்ற வர்த்தகக் கப்பல்கள் அல்லாதவற்றில் தகைமை பெறும் சேவை அல்லது பயிற்சி நடாத்தப்பட்டிருக்குமிடத்து அச்சான்றிதழ் அத்தகைய கலங்களிலான சேவைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்கும்.

(3) றோ-றோபயணிகள் கப்பல்களில் அல்லது பயணிகள் கப்பல்களில் அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில் அபாயகரமான சரக்கு எனக் குறித்துரைக்கப்பட்ட பெருமளவு சரக்கைக் கொண்டுள்ள கப்பல்களில் சேவையாற்றும் கப்பற்றலைவர்களும், கப்பற்றள அலுவலர்களும், பொறியியல் அலுவலர்களும், கப்பற்றுணையாளர், அந்தந்தத் தகுதிச்சான்றிதழுக்கும் பொதுவாகத் தேவைப்படும் தகைமைகளை வைத்திருப்பதோடு, மேலதிகமாக, இதனகத்து 12ஆம் அல்லது 13ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட மேலதிக தேவைப்பாடுகளையும் திருப்தி செய்தல் வேண்டும்.

*கப்பற்றளத் திணைக்களத்தில் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிக்கும், தகைமைகளுக்குமான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்.*

9. (1) 500 மொத்தத் தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் போக்குவரத்து காவலிற்குப் பொறுப்பான அலுவலராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கு தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்-

(அ) தகைமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவில் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 500 மொத்தத்

தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பல் தளத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அந்தக் கப்பல் பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும் அல்லது வேறு வகையில் 36 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அல்லது

கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத் தொன்னுக்குக் குறையாத கப்பல்களில் கப்பற் போக்குவரத்துக் காவலின் பொறுப்பான அலுவலராகத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(இ) தேவையான கடல்செல் சேவையின்போது 06 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு கப்பற்றலைவரின் அல்லது தகைமைபெற்ற அலுவலரின் மேற்பார்வையின்கீழ் பாலம் காவல் காத்தல் கடமைகளை நிறைவேற்றியிருத்தல் வேண்டும் ;

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல் வேண்டும் அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1 அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி , பொது இயக்குநர்களது சான்றிதழ் (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி, மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(2) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதான கப்பற்றுணைத் தலைவராக தகைமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும்-

(அ) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலராக தகுதிச்சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; 06 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 4-2ஆம் அட்டவணைக்கிணங்க குறித்துரைக்கப்பட்டதான மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல்; அத்துடன்

(ஈ) 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம கப்பற்றுணைத் தலைவருக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- II/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி, மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(3) கப்பபற்றலைவராக தகைமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்காக தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) பிரதம கப்பற்றுணைத்தலைவராக பொருத்தமான தகுதிச் சான்றிதழ் வைத்திருத்தல்;

(ஆ) பிரதம கப்பற்றுணைத் தலைவராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருக்கும் அதேவேளையில், கப்பற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக இருபத்துநான்கு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல். எவ்வாறாயினும், அத்தகைய கடற்செல் சேவையில் 500 மொத்தத்தொன் அல்லது

அதற்கு மேற்பட்ட கப்பலில் 6 மாதங்களுக்குக் குறையாது 3000 அல்லது அதற்கு மேற்பட்ட கப்பலில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் கொண்டிருத்தலும் பிரதம கப்பற்றுணைத் தலைவராக சேவையாற்றியிருந்தால் மேற்கூறிய காலப்பகுதி பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறையாதவாறு அல்லது சரிசமவிகிதப்படி குறைக்கப்படலாம்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல்;

(ஈ) கப்பற் கையாளுகை/ தூண்டி இழுத்தல் என்பற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்புப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல்;

(உ) 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம கப்பற்றலைவருக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/2ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான தூண்டற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப்பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(4) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் போக்குவரத்து காவலிற்குப் பொறுப்பான அலுவலராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கு தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) தகைமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-

(i) கரையோரத்தை அண்மித்த பயணங்களிற்கு தோதான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பிரிவு ஏ-II/1இல் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான கப்பல் பயிற்சி உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக பதினெட்டு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு 500 மொத்த தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் ; அல்லது வேறு வகையில் முப்பத்தாறு மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும். 500 மொத்தத்தொன்னுக்குக் குறைந்த கப்பல் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட கடற்செல் சேவையைப் புரிந்துள்ள தேருநர் ஒருவர், உரிமைகோரப்பட்ட உண்மையான கடற்செல் சேவையின் மூன்றில் இரண்டு பங்கில் மதிப்பிடப்படல் வேண்டும்; அத்துடன்

(ii) தேவையான கடற்செல் சேவையின்போது ஆறு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு கப்பற்றலைவரின் அல்லது தகைமைபெற்ற அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பாலம் காவல்காத்தல் கடமைகளைப் புரிந்திருத்தல் வேண்டும்;

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1 அட்டவணைக்கிணங்க) விரைவு மீட்புப் படகுகள் தவிர வேறு உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி பொது இயக்குநர்களது சான்றிதழ், (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ். ரி. சி. டபிள்யூ கோவையின் ஏ- VI/ 5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பல் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலருக்காக எஸ். ரி. சி. டபிள்யூ கோவையின் ஏ-II/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

ஆயினும், 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கடல்செல் கப்பல்களில் கப்பற்றள கடமைகளின் சேவைக்காலத்தின் மூன்றில் இரண்டு பாகமானது இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக கடல்செல் சேவையாகக் கருதப்படலாமென்பதுடன் ஒவ்வொரு தேருநரும் 500 மொத்தத்தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கடல்செல் கப்பல்களில் கப்பற்றள கடமைகளை மேலும் குறைந்த பட்சம் 12 மாதங்களுக்குப் புரிந்திருத்தல் வேண்டும்.

(5) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பலில் பிரதம கப்பற்றுணைத் தலைவராகத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல்;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சிக்கு உடன் முற்போந்த 12 மாதங்களினுள் குறைந்த பட்சம் 03 மாத கடல்செல் சேவை உள்ளடங்கலாக பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல்;

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - VI/4-2 ஆம் அட்டவணைக்கிணங்க கப்பலில் மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என தகுதிச்சான்றிதழ் வழங்குவதற்காக ஆவணச்சான்று காண்பித்தல்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்கும் 3000 மொத்தத்தொன்னுக்கும் இடைப்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவருக்காக அத்துடன் பிரதம கப்பற்றுணைத்தலைவருக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - II/2 ஆம் பிரிவில் காட்டப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதற்கான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை, மதிப்பீட்டைப் பூர்த்தி செய்திருத்தல்.

(6) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 3000 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற்றலைவராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கு தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் பிரதான துணைத் தலைவராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 500 மொத்தத்தொன்னுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற் போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக 24 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல் சேவையைக் கொண்டிருத்தல். எவ்வாறாயினும் அத்தகைய கடல்செல் சேவைக் காலப்பகுதியில் 12 மாதங்களுக்குக் குறையாமல் 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம கப்பற்றுணைத்தலைவராக சேவையாற்றியிருத்தல் ; மேற்கூறிய காலப்பகுதி 18 மாதங்களுக்குக் குறையாததாகவோ அல்லது சரிசமவிகிதப்படியோ குறைக்கப்படலாம்.

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன் முதல் 3000 மொத்தத்தொன்னுக்கு இடைப்பட்ட கப்பல்களில் கப்பற்றலைவருக்கு எஸ்ரிசிடபிள்யூ கோவயின் ஏ-II/2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்;

(ஈ) கப்பல் கையாளுகை/தூண்டியிழுத்தல் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஊக்கப்படுத்தற் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(7) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற் போக்குவரத்து காவலுக்குப் பொறுப்பான அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(அ) தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் ;-

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) ஒன்றில் கடலுக்கு செல்லுமுன்னரான அல்லது கப்பலில் 24 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி; இது 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றுக்கான கடல்செல் சேவைக் காலப்பகுதியையும் 80 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பாலம் காவல் பேணலுடன் இணைந்துள்ள கடமைகளை நிறைவேற்றுகின்ற கடல்செல் காலப்பகுதி குறைந்தபட்சம் 12 மாதங்களில் 6 மாதமாவது சேவையாற்றியுள்ளார் என்பதையும் உள்ளடக்குகிறது;

(ii) 80 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் 36 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி கப்பற்றள திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை.

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1 அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-ஏஐ/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி பொது இயக்குநர்களது சான்றிதழ் (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலருக்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- II/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(8) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கப்பற்றலைவராகத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்குத் தேருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 80 மொத்தத்தொன்னைவிட அதிகமான கப்பல்களில் கப்பற்போக்குவரத்துக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-2ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவக் கவனிப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியிலான தேர்ச்சித்திறனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல்;

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 500 மொத்தத்தொன்னுக்குக் குறைவான கப்பல்களில் கப்பற்றலைவருக்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- II/3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

ஆயினும், இழுவைப்படகு சேவைக்கு மட்டுமான மட்டுப்படுத்தலுக்கு அமைந்தவாறு புறக்குறிப்பிடப்பட்ட சான்றிதழுக்கு ஏற்புடையதாகின்ற தேருநர் ஒருவர் கடல்செல் இழுவைப்படகுகளில் தகைமைவாய்ந்த கடல்செல் காலப்பகுதியில் குறைந்தபட்சம் அரைவாசியையும் மீதியை இழுவைப்படகு தவிர்ந்த வேறு கடல்செல் கப்பல்களிலும் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

(9) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் போக்குவரத்து காவல்காத்தலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதிருத்தல்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்-

(i) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்ட பாலம் காவல் காத்தலுக்கு இயைபான ஆகக்குறைந்தது 09 மாத பயிற்சியும் அனுபவமும்; அல்லது

(ii) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் 06 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைக் காலப்பகுதியும், 3 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் காலப்பகுதியும்; அல்லது

(iii) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் கப்பற்றளத்தில் இயைபான தன்மையில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை.

ஆயின், பரீட்சைத் திகதிக்கு முற்போந்த 05 ஆண்டுகளின்போது 12 மாத கடல்செல் சேவையைக் கொண்டிராத கப்பற்றுணையாளர் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட புதியவர்களுக்கான விசேட கற்கைநெறியைத் தொடருதல் வேண்டும். கப்பற்றத் திணைக்களத்துக்கு இயைபற்ற ஆரம்பப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள கப்பற்றுணையாளர்கள், பரீட்சைத் திகதிக்கு முற்போந்த 05 ஆண்டுகளின்போது கப்பற்றளத் திணைக்களத்தில் இயைபான தன்மையில் குறைந்தபட்சம் 18 மாதங்கள் கடல் சேவையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தரமுயர்வுக் கற்கைநெறியையும் தொடருதல் வேண்டும்.

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர் வாழ் நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-2 அட்டவணைக்கிணங்க) தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-1 ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்தல்.

(10) 500 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் இயலக்கூடிய கடலோடி கப்பற்றளமாக தேர்ச்சிச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காக தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்-

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்காக பரீட்சைத் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டும் :-

(ஆ) கப்பற்போக்குவரத்து காவலின் பாகமாக அமையும் கப்பல் ஆணையாளராக சான்றளிப்பதற்கான தேவைப்பாட்டைத் திருப்தி செய்தல்;

(இ) கப்பற்போக்குவரத்து காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சேவையாற்றுவதற்கான தகைமைபெற்ற அதேவேளை 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு கடல்செல் கப்பலில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றின் பாகமாக கப்பற்றளத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அல்லது 06 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அல்லது

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-1 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர் வாழ் நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-2 அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும், தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3 ஆம் அட்டவணைக்கிணங்க ஆரம்ப முதலுதவி (எல்ரிசிடபிள்யூ கோவையின் VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ் ரி சி டபிள்யூ கோவையின் கோவையின் ஏ- VI/2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-1 ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 6 தொடக்கம் 8ஆம் பந்திகளில் ஏ- VI/6ஆம் பிரிவிற்கிணங்க) பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட பாதுகாப்புக் கடமைகளுடனான கடலோடிகள்.

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதிகள் வலுவிற்குவரும் முற்போந்த கடைசி 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு கப்பல் போக்குவரத்துக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் ஒருவராக தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்ற பின்னர் கப்பற்றளத் திணைக்களத்தில் இயைபான பதவி ஒன்றில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் அக்கடலோடி இவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளார் என பிரதான பரீட்சகர் கருதலாம்.

*வானொலி தொடர்பு மற்றும் வானொலி ஆளணியினர் :*

10. (1) சமவாயத்தின் IVஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குகைக்காக (ஜிஎம்டிஎஸ்எஸ்) பொது இயக்குநர்களின் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துகின்ற புறக்குறிப்பொன்றை வேண்டுகின்ற தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) புறக்குறிப்பை வழங்குவதற்கான விண்ணப்பத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - IV 2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திப்படுத்துதல்;

(இ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையினால் வழங்கப்பட்டதொரு ஜிஎம்டிஎஸ்எஸ் பொது இயக்குநர்களின் சான்றிதழை வைத்திருத்தல்; அத்துடன்

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1 அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-ஏஐ/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி பொது இயக்குநர்களது சான்றிதழ் (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(2) சமவாயத்தின் IVஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்குகைக்காக ஜிஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட இயக்குநர்களின் சான்றிதழ் ஒன்றை அத்தாட்சிப்படுத்துகின்ற புறக்குறிப்பொன்றை வேண்டுகின்ற தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) புறக்குறிப்பை வழங்குவதற்கான விண்ணப்பத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - IV/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையினால் வழங்கப்பட்டதொரு ஜிஎம்டிஎஸ்எஸ் மட்டுப்படுத்தப்பட்ட வானொலி இயக்குநர்களின் சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல்; அத்துடன்

(ஈ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிளயூ கோவையின் ஏ-VI/2-1 அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி பொது இயக்குநர்களது சான்றிதழ் (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1 ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

*எந்திரத் திணைக்களத்திலுள்ள கடல்சார் பொறியியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக் குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்*

11. (1) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல் ஒன்றில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் பொறியியல் காவல் பொறுப்பு அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் பதவி பெயர் குறிப்பிடப்பட்ட கடமை பொறியியலாளராகத் தகுதிச்சான்றிதழை வழங்குவதற்கு தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதிற்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/1 எனும் பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வதான 36 மாத காலத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கல்வி, பயிற்சி, மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாகப் பிரதம பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் ஆறு மாத எந்திர அறை காவல் காத்தல் சேவை உள்ளடக்கியதாக 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் எந்திரத் திணைக்களத்தின் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல். இதில் கப்பலிலான பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட பதிவேட்டுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 750 கிலோவோற்றிற்கும் 3000 கிலோவோற்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பொறியியல் காவல் பேணலுக்குப் பொறுப்பான அலுவலராக தகுதிச்சான்றிதழைப் பெற்றபின்னர் பிரதம பொறியியலாளரின் அல்லது வேறு சான்றுப்படுத்தப்பட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் ஆறு மாத கால எந்திர அறை காவல் காத்தல் சேவை உள்ளடக்கியதாக 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் எந்திரத் திணைக்களத்தின் 12 மாதங்களுக்கும் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல். இதில் கப்பலிற்கான பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அங்கீகரிக்கப்பட்ட பதிவேட்டுப் புத்தகத்தில் ஆவணமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்;

(இ) தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்காகப் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல். அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 1-4 ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் மற்றும் சமூகப் பொறுப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 2-1 ஆம் அட்டவணைக்கிணங்க) உயிர் வாழ்வுப் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 3 ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி பொது இயக்குநர்களது சான்றிதழ் (ஜிஎம்டிஎஸ்எஸ்) அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/5 ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல் பாதுகாப்பு அலுவலர்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/1ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) நீராவிக் கொதிகலன்களின் தொழிற்பாட்டுக்கும், பராமரிப்புக்குமான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/1 ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்யாத தேருநர்களுக்குத் தகுதிச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். இச்சான்றிதழானது பொறியியல் அலுவலர் தேவையான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற வரையில், எக்கப்பலில் நீராவிக் கொதிகலன்கள் கப்பல் எந்திரத் தொகுதியின் பாகமாக அமைகின்றதோ அக்கப்பலிலான சேவைகளுக்குச் செல்லுபடியுடையதாதல் ஆகாது.

(3) மோட்டார் கப்பல்களில் அல்லது நீராவிக் கப்பல்களில் முறையே மேலே (1)(ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை தேருநர் பூர்த்திசெய்துள்ளாரா என்பதைப் பொறுத்து மோட்டார் கப்பல்களுக்கு அல்லது நீராவிக் கப்பல்களுக்கு ஏற்புடையதாகின்றவாறு தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்.

(4) மோட்டார் கப்பல்கள் நீராவிக் கப்பல்கள் ஆகிய ஒவ்வொன்றும் மேலே (1)(ஆ) என்னும் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவையான கடல்செல் சேவையை தேருநர் பூர்த்திசெய்திருந்தால் மோட்டார் கப்பல்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் ஏற்புடையதாகின்றவாறு இணைந்த தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்.

(5) இரண்டாவது பொறியில் அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் எந்திரக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராக தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல்;

(ஆ) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை உள்ளடக்கியதான 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் எந்திரக் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத எந்திர அறையில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராக 18 மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைக் கொண்டிருத்தல்; அத்துடன்

(இ) இரண்டாவது பொறியியல் அலுவலராக தகுதிச்சான்றிதழுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தை திருப்தி செய்கின்ற இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்தி செய்திருத்தல்:

ஆயினும்-

(i) மோட்டார் கப்பல்கள், நீராவிக்கப்பல்களில் முறையே மேலே பந்தி (ஆ)இல் குறித்துரைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையை தேருநர் பூர்த்திசெய்துள்ளாரா என்பதைப் பொறுத்து மோட்டார் கப்பல்களுக்கு அல்லது நீராவிக்கப்பல்களுக்கு ஏற்புடையதாகின்றவாறு தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம்; அத்துடன்

(ii) மோட்டார் கப்பல்கள், நீராவிக் கப்பல்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட தேவையான கடல்செல் சேவையை தேருநர் பூர்த்திசெய்திருந்தால் மோட்டார் கப்பல்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் ஏற்புடையதாகின்றவாறு இணைந்த தகுதிச் சான்றிதழ் வழங்கப்படலாம்.

(6) பிரதான பொறியியல் அலுவலராக தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான தேருநர் ஒவ்வொருவரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்-

(அ) 750 கிலோவோற் இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்திகொண்ட கப்பல்களில் ஆளமர்த்தப்பட்ட எந்திர அறையில் இரண்டாவது பொறியியல் அலுவலராக அல்லது காலந்தோறும் ஆளமர்த்தப்படாத பொறியியல் அறையொன்றில் பதவி குறிப்பிடப்பட்ட கடமைப் பொறியியலாளராகத் தகுதிச்சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல்;

(ஆ) 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியல் அலுவலர் ஒருவராக தகுதிச்சான்றிதழை வைத்திருக்கும் அதேவேளை 3000 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் பொறியியல் காவல் பொறுப்பு அலுவலராக 18 மாதங்களுக்குக் குறையாமல் கடல்செல் சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் ஆயினும் ; இக்காலப்பகுதி, 3000 கிலோவோற் இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல்களில் இரண்டாவது பொறியியலாளராக அத்தகைய சேவையை ஆற்றியுள்ளாரெனின் 12 மாதங்களிற்குக் குறையாமல் அல்லது சரிசமவிகிதப்படி குறைக்கப்படலாம்; அத்துடன்

(இ) பிரதம பொறியியல் அலுவலராக தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/2 ஆம் பிரிவில் தரப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்ற இயைபான ஊக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல்;

ஆயினும், பிரதம பொறியியல் அலுவலராக தகுதிச்சான்றிதழ் ஒன்று பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாக வழங்கப்படலாம்:-

(i) மோட்டார் கப்பல்கள் மேலே பந்தி (ஆ)வில் குறித்துரைக்கப்பட்ட 09 மாதங்களுக்குக் குறையாத கடல் சேவையானது மோட்டார் கப்பலில் பிரதான உந்துதல் எந்திரத் தொகுதியில் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி நீராவிக்கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் உள்ள பிரதான உந்துதல் எநதிரத்தொகுதியில் ஆற்றப்பட்டிருந்தால்; அல்லது

(ii) நீராவிக் கப்பல்கள் மேலே பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட 09 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவையானது நீராவிக் கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான எந்திரத் தொகுதியிலும் ஆற்றப்பட்டிருந்து எஞ்சியுள்ள காலப்பகுதி ஒரு மோட்டார் கப்பலின் அல்லது ஏதேனும் கப்பலின் பொருத்தமான இணைந்த பகுதியில் பிரதான உந்துதல் எந்திரத் தொகுதியிலும் புரியப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) இணைந்த மோட்டார், நீராவிக் கப்பல்கள் நீராவிக்கப்பலின் கொதிகலன்களிலும் பிரதான எந்திரத்தொகுதியிலும் ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவைகளையும் மோட்டார் கப்பல் ஒன்றின் பிரதான உந்துதல் எந்திரத்தொகுதியில் ஒன்பது மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவைகளையும் புரிந்திருத்தல் வேண்டும்.

(7) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் 750 மொத்தத்தொன்னிற்கும் 3000 மொத்தத்தொன்னிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தி கொண்ட கப்பல் ஒன்றிற்கு வரையறுக்கப்பட்ட எந்திரவியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக தகுதிச்சான்றிதழ் ஒன்றுக்கான ஒவ்வொரு தேருநரும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-

(i) கடல்செல் சேவையில் 30 மாதங்கள் கப்பலில் பயிற்சி. இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகம் ஒன்றில் முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

(ii) எந்தக் கப்பலில் முற்போந்த 05 வருட காலப்பகுதியின்போது கடல்செல் சேவை புரியப்பட்டதோ அந்தக்கப்பலில் சான்றுப்படுத்தப்பட்ட எந்திரவியல் அலுவலர் ஒருவரால் நுணுக்கமாக மேற்பார்வை செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்ட எந்திரவியல் திணைக்களத்தில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவை; அத்துடன் இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகமொன்றில் போதியவாறு ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) பின்வருவனவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல்- அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புக்களில், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1ஆம் அட்டவணைக்கிணங்க) உயிர்வாழ் படகுகளிலும் மீட்புப் படகுகளிலும் தேர்ச்சித்திறனில், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3ஆம் அட்டவணைக்கிணங்க) முற்கூட்டிய தீ எதிர்ப்பில், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 4-1 ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவியில், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/5ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பற்பாதுகாப்பு அலுவலரில்; அத்துடன்

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு ஏற்புடையற்பாலதான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை திருப்திசெய்கின்ற இயைபான ஊக்கப்படுததற் பயிற்சி, மதிப்பீடு உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல்:

ஆயினும் , நீராவிக் கொதிகலன்களின் தொழிற்பாட்டுக்கும் பராமரிப்புக்குமான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்யாத தேருநர்களுக்குத் தகுதிச்சான்றிதழ் வழங்கப்படலாம். இத்தகுதிச்சான்றிதழானது பொறியியல் அலுவலர் தேவையான தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றவரையில், எக்கப்பலில் நீராவிக் கொதிகலன்கள் கப்பல் எந்திரத் தொகுதியின் பாகமாக அமைகின்றதோ அக்கப்பலிலான சேவைகளுக்குச் செல்லுபடியுடையதாதல் ஆகாது.

(8) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்னிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் இரண்டாவது எந்திரவியல் அலுவலர் ஒருவராக தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும்-

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்னிற்கும் 3,000 மொத்தத்தொன்னிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எந்திரவியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராகத் தகுதிச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றிற்கு 750 மொத்தத்தொன்னிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பலில் மட்டுப்படுத்தப்பட்ட எந்திரவியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்னிற்கும் 3,000 மொத்தத் தொன்றிற்கும் இடையிலான உந்து சக்தியையுடைய கப்பல்களில் பிரதான பொறியியல் அலுவலர்களுக்கும் இரண்டாவது பொறியியல் அலுவலர்களுக்கும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/ 2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதற்கு உளக்கப்படுத்தற் பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(9) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்றிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடையிலான உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் பிரதான எந்திரவியல் அலுவலர் ஒருவராக தகுதிச்சான்றிதழ் வழங்கப்படுவதற்கான ஒவ்வொரு தேருநரும்-

(அ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்றிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடையிலான உந்து சக்தியையுடைய கப்பல்களில் இரண்டாவது எந்திரவியல் அலுவலராக தகுதிச்சான்றிதழை அல்லது புறக்குறிப்பிடுதலை வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) சர்வதேச பயணங்களில் எந்திரவியல் காவலுக்குப் பொறுப்பான அலுவலராக அல்லது கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்றிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடையிலான உந்துசக்தியுடைய கப்பல்களில் இரண்டாவது எந்திரவியல் அலுவலர் ஒருவராக 12 மாதங்களுக்குக் குறையாமல் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்;

(ஈ) கரையோரத்தை அண்மித்த பயணங்களில் ஈடுபட்டுள்ள 750 மொத்தத்தொன்றிற்கும் 3,000 மொத்தத்தொன்றிற்கும் இடைப்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரதான எந்திரவியல் அலுவலராக தகுதிச்சான்றிதழுக்காக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதற்காகப் பிரதம பரீட்சகரினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(10) 750 மொத்தத்தொன் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் எந்திரவியல் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சான்றிதழ் வழங்கப்படுவதற்கான தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) சான்றிதழ் வழங்கப்படுவதற்கான பரீட்சை ஆரம்பிக்கும் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கலங்களில் பிரதம பரீட்சகரினால் அங்கீகரிக்கப்பட்டதான எந்திரவியல் காவல் பேணலிற்கு இயைபான குறைந்தபட்சம் 6 மாதகாலப் பயிற்சியும் அனுபவமும்; அல்லது

(ii) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களில் 6 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைக்காலப்பகுதி ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட விசேட பயிற்சிக் காலப்பகுதியொன்று ; அல்லது

(iii) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தியுடைய கப்பல்களில் அல்லது எஞ்சின் திணைக்களத்தினால் இயைபான பதவியில் 12 மாதங்களுக்குக் குறையாத கடல்செல் சேவை:

ஆயினும் பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்ததாக 5 வருட காலத்தின்போது 12 மாத கடல் சேவையைக் கொண்டிராத அக்கப்பற்றுணையாளர்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப் பட்டதான விசேட மீளப் புதிய கற்கைநெறி ஒன்றைத் தொடர்தல் வேண்டும். எந்திரவியல் திணைக்களத்திற்கு தொடர்பற்ற ஆரம்ப பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள கப்பற்றுணையாளர்கள் பரீட்சைத் திகதியிலிருந்து முற்போந்த 05 வருட காலப்பகுதியின்போது எந்திரவியல் திணைக்களத்தில் இயைபான தகைமை ஒன்றில் குறைந்தபட்சம் 18 மாத கடல்சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதான விசேட உயர்தர கற்கைநெறி ஒன்றையும் தொடருதல் வேண்டும்.

(இ) எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளராக சான்றிதழ் வழங்குவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச் சான்று காண்பித்தல்- அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ் நுட்பங்களில், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) மிக ஆரம்ப முதலுதவியில் அத்துடன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகளில்; (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/6-1ஆம் அட்டவணைக்கிணங்க) பாதுகாப்பு விழிப்புணர்வில்; அத்துடன்

(ஈ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்திருத்தல்.

(11) 750 மொத்தத்தொன் உந்துதல் சக்தி அல்லது அதற்கு மேற்பட்ட பிரதான உந்துதல் இயந்திரத்தினால் சக்தியளிக்கப்பட்ட கடல்செல் கப்பல் ஒன்றில் சேவையாற்றுகின்ற ஒவ்வொரு இயலக்கூடிய கடலோடி இயந்திரமும் முறையாக சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். சான்றிதழுக்கான தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சைத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஆ) ஆள் அமர்த்தப்பட்ட எந்திர அறையொன்றில் அல்லது காலந்தோறும் ஆள் அமர்த்தப்படாத எந்திர அறையொன்றில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் ஒருவராக சான்றழித்தலுக்கான தேவைப்பாடுகளைத் திருப்திசெய்திருத்தல் வேண்டும்;

(இ) எந்திர அறைக் காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளரொருவராக சேவையாற்றுவதற்கு தகைமைபெற்றுள்ள அதேவேளை, கடல்செல் கப்பலொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றின் பாகமாக 12 மாதங்களுக்குக் குறையாமல் அல்லது 6 மாதங்களுக்குக் குறையாமல் எந்திர திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியொன்றையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளாரென ஆவணச்சான்று காண்பித்தல் அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - VI/ 1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ் நுட்பங்கள், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-3ஆம் அட்டவணைக்கிணங்க) மிக ஆரம்ப முதலுதவி (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் சமூகப் பொறுப்புக்களும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1ஆம் அட்டவணைக்கிணங்க) உயிர்வாழ் படகுகளிலும் தேர்ச்சித்திறன் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 3ஆம் அட்டவணைக்கிணங்க) உயர்தர தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/4-1ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி மற்றும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-ஏஐ/6ஆம் பிரிவில்) பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்திசெய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை மற்றும் மதிப்பீட்டைப் பூர்த்திசெய்திருத்தல்.

இவ்வொழுங்குவிதிகள் வலுவிற்குவரும் முற்போந்த கடைசி 06 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு எந்திர அறை காவலின் பாகமாக அமையும் கப்பற்றுணையாளர் ஒருவராக தேர்ச்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்ற பின்னர் எந்திரத் திணைக்களத்தில் இயைபான தகைமை ஒன்றில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் அக்கடலோடி இவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்துள்ளார் என பிரதான பரீட்சகர் கருதலாம்.

(12) 750 கிலோவோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட பிதான உந்துதல் இயந்திரத்தினால் வலுவூட்டப்பட்ட கடல்செல் கப்பலில் சேவையாற்றுகின்ற மின்னியல்- தொழில்நுட்ப அலுவலர் ஒவ்வொருவரும் தகைமைச்சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்றழித்தலுக்காக தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) 18 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) 3 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்கள திறன் பயிற்சியையும் 12 மாதங்களுக்குக் குறையாது அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; கடல்செல் சேவையானது எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/6 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக இருத்தலும் வேண்டும். அத்துடன் இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படுகிறது அல்லது வேறு வகையில் 36 மாதங்களுக்குக் குறையாது இணைந்த வேலைக்கள திறன் பயிற்சியிலும் 30 மாதங்களுக்குக் குறையாமல் அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையிலும் மின்னியல் தொழில்நுட்ப கப்பற்றுணையாளராக கடல்செல் சேவை இருத்தல் வேண்டும்.

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/ 6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்கின்றதான உள்ளகப்படுத்தற்பயிற்சி மற்றும் மதிப்பீடு உட்பட அங்கீகரிக்கப்பட்ட கல்வியை, பயிற்சியை, பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் சமூகப் பொறுப்புகளும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/2-1ஆம் அட்டவணைக்கிணங்க) உயிர்வாழ் படகுகளிலும் மீட்புப்படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3ஆம் அட்டவணைக்கிணங்க) உயர்தர தீ எதிர்ப்பு, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1ஆம் அட்டவணைக்கிணங்க) மருத்துவ முதலுதவி அத்துடன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/5ஆம் அட்டவணைக்கிணங்க) கப்பல்பாதுகாப்பு அலுவலர்.

இவ்வொழுங்குவிதி வலுவிற்குவரும் முற்போந்த கடைசி 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு கப்பலொன்றில் இயைபான தன்மையில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் அவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளை அக்கடலோடி திருப்தி செய்திருப்பதாக பிரதம பரீட்சகர்

கருதலாமென்பதுடன், கடலோடி கட்டாய தர உயர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்திசெய்த பின்னர் மதிப்பீட்டில் அவரது தகுதி விபரித்துக்காட்டப்படுமாயின் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதாகவும் கருதலாம்.

(13) 750 கிலோ வோற் உந்துதல் சக்தி அல்லது அதற்கு மேற்பட்ட உந்துதல் சக்தி கொண்ட பிரதான உந்துதல் இயந்திரத்தினால் வலுவூட்டப்பட்ட கடல்செல் கப்பலொன்றில் சேவையாற்றுகின்ற மின்னியல்-தொழில்நுட்பக் கப்பற்றுணையாளர் ஒவ்வொருவரும் முறையாகச் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய சான்றழிப்பிற்கான தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) 18 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) 15 மாதங்களுக்குக் குறையாத இணைந்த வேலைக்களப் பயிற்சியையும் 9 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவையையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். கடல்செல் சேவையானது எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7 பிரிவின் தேவைப்பாடுகளைத் திருப்தி செய்கின்றதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவுப் புத்தகத்தில் ஆவணப்படுத்தப்படுகின்றது; அல்லது

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7ஆம் அட்டவணைக்கிணங்க தொழில்நுட்பத் தகைமையையும் 9 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடல்செல் சேவைக் காலப்பகுதியையும் திருப்தி செய்கின்ற தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளார் என ஆவணச்சான்று காண்பித்தல், அதாவது (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட உயிர்வாழ் நுட்பங்கள் (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 1-2ஆம் அட்டவணைக்கிணங்க) தீ தடுப்பும் தீ எதிர்ப்பும், உயிர்வாழ் படகுகளிலும் மீட்புப்படகுகளிலும் தேர்ச்சித்திறன், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-3ஆம் அட்டவணைக்கிணங்க) ஆரம்ப முதலுதவி, (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-4ஆம் அட்டவணைக்கிணங்க) தனிப்பட்ட பாதுகாப்பும் சமூகப் பொறுப்புகளும், (எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6ஆம் அட்டவணைக்கிணங்க) அத்துடன் பாதுகாப்பு விழிப்புணர்வு; அத்துடன்

(உ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமை நியமத்தை திருப்திசெய்திருத்தல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதி வலுவிற்குவரும் முற்போந்த கடைசி 60 மாதங்களினுள் 12 மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு கப்பலொன்றில் இயைபான பதவியில் கடலோடி சேவையாற்றியுள்ளாராயின் அவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளை அக்கடலோடி திருப்தி செய்திருப்பதாக பிரதம பரீட்சகர் கருதலாமென்பதுடன், கடலோடி கட்டாய தர உயர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்திசெய்த பின்னர் மதிப்பீட்டில் அவரது தகுதி விபரித்துக்காட்டப்படுமாயின் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-III/7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தைத் திருப்தி செய்வதாகவும் கருதலாம்.

*குறித்தசில வகையான கப்பலிலுள்ள ஆளணியினருக்கான விசேட பயிற்சித் தேவைப்பாடுகள்*

*எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பல்கள் மீது கப்பற்றலைவர்கள், அலுவலர்கள், கப்பற்றுணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக்குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்*

12. (1) எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் அல்லது இரசாயனத் தாங்கிக் கப்பல்கள்மீது கப்பற்சரக்கு அல்லது கப்பற்சரக்கு உபகரணம் தொடர்பான குறிப்பான கடமைகளும் பொறுப்புக்களும் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் கப்பற்றுணையாளர்கள் எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் மற்றும் இரசாயன தாங்கிக் கப்பல்கள் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) எண்ணெய் மற்றும் இரசாயன தாங்கிக் கப்பல் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சி சான்றிதழ் ஒன்றுக்கு ஒவ்வொரு அலுவலரும் கப்பற்றுணையாளரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:

(அ) எண்ணெய் அல்லது இரசாயன தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடற் பயண சேவை; அத்துடன்

(ஆ) எண்ணெய் அல்லது இரசாயனத் தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியொன்றைப் பூர்த்திசெய்திருத்தல் அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 1இன் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை அடைதல்.

(3) கப்பற்றுறைத் தலைவர்கள், பிரதான எந்திரவியல் அலுவலர்கள், பிரதான துணைத்தலைவர்கள், இரண்டாவது எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்சரக்கை எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் ஏற்றுவதில், இறக்குவதில் அத்துடன் இடைப்போக்கில் அல்லது கையாளுவதில் பாதுகாப்பு, தாங்கியை சுத்தப்படுத்தல் அல்லது வேறு கப்பற்சரக்குடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கு உடனடிப் பொறுப்புக் கொண்டவரான எவரேனுமாள், எண்ணெய்த்தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சிகளில் சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) எண்ணெய்த்தாங்கி கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சியில் சான்றிதழ் ஒன்றுக்குத் தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழுக்கான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழுக்கான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டுமென்பதுடன்-

(i) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று முறை சரக்கை ஏற்றுதல் மற்றும் மூன்று முறை சரக்கை இறக்குதல் உட்பட மிகையான தகைமை ஒன்றில் அத்தகைய கப்பல்களில் ஆகக்குறைந்தது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ-V/1ஆம் பிரிவின் வழிகாட்டுநெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எண்ணெய்த் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை அடைந்திருத்தலும் வேண்டும்.

(5) கப்பற்றுறைத் தலைவர்கள், பிரதான எந்திரவியல் அலுவலர்கள், பிரதான துணைத்தலைவர்கள், இரண்டாவது எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் கப்பற்சரக்கை எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் ஏற்றுவதில், இறக்குவதில் அத்துடன் இடைப்போக்கில் அல்லது கையாளுவதில் பாதுகாப்பு, தாங்கியை சுத்தப்படுத்தல் அல்லது வேறு கப்பற்சரக்குடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கு உடனடிப் பொறுப்புக் கொண்டவரான எவரேனுமாள், எண்ணெய்த்தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சிகளில் சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) எண்ணெய்த்தாங்கி கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தரப் பயிற்சியில் சான்றிதழ் ஒன்றுக்குத் தேருநர் ஒவ்வொருவரும்-

(அ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழுக்கான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழுக்கான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டுமென்பதுடன்-

(i) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று முறை சரக்கை ஏற்றுதல் மற்றும் மூன்று முறை சரக்கை இறக்குதல் உட்பட மிகையான தகைமை ஒன்றில் அத்தகைய கப்பல்களில் ஆகக்குறைந்தது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ- V/ 1ஆம் பிரிவின் வழிகாட்டுநெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எண்ணெய்த் தாங்கிக் கப்பற்சரக்கு தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-1ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதி நியமத்தை அடைந்திருத்தலும் வேண்டும்.

(7) உளதாம் எண்ணெய் மற்றும் இரசாயனத் தாங்கிக் கப்பல் பயிற்சியின் தகுதிச்சான்றிதழ், சான்றிதழைக் கொண்டிருப்பவர்கள், அந்தந்த தாங்கிக் கப்பல்களில் மீள வலிதாக்கும் தேதிக்கு முற்போந்த ஐந்து வருடங்களின்போது கடல் சேவையினை மூன்று மாத காலப்பகுதியொன்றுக்கு கப்பல் ஒன்றில் தோதான தகைமையொன்றில் சேவைபுரிந்துள்ளாராயின் அல்லது இயைபான உயர்தர தாங்கிக் கப்பல் பயிற்சியை முடித்திருப்பாராயின் மீள வலிதாக்கப்படும்.

*திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் மீதான கப்பற்றலைவர், அலுவலர்கள் மற்றும் கப்பற் துணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக் குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்*

(8) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் கப்பற் சரக்கு அல்லது கப்பற் சரக்கு உபகரணங்கள் தொடர்புபட்ட விசேட கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் கப்பற் துணையாளர்களின் திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(9) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சி சான்றிதழொன்றுக்கு பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1 பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படைப் பயிற்சியைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்தலும் வேண்டும்:-

(அ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடற் பயண சேவை அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1ஆம் பந்தியின் ஏ-V/1-2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமை தராதரத்தை அடைதல்; அல்லது

(ஆ) திரவமயமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியொன்று அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1ஆம் பந்தியின் ஏ-V/1-2 பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமைத் தராதரத்தை அடைதல்.

(10) கப்பற்றலைவன், பிரதான எந்திரவியல் அலுவலர்கள், பிரதான துணை அலுவலர்கள், இரண்டாவது எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் ஏற்றுதல் இறக்குதல், இடைப்போக்கில் கவனித்தல், கப்பற்சரக்கைக் கையாளுதல், தாங்கியை சுத்தப்படுத்துதல் அல்லது திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் வேறு கப்பற் சரக்குகளுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளுக்கான உடனடுத்துப் பொறுப்புடைய எவரேனுமாள் திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களின் தொழிற்பாடுகளுக்கான உயர்தர பயிற்சியில் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(11) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான உயர்தர பயிற்சியில் சான்றிதழொன்றுக்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும்-

(அ) திரவமயமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றுறுதிக்கான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) திரவமயமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல் சரக்கு தொழிற்பாடுகளுக்கான அடிப்படைப் பயிற்சியில் சான்றுறுதிக்கு தகுதியடையும் அதேவேளை ;

(i) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) ஆகக்குறைந்தது மூன்று ஏற்றுதல் மற்றும் மூன்று இறக்குதல் உட்பட மிகையான தகைமையொன்றில் திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பல்களில் மூன்று மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பீ-V/1ஆம் பிரிவின் வழிகாட்டுநெறிகளைக் கவனத்திற்கெடுத்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிப் பதிவேட்டுப் புத்தகமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) திரவமாக்கப்பட்ட வாயு தாங்கிக் கப்பற் சரக்குத் தொழிற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சியை முடித்திருத்தல் வேண்டுமென்பதுடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/1-2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமைத் தராதரத்தை அடைந்திருத்தலும் வேண்டும்.

(12) காணப்படுகின்ற தாங்கிக் கப்பல் பயிற்சியில் தகைமைச் சான்றிதழ், கடலோடிகள் தோதான தாங்கிக் கப்பல்களில் நேர்முந்திய அறுபது மாதங்களினுள் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு தாங்கிக் கப்பலொன்றில் தோதான தகைமையொன்றில் சேவை புரிந்துள்ளாராயின் அல்லது இயைபான உயர்தரதாங்கி பயிற்சியை முடித்திருப்பாராயின், மீள வலிதாக்கப்படுதல் வேண்டும்.

*பயணிகள் கப்பல்களின் கப்பற்றலைவர், அலுவலர்கள், கப்பற் துணையாளர்களின் பயிற்சி மற்றும் தகைமைகளுக்கான ஆகக்குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்*

13 (1) பயணிகள் கப்பல்களில் கப்பற்தள சேவைகள் குறித்தொதுக்கப்பட முன்பதாக, சர்வதேச கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள பயணிகள் கப்பல்களில் சேவை புரிகின்ற கடலோடிகள் தமது தகைமை, கடமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிணங்க கீழே தரப்பட்ட (3) தொடக்கம் (6) வரையான உப ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் பயிற்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(2) கீழே தரப்பட்ட (3), (5) மற்றும் (6)ஆம் உபஒழுங்குவிதிகளுக்கிணங்க பயிற்றப்படவேண்டியதாகத் தேவைப்படுத்தப்படும் கடலோடிகள் ஐந்து ஆண்டுகளை விஞ்சாத இடைவெளிகளில், தோதான வலுவூட்டும் பயிற்சிகளைப் பெறுதல் வேண்டும் அல்லது முன்னைய ஐந்து ஆண்டுகளில் தேவைப்படும் தகைமை தராதரத்தை எய்தியிருப்பதாக சான்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கப்பற்றலைவர், அலுவலர் அல்லது பயணிகள் கப்பலில் அவசர சூழ்நிலைகளில் பயணிகளுக்கு உதவுவதற்கென கடமை நிரலில் குறித்தொதுக்கப்பட்ட வேறு ஆளணியினர் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-V/3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக சனக்கும்பல் முகாமையில் பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(4) பயணிகள் கப்பல்களில் பயணிகள் இடங்களில் நேரடி சேவையை வழங்குகின்ற ஆளணியினர் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்புப் பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(5) கப்பற்றலைவர், பிரதான எந்திரவியல் அலுவலர்கள், பிரதான கப்பற்றுணையாளர்கள், இரண்டாவது எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் பயணிகள் கப்பல்களில் அவசர சூழ்நிலைகளில் பயணிகள் பாதுகாப்புக்கான பொறுப்பைக் கொண்டுள்ளவாறான கடமை நிரலில் குறித்தொதுக்கப்பட்ட எவரேனுமாள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 3ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக நெருக்கடி நிலை முகாமை, மற்றும் மனித நடத்தையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(6) கப்பற்றலைவர், பிரதான எந்திரவியல் அலுவலர்கள், பிரதான துணையாளர்கள், இரண்டாவது எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் பயணிகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல், கப்பற் சரக்கை ஏற்றுதல் இறக்குதல் அல்லது பாதுகாத்தல், அல்லது கப்பலின் வாயில்களை மூடும் உடனடிப் பொறுப்பு குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் ஒவ்வொருவரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 4ஆம் பந்தியின் ஏ-V/2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக பயணிகள் பாதுகாப்பு, கப்பற்சரக்கு பாதுகாப்பு மற்றும் கப்பல் வாயிற் பாதுகாப்பு என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(7) தகைமைச் சான்றிதழ் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் பயிற்சியின் ஆவணச் சான்றாக கடலோடிகளினால் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

*மாற்றீடான சான்றுறுதி*

*மாற்றீடான சான்றிதழ் வழங்குதல்*

14. (1) எஸ்ரிசிடபிள்யூ கோவைக்கான இணைப்பின் IIஆம் மற்றும் IIIஆம் அத்தியாயங்களில் இடப்பட்ட சான்றுறுதிக்கான தேவைப்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், தோதான பிரதான பரீட்சகர் அத்தகைய அத்தியாயங்களின் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த வேறு சான்றிதழ்களை வழங்கலாம், ஆயின்,-

(அ) சான்றிதழ்களிலும் புறக்குறிப்பிடதலிலும் குறிப்பிடப்படவேண்டிய இணைந்த பணிகளும் பொறுப்புகளின் தரங்களும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/1, ஏ-II2, ஏ-II/3, ஏ-II/4, ஏ-II5, ஏ-III/1, ஏ-IIஐ/2 , ஏ-III/3, ஏ- III/ 4, ஏ-III/ 5 மற்றும் ஏ-IV/ 2 பிரிவுகளில் தோன்றுகின்றவற்றிலிருந்தும் ஒத்தனவற்றிலிருந்தும் தெரிவுசெய்யப்படகின்றன;

(ஆ) பரீட்சார்த்திகள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சியை முடித்துள்ளார்கள் அத்துடன் சான்றிதழ்களிலும் புறக்குறிப்பிடுதல்களிலும் குறிப்பிடப்படவேண்டிய பணிகள் மற்றும் மட்டங்களுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் தோதான பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்டதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VII/1ஆம் பிரிவில் வெளிப்படுத்தப்பட்டதுமான தகைமை தராதரத்திற்கான தேவைப்பாடுகளை அடைந்துள்ளார்;

(இ) பரீட்சார்த்திகள் சான்றிதழில் குறிக்கப்படவேண்டிய பணிகள் மற்றும் மட்டங்களின் செயற்பாட்டிற்குத் தோதான அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைப் பூர்த்திசெய்துள்ளனர். கடற்பயண சேவைக்கான ஆகக்குறைந்த காலப்பகுதி எஸ்ரிசிடபிள்யூ கோவைக்கான இணைப்பின் II மற்றும் III ஆம் அத்தியாயங்களில் விதித்துரைக்கப்பட்ட கடற்பயண சேவைக் காலப்பகுதிக்குச் சமமாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கடற்பயண சேவைக்கான ஆகக்குறைந்த காலப்பகுதி எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VII/2ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்டதைவிடக் குறைவாக இருத்தலாகாது;

(ஈ) தொழிற்பாட்டு மட்டத்தில் கப்பலைச் செலுத்துதல் பணிகளைப் புரியவுள்ள சான்றுறுதிக்கான பரீட்சார்த்திகள் இயைபானவாறாக எஸ்ரிசிடபிள்யூ கோவையின் IVஆம் அத்தியாயத்தில் ஒழுங்குவிதிகளின் ஏற்புடையதான தேவைப்பாடுகளை அடைதல் வேண்டும். குறித்தொதுக்கப்பட்ட வானொலி கடமைகள் புரிவதில் வானொலி ஒழுங்குவிதிகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) சான்றிதழ்கள், I/ 2 ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் எஸ்ரிசிடபிள்யூ கோவையன் VIIஆம் அத்தியாயத்தில் தரப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவும் வழங்கப்படுகின்றன.

*கடலோடிகளின் சான்றுறுதி*

(2) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் IIஆம் அத்தியாயத்தின் ஏ-II/1, ஏ-II/2, ஏ-II/3, ஏ-II/4 அல்லது ஏ-II/5 அட்டவணைகளில் அல்லது IIIஆம் அத்தியாயத்தின் ஏ-III/1 , ஏ-III/2, ஏ- III/3, ஏ- III/4, அல்லது ஏ- III/ 5 அட்டவணைகளில் அல்லது IVஆம் அத்தியாயத்தின் ஏ-IV/ 2 அட்டவணைகயில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் பணியை அல்லது பணித்தொகுதிகளைப் புரிகின்ற கடலோடிகள் ஒவ்வொருவரும் ஏற்புடையதானவாறான தகைமைச் சான்றிதழ் அல்லது புலமைச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

*மாற்றீடான சான்றிதழ்களின் வழங்குதலை ஆளுகின்ற கோட்பாடுகள்*

15. (1) தோதான பிரதான பரீட்சகர்-

(அ) மாற்றீடான சான்றுறுதி முறைமையானது கடலில் பாதுகாப்பின் அளவொன்றை உறுதிப்படுத்தகின்றது அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் வேறு அத்தியாயங்களினால் ஏற்பாடு செய்யப்படும் ஆகக்குறைந்ததுமாக தீழ்ப்பு தொடர்பில் தடுப்புப் பயனொன்றைக் கொண்டுள்ளது என்றிருந்தாலொழிய எந்த மாற்றீடான சான்றுறுதி முறைமையும் அமுலாக்கப்படலாகாது எனவும்; அத்துடன்

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ் மாற்றீடான சான்றுறுதிக்கான ஏதேனும் ஒழுங்கேற்பாடுகள் வேறு அத்தியாயங்களின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு பரிமாற்றம் செய்யத்தக்கதான சான்றிதழ் வழங்கப்படவேண்டுமெனவும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) மேலே தரப்பட்ட (1)ஆம் உப ஒழுங்குவிதியில் பரிமாற்றத்தகு தன்மையின் கோட்பாடு பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் II ஆம் அத்தியாயம் அல்லது III ஆம் அத்தியாயங்களின் ஒழுங்கேற்பாடுகளின்கீழ் சான்றிதழளிக்கப்பட்ட கடலோடிகள் அத்துடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் VIIஆம் அத்தியாயத்தின்கீழ் சான்றிதழளிக்கப்பட்ட கடலோடிகள் கப்பல் ஒழுங்கமைப்புகளின் ஒன்றில் பாரம்பரிய அல்லது வேறு வடிவத்தைக் கொண்ட கப்பல்களில் சேவை புரிய இயலுமானவர்களாக உள்ளனர்; அத்துடன்

(ஆ) கடலோடிகள் அவர்களின் திறமைகளை வேறு எங்காவது பயன்படுத்த அவர்களின் இயலுமாந்தன்மையைப் பாதிக்கக்கூடிய அத்தகைய வழியொன்றில் குறித்த கப்பல் ஒழுங்கேற்பாடுகளுக்குப் பயிற்றப்படவில்லை.

(3) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் VIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் சான்றிதழ் வழங்குதலில், பின்வரும் கோட்பாடுகள் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) மாற்றீடான சான்றிதழ்களின் வழங்குதல் அதில் தானாகப் பயன்படுத்தப்படுதலாகாது:-

(i) கப்பலின் பணி அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்;

(ii) உயர்தொழிலின் மேன்மையை அல்லது கடலோடிகளின் திறமையைக் குறைத்தல்;

(iii) ஏதேனும் குறிப்பான காவல் காத்தலின்போது தனித்த சான்றிதழ் வைத்திருப்போரொருவருக்கு எந்திரம் மற்றும் கப்பற்றள காவல் காத்தல் அலுவலர்களின் இணைந்த கடமைகளின் குறித்தொதுக்கத்தை நியாயப்படுத்துதல்; அத்துடன்

(ஆ) கட்டளையிடும் ஆள் கப்பற்றலைவனாகப் பதவிப்பெயரிடப்படுதல் வேண்டும்; அத்துடன் கப்பற்றலைவன் மற்றும் ஏனையோரின் சட்ட அந்தஸ்து மற்றும் அதிகாரம் மாற்றீடான சான்றுறுதிக்கான ஏதேனும் ஒழுங்கேற்பாட்டின் அமுலாக்கத்தினால் எதிர்மாறாகப் பாதிக்கப்படுதலாகாது.

*கப்பற் துணையாளர்களுக்கு மாற்றீடான சான்றிதழ்களின் வழங்குதல்*

16. (1) கப்பலோட்டுதல் அல்லது கடல்சார் எந்திரவியலில் உதவி மட்டத்தில் சான்றுறுதிக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் தோதான பயிற்சிகளைப் பூர்த்திசெய்வதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஒன்றில் ஏ-III/4 அட்டவணை அல்லது ஏ-II/4 யில் விதித்துரைக்கப்பட்ட பணிக்கென தகைமைத் தராதரத்தை அடைதல் வேண்டும். முறையே எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- III/4 அல்லது ஏ- II/4 அட்டவணையில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம்; ஆயின் பரீட்சார்த்தி தோதானவாறாக மேலதிக தோதான பயிற்சியைப் பூர்த்திசெய்கின்றனர் என்பதுடன் சம்பந்தப்பட்ட பணிக்கான அத்தகைய அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட தகைமைத் தராதரத்தை அடைந்துள்ளார்.

(2) கப்பற்றள கடலோடியாகச் செயலாற்றக்கூடியவாறான உதவி மட்டத்தில் சான்றுறுதிக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் ஏ-II/4 அட்டவணையில் குறித்துரைக்கப்படும் தகைமைத் தராதரத்திற்கு இணங்கியொழுகுவதற்கு மேலதிகமாக தோதான பயிற்சிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டுமெனவும் ஏ-II/5 அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட பணிகளில் எல்லாவற்றுக்கும் தகைமை தராதரத்தினை அடைதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தல் வேண்டும். ஏ-III/4 மற்றும் ஏ- III/5 அட்டவணையில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம்; ஆயின் பரீட்சார்த்தி மேலதிக தோதான பயிற்சி தோதானவாறாகப் பூர்த்திசெய்திருக்கிறார் என்பதுடன் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் தோதான அட்டவணை அல்லது அட்டவணைகளில் விதித்துரைக்கப்படும் தகைமை தராதரத்தை அடைந்துள்ளார்.

(3) கடலோடிகள் - எந்திரம் என செயற்படுவதற்கு இயலச்செய்கின்றனவாக உதவி மட்டத்தில் சான்றுறுதிக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் ஏ-III/4 அட்டவணையில் குறித்துரைக்கப்படும் தகைமைத் தராதரத்துடன் இசைந்தொழுகுதலுக்கு மேலதிகமாக ஏ-III/5 அட்டவணையில் விதித்துரைக்கப்படும் பணிகளின் எல்லாவற்றுக்கும் தகைமைத் தராதரத்தை அடைதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். ஏ-II/4 அல்லது ஏ-II/5 அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் பணிகள் சேர்க்கப்படலாம், ஆயின் பரீட்சார்த்தி மேலதிக தோதான பயிற்சியைத் தோதானவாறாகப் பூர்த்திசெய்துள்ளார் என்பதுடன், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் தோதான அட்டவணை அல்லது அட்டவணைகளில் விதித்துரைக்கப்படும் தகைமைத் தராதரத்தை அடைந்தும் உள்ளார்.

(4) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/4 மற்றும் ஏ- III/4 அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் பணிகளில் உதவி மட்டத்தில் அக்கோவையின்ஏ- VIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றுறுதிக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(அ) பின்வருவனவற்றினால் உருவான 18 மாதங்கள் அனுபவத்திலும் விடக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்பயணச் சேவை :-

(i) கப்பலோட்டுதல்சார் காவல் கடமைகளுடன் இணைந்த 9 மாதங்களுக்குக் குறையாத அனுபவம்; அத்துடன்

(ii) எந்திர அறைக் கடமைகளுடன் இணைந்த 9 மாதங்களுக்குக் குறையாத அனுபவம்; அல்லது

(ஆ) பின்வருவனவற்றினால் உருவான 6 மாதங்களுக்குக் குறையாததாக இருக்கவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவைக்காலப்பகுதியில் ஒன்றில் கடலுக்கு முன்னைய அல்லது கப்பலில் விசேட பயிற்சியொன்று :-

(i) கப்பலோட்டுதல்சார் காவல் கடமைகளுடன் இணைந்த 3 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி; அத்துடன்

(ii) எந்திர அறை கடமைகளுடன் இணைந்த 3 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி.

(இ) மேலே தரப்பட்ட (அ) அல்லது (ஆ) பந்திகளால் தேவைப்படுத்தப்படும் கடற்பயண சேவை பயிற்சி மற்றும் அனுபவம் தோதான தகுதிவாய்ந்த அலுவலர் அல்லது கப்பல் துணையாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும்.

*(5) ஏ-II/5 மற்றும் ஏ-III/5 அட்டவணைகளில் குறித்துரைக்கப்படும் பணிகளில் உதவி மட்டத்தில் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் VIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் சான்றுறுதிக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும், கப்பலோட்டுதல்சார் மற்றும் எந்திர அறை காவல் ஒன்றின் பாகமாக அமைகின்ற கப்பல் துணையாளர் ஒருவராகச் சேவை புரிய தகைமையுடையவராக இருக்கும் அதேவேளை எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-II/5 மற்றும் ஏ-III/5 பிரிவுகளில் குறித்துரைக்கப்படும் தகைமைத் தராதரங்களை அடைதல் வேண்டும். அத்துடன் பின்வருவனவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்:-*

*(அ) பின்வருவனவற்றினால் உருவான 30 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்பயணசேவை -*

(i) *கடலோடிகள் கப்பற்றள கடமைகளுடன் இணைந்த 18 மாதங்களுக்குக் குறையாத சேவை; அத்துடன்*
(ii) *கடலோடிகள் எந்திர கடமைகளுடன் இணைந்த 12 மாதங்களுக்குக் குறையாத சேவை; அல்லது*

*(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அத்துடன் பின்வருவனவற்றிலான உருவான அங்கீகரிக்கப்பட்ட 21 மாதங்களுக்குக் குறையாத கடற்பயண சேவை-*

(i) *கடலோடிகள் கப்பற்றள கடமைகளுடன் இணைந்த 12 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி; அல்லது*
(ii) *கடலோடி எந்திர கடமைகளுடன் இணைந்த 9 மாதங்களுக்குக் குறையாத பயிற்சி.*

*(இ) அங்கீகரிக்கப்பட்ட விசேட ஒருங்கிணைக்கப்பட்ட கப்பற்றள மற்றும் எந்திர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பின்வருவனவற்றினால் உருவான ஒருங்கிணைக்கப்பட்ட கப்பற்றள மற்றும் எந்திர திணைக்களத்தில் 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவை-*

(i) *கடலோடி கப்பற்றள கடமைகளுடன் இணைந்த 6 மாதங்களுக்குக் குறையாத சேவை; அத்துடன்*
(ii) *கடலோடி எந்திர கடமைகளுடன் இணைந்த 6 மாதங்களுக்குக் குறையாத சேவை.*

*கடற்சேவையைக் கணிப்பிடுதல்*

*சகல அலுவலர்களும் கப்பல் துணையாளர்களும்*

*17 (1) ஏதேனும் குறிப்பிட்ட தகைமைச் சான்றிதழுக்கு அல்லது புறக்குறிப்பிடுவதற்குக் குறித்துரைக்கப்பட்ட தகைமையளிக்கும் கடற்பயணச் சேவை தகைமையை மதிப்பிட ஆரம்பிக்கும் தேதிக்கு நேர்முந்திய பத்தாண்டு காலப்பகுதிக்குள்ளாக புரியப்படுதல் வேண்டுமென்பதுடன் தகைமை மதிப்பீடு ஆரம்பித்த தேதியை நேர்முந்திய ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக 12 மாத கடல் சேவைக் காலப்பகுதியை உள்ளடக்குதல் வேண்டும்.*

*(2) வியாபாரஞ்சாராக் கலன்கள், இழுவைக் கப்பல்கள், சிறு கப்பல்கள், ஆராய்ச்சிக் கப்பல்கள், காப்புக்கலன்கள், கடற்பயண வழிகாட்டிகள், பாதுகாப்புக் கப்பல்கள் மற்றும் இதையொத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய கலன்கள் கப்பலில் ஆற்றிய மொத்தச் சேவைக் காலப்பகுதியின் மூன்றில் இரண்டு பங்கை கடலில் உண்மையாகச் செலவழித்த நேரம் அமையுமானால் அல்லது அதிலும் விஞ்சுமானால், பூரணமாகக் கணக்கெடுக்கப்படவேண்டும். இந்த விகிதாசாரத்திற்கும் குறைவாக உண்மையாகக் கடலில் சென்ற சேவை அமையுமானால் உண்மையான கடற்சேவையின் அரைவாசி தகைமையளிக்கும் கடற்சேவையாகக் கணக்கிடப்படவேண்டும். சகல பரீட்சார்த்திகளிடமிருந்தும் தேவைப்படுத்தப்பட்ட கடற்சேவைச் சான்றிதழுடன் மேலதிகமாக, மேற்பார்வையின் ஆகக்குறைந்தது ஆறு மாத காவல் காத்தல் சேவை பற்றிக் குறிப்பீடு செய்து உண்மையாகக் கடலில் செலவழித்த நேரத்தைக் குறிப்பிட்டு, கம்பனியிடமிருந்தும் கற்பற்றலைவரிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழைப் பரீட்சார்த்திகள் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.*

*(3) அத்தகைய சேவை 2ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட வகையைக் சார்ந்த அத்தகைய கப்பல்களில் மட்டும் புரியப்பட்டிருந்தால் அவர்களது சான்றிதழ்கள் அத்தகைய கலனின் சேவைக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம்.*

*(4) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற 750 கிலோ வோற் அல்லது மேற்பட்ட உந்து சக்தியுடைய கப்பலின் காலத்திற்குக்காலம் ஆளில்லாத எந்திர அறையொன்றில் குறித்தளிக்கப்பட்ட கடமை எந்திரவியலாளர் ஒருவராக அல்லது ஆளளிக்கப்பட்ட எந்திர அறையொன்றில் எந்திரவியல் காவலலொன்றின் பொறுப்பதிகாரியாகத் தகைமைச் சான்றிதழொன்றைக் கொண்டவராக மாற எண்ணமுடைய கடல்சார் எந்திரவியல் கிளையின் இலங்கை கடற்படையின் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்ய தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தியின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், எந்திரவியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமை பெறும் வணிகக் கப்பல் கடற்பயண சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீடுகளைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். எந்திரவியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கை*

கடற்படை கப்பல்களில் புரியப்பட்ட கடற்சேவை 750 கிலோ வோற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்து சக்தியுடைய கப்பல்களின் காலத்திற்குக்காலம் ஆளில்லாத எந்திர அறையொன்றில் குறித்தளிக்கப்பட்ட கடமை எந்திரவியலாளராக அல்லது ஆளளிக்கப்பட்ட எந்திர அறையில் எந்திரவியல் காவல் ஒன்றில் பொறுப்பதிகாரியொருவரின் பரீட்சைக்கான அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற அருகிலான கடற்கரை கடற்பயணத்திற்கான தகைமைச் சான்றிதழொன்றினை வைத்திருப்பவராக மாற எண்ணமுடைய கடல்சார் எந்திரவியல் கிளையின் இலங்கை கடற்படையின் எந்திர அறை நுணுக்க வேலைத்திறனுடையவர்கள் மற்றும் சிறு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீடுகளை முடிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தியொருவரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், எந்திரவியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக தகைமைபெறும் வணிகக் கப்பல் கடற்பயண சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீடுகளைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். எந்திரவியலாளர்களின் பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கைக் கடற்படை கப்பலில் புரியப்படும் கடற்சேவை 750 கிலோ வாற் அல்லது அதற்கு மேற்பட்ட உந்து சக்தியுடைய கப்பல்களில் காலத்திற்குக்காலம் ஆளில்லாத எந்திர அறையொன்றில் குறித்தளிக்கப்பட்ட கடமை எந்திரவியலாளர் அலல்து ஆளளிக்கப்பட்ட எந்திர அறையொன்றில் எந்திரவியல் காவலொன்றின் பொறுப்பதிகாரியொருவரின் பரீட்சைக்கான அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

(6) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற 500 மொத்த தொன் கப்பலில் கப்பலோட்ட காவல் ஒன்றின் பொறுப்பதிகாரியாக, தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவராக மாற எண்ணமுடைய நிர்வாக அலுவலர் கிளையின் இலங்கை கடற்படை அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீடுகளைபபூர்த்திசெய்வதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தியொருவரின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர்கள் மற்றும் கப்பற் துணைத்தலைவர்கள் சம்பந்தப்பட்ட பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடற்பயண சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீடு தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான 500 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கை கடற்படை கப்பலில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற அருகிலான கடற்கரை கடற்பயணத்தில் 3,000 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கப்பலில் கப்பலோட்ட காவலொன்றின் பொறுப்பதிகாரியாக, தகைமைச் சான்றிதழொன்றை வைத்திருப்பவராக மாற எண்ணுகின்ற நிருவாக அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படையின் அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி. பரீட்சை மற்றும் மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தியின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர் மற்றும் கப்பல் துணைத்தலைவர்களின் சம்பந்தப்பட்ட பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடற்பயண சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீடுகளைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறாக அருகிலான கடற்கரைக் கடற்பயணங்களில் 500 மொத்தத் தொன்னுக்கும் 3,000 மொத்தத் தொன்னுக்கும் இடையிலான இலங்கைக் கடற்பயணக் கப்பல்களில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாகக் கருதுதப்படுதல் வேண்டும்.

(8) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்ற 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த கப்பல்களின் கப்பலோட்ட காவலலொன்றின் பொறுப்பதிகாரியாக தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவராக மாற எண்ணுகின்ற நிர்வாக அலுவலர் கிளையின் இலங்கைக் கடற்படையின் சிறு அலுவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட தோதான கல்வி, பயிற்சி, பரீட்சை மற்றும் மதிப்பீட்டினைப் பூர்த்திசெய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய பரீட்சார்த்தியின் உளதாம் அனுபவம், தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் ஏதேனுமிருப்பின், கப்பற்றலைவர் மற்றும் கப்பற் துணைத்தலைவர்களின் சம்பந்தப்பட்ட பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தகைமைபெறும் வணிகக் கப்பல் கடற்பயண சேவை, பயிற்சி மற்றும் மதிப்பீட்டைத் தீர்மானிக்கின்றமைக்கான அடிப்படையை உருவாக்குதல் வேண்டும். தோதான பிரதான பரீட்சகரினால் தீர்மானிக்கப்பட்டவாறான 500 மொத்தத் தொன்னுக்குக் குறைந்த இலங்கைக் கடற்படைக் கப்பலில் புரியப்பட்ட உந்துகின்ற நேரமானது அங்கீகரிக்கப்பட்ட கடற்சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கப்பற்றள அலுவலர்களும் கப்பற்றுணையாளர்களும்*

18. (1) கப்பற்றள அலுவலர்களுக்கும் கப்பற் துணையாளர்களுக்கும் தகைமையளிக்கும் கடற்சேவை என்பது கப்பலில் ஈடுபடுத்தப்பட்ட தேதியிலிருந்து கப்பலிலிருந்து விடுவிக்கப்படும் தேதிவரை கப்பலில் செலவழித்த நேரம் என்று பொருளாகும்.

(2) துறைமுகத்திலுள்ள அல்லது இறங்குதுறையிலுள்ள அல்லது நிர்மாணத்தின் கீழுள்ள அல்லது நங்கூரமிட்டுள்ள கப்பல்களில் ஆற்றப்படும் சேவை தகைமையளிக்கும் கடற்பயணச் சேவையின் பாகமாகக் கருதப்படலாம். நிறைவேற்றப்பட்ட கடமைகள் கடற்பயணச் சேவையாகக் கருதப்படுவதற்குத் தோதானதெனச் சான்றுப்படுத்தி சேவையாற்றப்பட்ட கலன்களில் தலைவர்களால் ஒப்பமிடப்பட்ட

கூற்றுக்கள் கொண்டு இது தொடர்பான உரிமைக் கோரிக்கைகள் ஆதாதரப்படுத்தப்பட வேண்டும். இத்தலைப்பின்கீழான தகைமையளிக்கும் கடற்சேவை மூன்று மாதங்களை விஞ்சுதல் ஆகாது.

(3) இருகாவல் கப்பல்களில் தகைமைச் சான்றிதழை வைத்திருக்கும்போது ஆகக்கூடிய ஆறுமாத காவல்சேவை உண்மையாகப் புரியப்பட்ட சேவையின் ஐந்திலொரு மடங்காகக் கணிக்கப்படமுடியும்.

*கடல்சார் எந்திரவியல் அலுவலர்கள் மற்றும் இயந்திர அறைக் கப்பல் துணையாளர்களும்*

19. (1) வேறு வகையாகக் கூறப்படுமிடத்துத் தவிர, கடல்சார் எந்திர அலுவலர்களுக்கும் இயந்திர அறைக் கப்பற்றுணையாளர்களுக்கும் தகைமையளிக்கும் கடற்பயணச் சேவை என்பது கப்பல்களில் ஈடுபடுத்தப்பட்ட தேதியிலிருந்து அவற்றிலிருந்து விடுபடும் தேதிவரை கீழே (2)ஆம் பந்திக்கமைவாக, பூரண பயன்பாட்டிலுள்ள செலுத்து இயந்திரசாதனத்துடன் அல்லது துணைநிலை இயந்திர சாதனத்துடன்கூடிய கப்பல்களில் செலவிடப்பட்ட நேரம் என்று பொருளாகும்.

(2) கணிசமான அளவு காலப்பகுதிகளுக்கு கடற்பயணத்தில் ஈடுபடாத கப்பல்களில் பகுதியளவிலான அல்லது பூரண சேவை புரியப்பட்டுள்ளவிடத்து தரித்து நின்ற உண்மையான நாட்களை நேரத்தில் கூறும் கப்பற்றலைவரிடமிருந்து பெறப்பட்ட கூற்று காண்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தகைமையளிக்கும் கடற்பயணச் சேவை தரித்துநிற்றலில் உண்மையாகச் செலவிடப்பட்ட நாட்களின் தொகையில் ஒன்றரை மடங்கு, தகைமையளிக்கும் சேவைக்காலப்பகுதியாகக் கணிக்கப்படுதல் வேண்டும். எவ்விடயத்திலும் சம்பந்தப்பட்ட காலப்பகுதியின்போது கப்பலில் செலவிடப்பட்ட உண்மையான நேரத்தை விஞ்சுதலாகாது.

(3) பாரம்பரிய காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட கப்பல்கள் தவிர்ந்த ஏனைய கப்பல்களில் வேலை நடைமுறைகளில் தொழிலுக்கமர்த்தப்பட்ட எந்திரவியல் அலுவலர்களால் புரியப்பட்ட கடற்பயணச் சேவை, அத்தகைய வேலை நடைமுறை சமமான அனுபவத்தைக் கொடுக்கும் என பிரதான பரீட்சகர் திருப்தியடைந்தால் தகைமையளிக்கும் கடற்பயணச் சேவையாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

*பரீட்சைகள்*

20. (1) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் தகைமைச் சான்றிதழுக்கான அல்லது புறக்குறிப்புப் பெறுவதற்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் அத்தகைய சான்றிதழ் அல்லது புறக்குறிப்பு வழங்கப்படுவதற்குத் தேவைப்படும் தகைமை அளவை அவர் எய்தியுள்ளார் என எழுத்தினாலான அல்லது வாய்மூலமான அல்லது எழுத்திலும் வாய்மூலமுமான பரீட்சைகளில் பிரதான பரீட்சகர்களைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

(2) ஆதரவளிக்கும் ஆவணங்களுடன் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் புறக்குறிப்புகளுக்கான சகல விண்ணப்பங்களும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக்கட்டணமொன்றைச் செலுத்தவேண்டும். இக்கட்டணம் காலத்திற்குக்காலமும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையிலும் மீளாய்வு செய்யப்படலாம். பரீட்சைக்கான தகைமைத் தேவைப்பாடுகள் எல்லாவற்றையும் விண்ணப்பகாரர் பூர்த்திசெய்தால், தகைமை அறிவித்தலொன்று வழங்கப்படும். தகைமை அறிவித்தல் செய்யப்பட்ட பரீட்சைக்குப் பரீட்சார்த்தியை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி தகுதியுடைய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் தேதி மற்றும் இடம் பற்றி அறிவித்தல் வேண்டும்.

(4) பிரதான பரீட்சகர் பரீட்சைக்கான பாடங்களையும் பாடவிதானத்தையும் தீர்மானிக்கலாம். அத்துடன் அவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அமையச் செய்யும் நோக்கத்திற்காக காலத்திற்குக்காலம் மாற்றலாம் அல்லது திருத்தலாம்.

(5) பணிப்பாளர் பரீட்சைகள் முறையாக நடைபெறுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய செயல் எல்லாவற்றையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(6) தகைமை அல்லது புறக்குறிப்பு மதிப்பீட்டில் சித்தி எய்தத் தவறுகின்ற ஒரு பரீட்சார்த்தி, பிரதான பரீட்சகரின் தற்றுணிவின்பேரில், காலத்தண்டம் வழங்கப்படலாம். இதன்படி மீளப் பரீட்சைக்குத் தோற்றமுன்னதான காலப்பகுதிக்கான கடற்பயண சேவையை முடிக்கவேண்டும் என்ற தேவைப்பாட்டையும் இது உள்ளடக்கலாம்.

*விலக்களிப்பு*

21. சம்பந்தப்பட்ட பிரதான பரீட்சகர்கள் கப்பலின் அளவு, வலு, அதன் பயண நிலைமைகள் இவ்வொழுங்குவிதிகள் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக ஏற்பாடுடையதாகுவதை நியாயமற்றதாக்கும் அல்லது செயன்முறைக்கொவ்வாததாக்கும் இயல்பினதானது எனக் கருதினால் ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு இந்நீர்ப்பரப்புக்களில் தொழிற்படக்கூடிய ஏனைய கப்பல்களில் பாதுகாப்பை மனதிற்கொண்டு சமவாயத்தின் தேவைப்பாடுகளிலிருந்து அத்தகைய கப்பல்களின் அல்லது கப்பல்களின் வகுப்புக்களில் உள்ள கப்பல் தலைவர்களும் அலுவலர்களுக்கும் அந்த அளவுக்கு விலக்களிக்கலாம்.

*விசேட அதிகாரமளிப்பு*

22. விதிவிலக்கான அவசிய சந்தர்ப்பங்களில் பிரதான பரீட்சகரின் அபிப்பிராயப்படி ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சுற்றாடலுக்கு ஆபத்து ஏற்படுத்தமாட்டாதெனின், அவர் எந்தத் தன்மைக்குத் தோதான சான்றிதழ் வைத்திராது இருக்கின்றாரோ, அந்தத் தன்மையில் ஆறு மாதங்களுக்கு மேற்படாத குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு குறித்துரைக்கப்பட்ட கப்பலில் சேவை புரிவதற்கு பெயர் குறித்துரைக்கப்பட்ட கடலோடியை அனுமதித்து சமவாயத்தின் VIII ஆம் உறுப்புரைக்கிணங்க விட்டுவிடுகையொன்றை வழங்கலாம். ஆயின், எவ்வாளுக்கு விசேட அதிகாரமளிப்பு வழங்கப்படவேண்டுமோ அவ்வாள் திருப்திகரமான முறையில் வெற்றிடமான பதவியை நிரப்புவதற்கு போதிய தகைமை பெற்றவராதல் வேண்டும்.

*மீளச்செல்லுபடியாகுதல்*

23.(1) அத்தியாயம் VI தவிர்ந்த சமவாயத்தின் ஏதேனும் அத்தியாயத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கப்பற்றலைவன், அலுவலர் மற்றும் வானொலி தொழிற்படுத்துநர் ஒவ்வொருவரும் அவர் கடலில் கடமைபுரிந்துகொண்டிருப்பவராக அல்லது கரையில் ஒரு காலப்பகுதியின் பின்னர் கடலுக்குத் திரும்ப எண்ணங்கொண்டவராகவிருப்பின் அவர் ஐந்து ஆண்டுகளுக்கு விஞ்சாத இடைவேளைகளில் கடற்பயண சேவைக்கு தகைமை பெறுவதைத் தொடரும் நோக்கில் பின்வருவற்றுக்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் I/9ஆம் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படும் மருத்துவ பொருத்தமான தன்மையின் தராதரங்கள் அடைவதற்கும்;

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் AI/11ஆம் பிரிவிற்கிணங்க தொடர்ச்சியான உயர்தொழில் தகுதியாந்தன்மையைத் தாபிப்பதற்கும்.

(2) கப்பற்றலைவன், அலுவலர் மற்றும் வானொலி தொழிற்படுத்துநர் ஒவ்வொருவரும், விசேட பயிற்சித் தேவைப்பாடுகள் சர்வதேச ரீதியாக உடன்பட்டுள்ள கப்பலில் கடற்பயண சேவையைத் தொடருவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தோதான பயிற்சியை சிறப்பாகப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(3) கப்பற்றலைவன் மற்றும் அலுவலர்கள் தாங்கிக் கப்பல்களில் கடற்பயண சேவையைத் தொடருவதற்கு (1)ஆம் உப ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளை அடைதல் வேண்டுமென்பதுடன் ஐந்து ஆண்டுகளுக்கு விஞ்சாத இடைவேளைகளில் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 3ஆம் பந்தியின் AI/11ஆம் பிரிவிற்கிணங்க தாங்கிக் கப்பல்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழில் தகுதியாந்தன்மையைத் தாபிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) ஜிஎம்டிஎஸ்எஸ் பொதுவான தொழிற்படுத்துநரின் புறக்குறிப்பிடுதலானது ஐந்து ஆண்டுகள் இடைவேளையில் மீளச் செல்லுபடியாக்குதல் வேண்டும்; ஆயின் வானொலி தொழிற்படுத்துநர் தோதான தகைமையில் பன்னிரண்டு மாதங்கள் கடற்சேவையைக் கொண்டிருப்பின், மீளச் செல்லுபடியாக்கல் தேதிக்கு நேர்முற்போந்த ஐந்து ஆண்டுகளினுள் மீளச் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்.

(5) 1998ஆம் ஆண்டு யூலை 17ஆந் தேதிய 1036/21ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது மீளச் செல்லுபடியாக்கப்பட்ட கப்பற்றலைவராக, அலுவலராக, வானொலி தொழிற்படுத்துநராக தகைமைச் சான்றிதழ் மற்றும் புறக்குறிப்பிடுதலை வைத்திருக்கும் எல்லோரும் ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளையும் கருத்திற்கெடுத்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தோதான வலுவூட்டும் மற்றும் புதுப்பிக்கும் பயிற்சிநெறி அல்லது மதிப்பீட்டை செய்யத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்மூலம் அவர்கள் இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ளவாறான தோதான சான்றிதழுக்கென குறித்துரைக்கப்படும் தகைமை மட்டமொன்றை அடைந்திருப்பதாக பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்தி செய்வதுடன், வைத்திருப்பவர் சான்றிதழளிக்கப்பட்ட தகைமையொன்றில் கடற்பயண கப்பலில் சேவை புரிய இயலுமாகவிருக்க தொடர்வதற்கு விரும்பினால் 2016, திசெம்பர் 31ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ சான்றிதழ்கள் அல்லது புறக்குறிப்பிடுதல்களை மீளச் செல்லுபடியாக்குவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(6) சமவாயத்திற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது மீளச் செல்லுபடியாக்கப்பட்ட கப்பற்றலைவராக, அலுவலராக அல்லது வானொலி தொழிற்படுத்துநராக தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் புறக்குறிப்பிடுதல் எல்லாம் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு மட்டுமே செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன் வைத்திருப்பவர் கடற்பயண கப்பல்களில் சேவை புரியத் தொடருவாராயின் மீள செல்லுபடியாக்குதலுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தகைமைச் சான்றிதழ் காலாவதித் தேதிக்கு முன்பதாக ஆறு மாதங்களினுள் மீளச் செல்லுபடியாக்கப்படலாம் ; அத்துடன் அத்தகைய விடயங்களில் சான்றிதழ், செல்லுபடியாந்தன்மைத் தேதியின் அல்லது செல்லுபடியாந்தன்மையின் நீடிப்புத் தேதியின் ஐந்தாவது ஆண்டு வரை மீளச் செல்லுபடியாக்கப்படலாம்.

(7) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட புலமைச் சான்றிதழ்கள், தேவைப்படுத்தப்படும் தகுதித் தராதரம் பேணப்படுவதாக சான்று வழங்கும்படி வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) 1998ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றிதழளித்தல், காவல்காத்தல்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களும் புறக்குறிப்பிடுதல்களும் 2016, திசெம்பர் 31ஆந் தேதிவரை மீளச் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்.

*உயர்தொழில் தகுதியாந்தன்மை*

24. (1) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் I/11 ஒழுங்குவிதியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக தொடரப்பட்ட உயர்தொழில் தகுதியாந்தன்மை பின்வருவனவற்றினால் தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) (i) நேர்முந்திய ஐந்து ஆண்டுக் காலப்பகுதியின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதங்கள்; அல்லது

(ii) மீளச் செல்லுபடியாக்குதலுக்கு உடன் முன்பதாக ஆறு மாதங்கள் முந்திய காலப்பகுதியின்போது மொத்தத்தில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு,

வைத்திருக்கப்படும் சான்றிதழுக்குத் தோதான பணிகளை அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைப் புரிவதன்மூலம்; அல்லது

(ஆ) பந்தி (அ)(i)இல் தேவைப்படுத்தப்படும் கடற்பயண சேவைக்குச் சமமாக இருக்கவேண்டிய பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்படும் புரியப்பட்ட பணிகளைக் கொண்டிருப்பதன்மூலம்; அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையொன்றைச் சித்தியடைவதன்மூலம்;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறி அல்லது நெறிகளைச் சிறப்பாக முடிப்பதன்மூலம்; அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையை முடித்துக்கொண்டு மேலான தகைமையொன்றில் அல்லது எந்தத் தரத்திற்கு சான்றிதழ் செல்லுபடியானதோ அந்த தரத்தை எடுப்பதற்கு உடன்முன்பதாக வைத்திருக்கப்படும் எந்த சான்றிதழ் செல்லுபடியானதாக உள்ளதோ அந்தச் சான்றிதழிலும் பார்க்க குறைவான அலுவலர் தரமொன்றில் மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு வைத்திருக்கப்படும் சான்றிதழுக்கு தோதான பணிகளைப் புரிவதன்மூலம்.

(2) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் I/ 11 ஆம் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படும் வலுவூட்டும் மற்றும் புதுப்பிக்கும் பயிற்சிநெறிகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கடலில் உயிர் பாதுகாப்பு, கடல்சார் சூழலின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் மற்றும் சம்பந்தப்பட்ட தகுதியாந்தன்மை தராதரத்தின் ஏதேனும் புதுப்பித்தலைக் கவனத்திற்கொண்டு சம்பந்தப்படும் தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளில் மாற்றங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) பின்வருவனவற்றின்மூலம் எஸ்ரிசிடபிள்யூ கோவையின்; I/11 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக தாங்கிக் கப்பல்களுக்கான தொடர்ச்சியான உயர்தொழில் தகுதியாந்தன்மை தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவை, முற்போந்த ஐந்து ஆண்டுகள் காலத்தின்போது மொத்தத்தில் ஆகக் குறைந்தது மூன்று மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு வைத்திருக்கப்படும் தாங்கிக் கப்பல் சான்றிதழ் அல்லது புறக்குறிப்பிடுதலுக்குத் தோதான கடமைகளைப் புரிவதன்மூலம்; அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தோதான பயிற்சி நெறிகளை சிறப்பாக முடிப்பதன்மூலம்.

*பயிற்சிக் கப்பலின் பயன்பாடு*

25. எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-I/12 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள செயற் தராதரங்கள் மற்றும் வேறு ஏற்பாடுகள் அத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் சான்றிதழுக்கான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் A யில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகள் பின்வருவன தொடர்பில் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்:-

(அ) எல்லா கட்டாயமான பயிற்சிக் கப்பல் அடிப்படையிலான பயிற்சி;

(ஆ) பயிற்சிக் கப்பலொன்றின் வழிவகைமூலம் நிறைவேற்றப்படும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் A யினால் தேவைப்படுத்தப்படும் தகுதியாந்தன்மையின் ஏதேனும் மதிப்பீடு; அத்துடன்

(இ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம் Aயினால் தேவைப்படுத்தப்படும் தொடர்ச்சியான புலமைக்கான பயிற்சிக்கப்பல் மூலமான ஏதேனும் விளக்கங்கள்.

*எல்லாக் கடலோடிகளுக்குமான பாதுகாப்பு பரீட்சயமாதல், அடிப்படைப் பயிற்சி மற்றும் அறிவுறுத்தலுக்கான ஆகக்குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்*

26. (1) கப்பல் கடமைகள் குறித்தொதுக்க முன்னர் பயணிகள் தவிர்ந்த கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்ட எல்லா ஆட்களும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-1 என்னும் பிரிவுக்கிணங்க பரிச்சயப்படுத்தப்படுதல் மற்றும் அடிப்படை பாதுகாப்பு பயிற்சி அல்லது அறிவுறுத்தல் பெற்றுக்கொள்ள வேண்டும்; அத்துடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தோதான தகைமைத் தராதரத்தையும் எய்துதல் வேண்டும். பரிச்சியப்படுத்தலிலும் அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சியிலும் தோதான தகைமைத் தராதரத்தையும் எய்தியுள்ள ஆட்கள் அனைவரதும் பதிவேடொன்று கம்பெனியினாலும் கலத் தலைவராலும் பேணப்படுதல் வேண்டும்.

(2) கப்பலின் தொழிற்பாட்டில் குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு அல்லது தீழ்ப்பு தடுப்புக் கடமைகளைப் புரியவென கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ள கடலோடிகள் ஏதேனும் கப்பலில் கடமைகள் குறித்தொதுக்கப்படமுன்னதான ஆளுக்குரிய உயிர்க்காப்புச் செயல்நுணுக்கம் (எஸ்ரிசீடபிள்யூ கோவையில் ஏ- VI/1 -2), தீ தடுப்பு, தீயணைப்பு (எஸ்ரிசீடபிள்யூ கோவையின் ஏ- VI/1-2), ஆரம்ப முதலுதவி (எஸ்ரிசீடபிள்யூ கோவையின் ஏ- VI/1-3), ஆளுக்குரிய பாதுகாப்பு மற்றும் (எஸ்ரிசீடபிள்யூ கோவையில் ஏ- VI/1-4) இல் தரப்பட்டவாறு சமூகப் பொறுப்புகள் என்பவற்றில் தோதான அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(3) கீழே தரப்பட்ட (4) தொடக்கம் (6) வரையிலான உப ஒழுங்குவிதிகளுக்கிணங்க தகுதிபெற்ற கடலோடிகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 1-1 மற்றும் ஏ-VI/ 1-2 ஆம் அட்டவணைகளின் நிரல் 1 இல் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பெடுப்பதற்கு தேவைப்படுத்தப்படும் தகுதியாந்தன்மைத் தராதரத்தைப் பேணுவதாக சான்று வழங்குவதற்கு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*தனிப்பட்ட உயிர்காப்பு தொழில்நுட்பங்களில் புலமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(4) தனிப்பட்ட உயிர்காப்பு தொழில்நுட்பங்களில் புலமைச் சான்றிதழொன்று பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்-

(i) தனிப்பட்ட உயிர்காப்பு தொழில்நுட்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1-1 ஆம் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்ட தகைமைபெறும் தராதரத்தை அடைதல் வேண்டும்.

*தீ தடுப்பு மற்றும் தீயுடன் போராடுதலில் புலமைச் சான்றிதழை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(5) தீ தடுப்பு மற்றும் தீயுடன் போராடுதலில் புலமைச் சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்-

(i) தீ தடுப்பு மற்றும் தீயுடன் போராடுதலில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-2 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகைமைபெறும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

*ஆரம்ப முதலுதவியில் புலமைச்சான்றிதழ்களின் வழங்குதலுக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(6) ஆரம்ப முதலுதவியில் புலமைச்சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் -

(i) ஆரம்ப முதலுதவியில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/1 -3 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகைமை மற்றும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

*தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புடைமையில் புலமைச்சான்றிதழை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(7) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புடைமையில் புலமைச்சான்றிதழொன்றுக்குப் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்-

(i) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புடைமையில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - VI/1- 4 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகைமைபெறும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

*உயிர்காப்புக்கலை மற்றும் விரைவு மீட்பு வள்ளங்கள் தவிர்ந்த மீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழ்களை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(8) (அ) உயிர்க்காப்புக்கலை மற்றும் விரைவு மீட்பு வள்ளங்கள் தவிர்ந்த மீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்,-

(i) பயிற்சிநெறி முடிவடையும் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும்;

(ii) 12 மாதங்களுக்குக் குறையாத அங்கீகரிக்கப்பட்ட கடற்பயண சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கடலுக்கு முன்னபதான பயிற்சிநெறியைப் பின்பற்றியிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட 6 மாதங்களுக்குக் குறையாத கடற்பயண சேவையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) உயிர்க்காப்பில் அங்கீகரிக்கப்பட்ட புலமைப்பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) உயிர்க்காப்புக்கலை மற்றும் விரைவுமீட்பு வள்ளங்கள் தவிர்ந்த மீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழை வைத்திருக்கின்ற கடலோடிகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-1 ஆம் அட்டவணையின் I ஆம் நிரலில் நிரலிடப்பட்டுள்ள பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்கு தகைமைபெறத் தேவைப்படுத்தப்படும் தராதரங்களை பேணிக்கொண்டுள்ளதாக சான்று வழங்கும்படி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளிலும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*விரைவுமீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழ்களை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

9. (அ) விரைவு மீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்,-

(i) விரைவுமீட்பு வள்ளங்கள் தவிர்ந்த உயிர்காப்புக் கலை மற்றும் மீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழை வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்;

(ii) விரைவு மீட்பு வள்ளங்களில் புலமையின் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 7-10 வரையான பந்திகளில் ஏ- VI/ 2 பிரிவில் தரப்பட்டுள்ள விரைவுமீட்பு வள்ளங்களில் புலமைச்சான்றிதழுக்கான தகைமை பெறும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

(ஆ) விரைவுமீட்பு வள்ளங்களின் புலமைச்சான்றிதழை வைத்திருக்கின்ற கடலோடிகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/2-2 ஆம் அட்டவணையின் நிரல் I இல் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்குத் தகைமைபெறத் தேவைப்படுத்தப்படும் தராதரங்களைப் பேணிக்கொண்டுள்ளதாக சான்று வழங்கும்படி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*உயர் தரத்திலான தீயுடன் போராடுதலில் தகைமைச் சான்றிதழொன்றை வழங்குவதற்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(10) (அ) தீயுடன் போராடுகின்ற தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்த குறித்துரைக்கப்பட்ட கடலோடிகள் உயர்தரத்தினாலான தீயுடன் போராடுதலில் தகைமைச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) உயர்தரத்தினாலான தீயுடன் போராடுதலில் தகைமைச் சான்றிதழுக்கென பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்,-

(i) உயர்தரத்தினாலான தீயுடன் போராடுதலில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியினைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பந்தி 1-4 வரையில் ஏ-VI/ 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமைபெறும் தராதரத்தை அடைதலும் வேண்டும்.

(இ) உயர்தரத்திலான தீயுடன் போராடுதலில் சான்றிதழை வைத்திருக்கின்ற கடலோடிகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/3 அட்டவணையின் I ஆம் நிரலில் நிரற்படுத்தப்பட்டுள்ள பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்குத் தகைமை பெறத் தேவைப்படுத்தப்படும் தராதரங்களைப் பேணிக்கொண்டிருப்பதாக சான்று வழங்கும்படி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*மருத்துவ முதலுதவியில் தகைமைச் சான்றிதழின் வழங்குதலுக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(11) (அ) கப்பலில் மருத்துவ முதலுதவியை வழங்குவதற்கு குறித்தளிக்கப்பட்ட கடலோடிகள் மருத்துவ முதலுதவியில் தகைமைச் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவ முதலுதவியில் தகைமைச் சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்,-

(i) மருத்துவ முதலுதவியில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1-3 வரையிலான பந்திகள், ஏ-VI/4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகைமைபெறும் தராதரத்தை அடைதலும் வேண்டும்.

(இ) மருத்துவ முதலுதவியில் புலமைச்சான்றிதழை வைத்திருக்கின்ற கடலோடிகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/4-1 ஆம் அட்டவணையின் 1ஆம் நிரலில் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்க தகைமைபெறத் தேவைப்படுத்தப்படும் தராதரங்களைப் பேணிக்கொண்டிருப்பதாக சான்று வழங்கும்படி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*மருத்துவக் கவனிப்பில் தகைமைச் சான்றிதழின் வழங்கலுக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகள்*

(12) (அ) கப்பலில் மருத்துவ கவனிப்பைப் பொறுப்பெடுப்பதற்கு குறித்தளிக்கப்பட்ட கடலோடிகள் மருத்துவக் கவனிப்பில் தகைமைச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) மருத்துவக் கவனிப்பில் தகைமைச் சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்,-

(i) மருத்துவக் கவனிப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 4-6 வரையிலான பந்திகள், ஏ-VI/ 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமைபெறும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

*கப்பல் பாதுகாப்பு அலுவலர்களுக்கான தகைமைச் சான்றிதழை வழங்குவதற்கான ஆகக்குறைந்த கட்டாயத் தேவைப்பாடுகள்*

(13) (அ) கப்பல் பாதுகாப்பு அலுவலர்களென குறித்தளிக்கப்பட்ட கடலோடிகள் கப்பல் பாதுகாப்பு அலுவலருக்கான தகைமைச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) கப்பல் பாதுகாப்பு அலுவலர்களுக்கான தகைமைச் சான்றிதழொன்றுக்கான பரீட்சார்த்தி ஒவ்வொருவரும்-

(i) அங்கீகரிக்கப்பட்ட 12 மாதங்களுக்குக் குறையாத கடற்பயண சேவையை அல்லது தோதான கடற்பயண சேவை மற்றும் கப்பற் தொழிற்பாடுகளில் அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) கப்பல் பாதுகாப்பில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்; அத்துடன்

(iii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 1-4 வரையிலான பந்தி, ஏ- VI/5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் தகைமைபெறும் தராதரங்களை அடைதலும் வேண்டும்.

*எல்லாக் கடலோடிகளுக்கும் பாதுகாப்பு தொடர்புபட்ட மற்றும் அறிவுறுத்தலுக்கான ஆகக்குறைந்த கட்டாய தேவைப்பாடுகள்*

*பாதுகாப்பு தொடர்புபட்ட பரீட்சைப்படுத்தல் பயிற்சிக்கான தகைமைபெறும் தராதரங்கள்*

(14) (அ) கப்பலில் கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்கு முன்பதாக, பயணிகள் தவிர்ந்த ஐஎஸ்பிஎஸ் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படும் கடற்பயண கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களும் பின்வருவனவற்றுக்கு இயலுமானதாகவிருப்பதற்கு எஸ்ரிசிடபிள்யூ கோவையின் பாகம"ஆ" வில் தரப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்து, அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்புபட்ட பரீட்சயமாக்கல் பயிற்சியைப் பெறுதல் வேண்டும்:-

(i) கடற்கொள்ளை அல்லது ஆயுதம் தாங்கிய கொள்ளை அச்சுறுத்தல் அல்லது தாக்குதல் உட்பட பாதுகாப்பு சம்பவமொன்றை அறிக்கையிடுதல்;

(ii) அவர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலொன்றை அடையாளங்காணும்போது பின்பற்றவேண்டிய நடவடிமுறைகளை அறிந்திருத்தல்; அத்துடன்

(iii) பாதுகாப்பு தொடர்புபட்ட அவசர மற்றும் எதிர்பாரா நிகழ்வு நடவடிக்கைகளில் பங்கெடுத்தல்.

(ஆ) கடற்பயணக் கப்பலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலிலமர்த்தப்பட்டுள்ள பாதுகாப்பு கடமைகள் குறித்தளிக்கப்பட்ட கடலோடிகள் அத்தகைய கடமைகள் குறித்தளிக்கப்படுவதற்கு முன்பதாக, எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ''ஆ'' என்னும் பாகத்தில் தரப்பட்டுள்ள வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்து தமது குறித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் பாதுகாப்பு தொடர்புபட்ட பரிச்சயப்படுத்தல் பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

(இ) பாதுகாப்பு தொடர்புபட்ட பரிச்சயப்படுத்தல் பயிற்சி கப்பல் பாதுகாப்பு அலுவலரினால் அல்லது அதற்குச் சமமாக தகைமைபெற்ற ஆளினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

*பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சிக்கான தகைமைபெறும் தராதரங்கள்*

(ஈ) குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்புக் கடமைகள் அன்றி கப்பலின் நிரப்பு கோணத்தின் பாகமாக அக்கப்பலின் அலுவல்கள் மீது ஐஎஸ்பிஎஸ் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தேவைப்படுத்தப்படுகின்ற கப்பலில் ஏதேனும் தகைமையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழிலிலமர்த்தப்பட்டுள்ள கடலோடிகள் ஏதேனும் கப்பலில் கடமைகள் குறித்தளிக்கப்பட முன்னதாக-

(i) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-1 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறாக பாதுகாப்பு விழிப்புணர்வில் தோதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அல்லது அறிவுறுத்தலைப் பெறுதல் வேண்டும்;

(ii) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-1 ஆம் அட்டவணையின் I ஆம் நிரலில் நிரலிடப்பட்டுள்ள பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்கு தகைமைபெற தேவைப்படுத்தப்படும் தராதரத்தை எய்தியிருப்பதாக சான்று வழங்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்;

(அ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-1 ஆம் அட்டவணையின் 3ஆம் மற்றும் 4ஆம் நிரல்களில் வெளிப்படுத்தப்பட்ட தகைமையை மதிப்பிடுகின்ற முறை மற்றும் கட்டளைக்கற்களுக்கிணங்க தகைமை பரிசோதனை மூலமும்; அத்துடன்

(ஆ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/ 6-1 ஆம் அட்டவணையின் 2ஆம் நிரலில் நிரலிடப்பட்ட விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக பரீட்சை அல்லது தொடர்ச்சியான மதிப்பீடுமூலம்.

*குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு கடமைகளுடனான கடலோடிகளுக்கான தகைமைபெறும் தராதரங்கள்*

(உ) கடற்கொள்ளைக்கெதிரானது மற்றும் ஆயுதந்தாங்கிய கொள்ளை தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு எதிரானது உட்பட பாதுகாப்புக் கடமைகளைப் புரிவதற்கு குறித்தளிக்கப்பட்ட கடலோடிகள் ஒவ்வொருவரும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/ 6-2ஆம் அட்டவணையின் Iஆம் நிரலில் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்கத் தகைமை பரிசோதனை தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-2ஆம் அட்டவணையின் 2ஆம் நிரலில் நிரலிடப்பட்ட விடயங்களின் அறிவு மட்டம் கடற்கொள்ளைக்கு எதிரான மற்றும் ஆயுதந்தாங்கிய கொள்ளை தொடர்புபட்ட செயற்பாடு கருத்திற்கு எதிரானது உட்பட பாதுகாப்புக் கடமைகள் குறித்தளிக்கப்பட்ட கப்பலில் புரிவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியையும் இயலச்செய்யப் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

(எ) சான்றுறுதிக்கான பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றினூடாக தகைமை பெறத் தேவைப்படுத்தப்படும் தராதரத்தை எய்தியிருப்பதாக சான்று வழங்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(i) எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ- VI/6-2 ஆம் அட்டவணையின் 3ஆம் மற்றும் 4ஆம் நிரல்களில் வெளிப்படுத்தப்பட்ட தகைமையை மதிப்பிடுகின்ற தகைமைப் பரீட்சைக்கான முறைகள் மற்றும் கட்டளைகளுக்கிணங்க அவ்வட்டவணையின் I ஆம் நிரலில் நிரலிடப்பட்ட பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுப்பேற்கத் தகைமைபெறு பரீட்சை; அத்துடன்

(ii) ஏ- VI/6-2 ஆம் அட்டவணையின் 2ஆம் நிரலில் தரப்பட்டுள்ள சாதனங்களை உள்ளடக்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றின் பாகமாகப் பரீட்சை மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு.

*ஏனைய நாடுகளில் வழங்கப்பட்ட சான்றிதழ்களை அங்கீகரித்தல்*

27. (1) பணிப்பாளர் தலைமையதிபதி வேறு தரப்பினரால் எஸ்ரிசிடபிள்யூ கோவையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாக முகாமை மட்டத்தில் VII/1ஆம் ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது II/2, III/2 அல்லது III/3ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களை, இலங்கையர் கப்பலில் சேவைக்கென அதேமட்டத்தில் இலங்கையர் தகைமைச் சான்றிதழ் அல்லது புறக்குறிப்பிடுதலுக்குச் சமமானதொன்றாக அங்கீகரிக்கலாம்; அயின், -

(அ) அந்நாட்டில் பின்பற்றப்பட்ட சான்றழிப்பு முறைமையும் நடைமுறையும் சமவாயத்திற்கிணங்க சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக முறையாகக் காணப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தகைமைத் தராதரங்கள், சான்றிதழ் வழங்கும் முறையும் புறக்குறிப்பிடலும், பதிவேடு வைத்திருக்கும் முறை என்பன யாவும் சமவாயத்துக்குப் பூரணமாக இணக்கமாகவுள்ளதென, பரிசோதனை வசதிகள் மற்றும் நடைமுறைகள் உட்பட அவசியமான வழிவகைகள் மூலம் பணிப்பாளர் தலைமையதிபதி உறுதிப்படுத்தவேண்டும்; அத்துடன்

(இ) சமவாயத்திற்கு இணக்கமாக வழங்கப்பட்ட பயிற்சிக்கும் சான்றளிப்பதற்குமான ஒழுங்குகளில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் பற்றி உடனடியாக அறிவிப்பு கொடுக்கப்படுமெனச் சம்பந்தப்பட்ட நாட்டுடன் ஒரு பொறுப்பேற்பு உடன்பட்டுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதிகளுக்கான (ஆ) என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு முகாமை மட்டத்தில் தகைமைச் சான்றிதழ்கள் அல்லது புறக்குறிப்பு வைத்திருப்பவர்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சான்றிதழ் அங்கீகரிப்பதற்கான புறக்குறிப்பை இடமுன்னர் அவர்கள் புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் தொடர்புபட்ட இலங்கையின் கடல்சார் சட்டம் பற்றிய தோதான அறிக்கையை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள் என, மதிப்பீடொன்றை வெற்றிகரமாகப் பூரணப்படுத்துவதன்மூலம் பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குவிதிகளின் (1)ஆம் பந்தியின் தேவைப்பாடு எப்படியிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி சந்தர்ப்பம் தேவைப்படுமானால், வானொலி ஒழுங்குவிதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, வானொலி அலுவலர் அல்லது வானொலி இயக்குநர் தவிர்ந்த ஒரு தன்மையில் சேவையாற்றுவதற்கு, வேறொரு நாட்டின் கப்பல்களில் பயன்படுத்துவதற்கு அந்நாட்டினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வழங்கப்பட்டும் புறக்குறிப்பிடப்பட்டதும் ஆனால் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடைய கப்பல்களில் சேவை புரிவதற்குத் தோதாகச் செய்யும் வகையில் இன்னமும் புறக்குறிப்பிடப்படாமலும் உள்ள தோதான செல்லுபடியாகும் சான்றிதழை வைத்திருக்கும்போது இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடைய கப்பலில் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு அனுமதிக்கலாம். ஆயினும் புறக்குறிப்பொன்றுக்கான விண்ணப்பமொன்று பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஆவணச் சான்றொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*பயிற்சி நிறுவனங்களின் பங்கு*

28. (1) பயிற்சி நிறுவனங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தவேண்டும் ,-

(அ) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் சான்றளிப்பதற்காக கடலோடிகளின் சகல பயிற்சியும் மதிப்பீடும் சொல்லப்பட்ட ஒழுங்குவிதியின் இயைபான ஏற்பாடுகளுக்கும் பணிப்பாளரினால் இடப்பட்ட ஏனைய தேவைப்பாடுகளுக்கும் இணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சிக்கும் மதிப்பீட்டுக்கும் இடையே ஓரளவு சுதந்திரம் பேணப்படுதல் வேண்டும்.

(இ) நிறுவகத்தினால் பயிற்றப்பட்ட ஆட்களின் பதிவேடொன்று பேணப்பட்டு அத்தகைய தகவல் வேண்டப்படும்போது பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் பிரதம பரீட்சகருக்கும், கம்பனிகளுக்கும் கிடைக்கச்செய்வித்தல் வேண்டும்.

(ஈ) ஒழுங்கமைப்புக்களினால் வெளியிடப்படும் மாதிரிப் பயிற்சிநெறி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தயாரிப்படுத்தலில் வழிகாட்டுநெறியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) பணிப்பாளர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையில் எஸ்ரிசிடபிள்யூ கோவைக்கான திருத்தங்கள் மற்றும் கைத்தொழில் புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்திகள் உட்பட வேறு தோதான ஆவணங்களுடன் இசைவாக கற்கைநெறி புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சார்பற்ற நிறுவனங்களினால் கொண்டுநடாத்தப்படும் சகல பயிற்சி, தகைமை மதிப்பீடு, சான்றளித்தல், புறக்குறிப்பிடுதல் மற்றும் மீள்செல்லுபடியாக்கல் செயற்பாடுகளும் பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் அனுபவம் சம்பந்தமானவை உட்பட, வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதை உறுதிப்படுத்தும் தரநிர்ணய முறைமூலம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படல் வேண்டும்.

(3) அரசாங்க நிறுவனங்களினால் பயிற்சி, தகைமை மதிப்பீடு, சான்றளித்தல், புறக்குறிப்பிடுதல் மற்றும் மீளச் செல்லுபடியாக்கும் செயற்பாடுகள் கொண்டுநடாத்தப்படும்போது தரத் தராதர நிர்ணய முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் கொண்டுநடாத்தப்படும் பயிற்சி, தகைமை மதிப்பீடு, சான்றளித்தல், புறக்குறிப்பிடுதல் மற்றும் மீளச் செல்லுபடியாக்கும் செயற்பாடுகள், அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட சுயேச்சைக் குழாமொன்றினால் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கால இடைவெளிகளில், எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-I/8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மதிப்பிடப்படுதல் வேண்டும். அத்தகைய மதிப்பீடுகளின் அறிக்கைகள் பணிப்பாளரினால் சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பின் செயலாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*பயிற்சி நிறுவனங்களுக்கான தேவைப்பாடுகள்*

(5) எல்லா பயிற்சி நிறுவகங்களும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறான உபகரணங்கள் மற்றும் வசதிகள் தொடர்பிலான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(6) எல்லா அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவகமொன்றாகச் செயலாற்றுவதற்கு ஆண்டு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் இலவசக் கல்வியை வழங்குகின்ற பயிற்சி நிறுவனங்கள் உரிமக் கட்டணக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(7) பயிற்சி நிறுவகமானது சமவாயத்துடனும் மற்றும் ஏற்புடையதான ஒழுங்குவிதிகள் மற்றும் தராதரங்களுடனும் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்த பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் குழுவொன்றினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(8) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் வசதிகள், வளங்கள் மற்றும் ஒப்படைப்பு என்பன சமவாயத்திற்கும் ஏற்புடையதான ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரங்களுக்கும் இணங்காதிருப்பதாக பணிப்பாளர் தலைமையதிபதி திருப்தியடைந்திருந்தால், அவர் ஒன்றில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பயிற்சிநெறி அல்லது பயிற்சிநெறிகளின் எண்ணிக்கைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை மீளப்பெறலாம்.

(9) எல்லா அங்கீகரிக்கப்பட்ட கடல்சார் பயிற்சி நிறுவகங்களும் அவர்களினால் வழங்கப்படும் தகைமைச் சான்றிதழ்களின் கணினியுடன் நேரடியாக இணைக்கப்பட்ட உறுதிப்படுத்தல் முறைமைக்கான வசதியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கம்பெனிக்குள்ள பொறுப்பு*

29. (1) பணிப்பாளர் தலைமையதிபதி எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - I/14ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பல்களை இயக்குகின்ற அல்லது இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க கப்பல்களில் சேவைபுரிவதற்கென கடலோடிகளை ஒதுக்குவதற்கெனப் பொறுப்பான கம்பெனிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு அத்தகைய ஒவ்வொன்றையும் தேவைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) அதன் கப்பல்களுக்கு ஒதுக்கப்பட்ட கடலோடிகள் ஒவ்வொருவரும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட தோதான சான்றிதழை வைத்திருக்கவேண்டும்;

(ஆ) கப்பல்கள் 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பாதுகாப்பு ஆள் அமர்த்துதல்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஆளமர்த்து தேவைப்பாடுகளுக்கிணங்க ஆளமர்த்தப்படுதல் வேண்டும்;

(இ) அதன் கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சகல கடலோடிகளும் தொடர்புபட்ட இயைபான ஆவணமும் தரவும் பேணப்படுவதோடு துரிதமாகக் கிடைக்கக்கூடியதாதலும் வேண்டும். அத்துடன் அவர்களது அனுபவம், பயிற்சி, மருத்துவத் தகைமை, கடமைகளில் குறித்தொதுக்கப்பட்ட திறமை என்பன தொடர்பான ஆவணங்களும் தரவுகளும் சேர்க்கப்படவேண்டும்;

(ஈ) கடலோடிகள், கப்பல்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டதும் அவர்களது குறிப்பான கடமைகளுடனும் சகல கப்பல் ஒழுங்குகளுடனும் நிறுவுகைகளுடனும் உபகரணத்துடனும் நடைமுறைகளுடனும் அவர்களது வழமையான அல்லது அவசரகாலக் கடமைகளுடன் தொடர்புபட்ட ஏனைய கப்பல் விடயங்களுடனும் தம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்;

(உ) புதிதாக தொழிலிமர்த்தப்பட்ட கடலோடிகள் ஒவ்வொருவரும் நியாயமான காலப்பகுதியொன்றின் ஒதுக்கீடானது பின்வருவனவற்றுடன் பழக்கப்படுத்துவதற்கு சந்தர்ப்பமொன்று மேற்கொள்ளப்படுகின்றதென உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(i) கடலோடிகளினால் பயன்படுத்தப்படும் அல்லது தொழிற்படுத்தப்படும் விசேட கருவிகள்;

(ii) கப்பல் விசேட காவல்காத்தல், பாதுகாப்பு, சூற்றாடல் காப்பு, பாதுகாவல் மற்றும் கடலோடிகளுக்கு குறித்தளிக்கப்படும் கடமைகளை முறையாக புரிவதற்கு தேவைப்படும் அவசர நடவடிக்கை முறைகளும் ஒழுங்குமுறைகளும்;

(ஊ) வானொலி தொழிற்படுத்துநர்கள் அவ்வாறு வானொலி தொழிற்படுத்துநர் ஒருவராகக் கடமைகளைப் பொறுப்பேற்க முன்பதாகக் கப்பலின் வானொலி உபகரணங்களுடன் பரீட்சயப்படுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) கப்பலில் பணிபுரிவோர் அவசர சூழ்நிலையொன்றிலும் பாதுகாப்பு, பாதுகாவல் அல்லது தீழ்ப்பு தடுப்பு அல்லது தணிப்பு விடயங்களில் முக்கியமான பணிகளைப் புரிகையில் தமது செயற்பாடுகளை வினைத்திறனாக ஒத்துழைத்தல் வேண்டும்;

(ஏ) எல்லாச் சான்றிதழ்களும் அத்துடன் சமவாயத்தைப் பின்பற்றி, குறித்தொதுக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்குப் பணிக்குழுவின் எவரேனும் உறுப்பினரின் தகைமைகளைக் குறிப்பிட்டு வழங்கப்பட்ட சார்புடைய ஆவணங்களும் எல்லா நேரங்களிலும் கலத்திலிருப்பதைக் கப்பற்றலைவர் உறுதிப்படுத்த வேண்டும்;

(ஐ) திருத்தப்பட்டவாறான 1972ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க இலங்கை வணிகக் கப்பற் சட்டத்தின் வாசகங்கள், சர்வதேச ஆவணங்கள் மற்றும் இயலச்செய்கின்ற ஒழுங்குவிதிகள் கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ஒ) வினைத்திறனான வாய்மொழித் தொடர்பாடல் திருத்தப்பட்டவாறாக (எஸ்ஓஎல்ஏஎஸ்) 1974ஆம் ஆண்டின் கடலில் உயிர் பாதுகாப்பிற்கான சர்வதேச சமவாயத்தின் பந்திகள் 3 மற்றும் 4, 14ஆம் ஒழுங்குவிதி, அத்தியாயம் V என்பதற்கிணங்க தமது கப்பல்களில் எல்லா நேரங்களிலும் பேணப்படுதல் வேண்டும்.

(2) கப்பலில் கடமைக்கு விடப்படுமுன்னர், பயணிகள் தவிர்ந்த ஏனைய கப்பலில் தொழிலுக்கமர்தப்பட்டுள்ள அல்லது ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-VI/1-1 எனும் பிரிவிற்கிணங்க பரிச்சயமாக்கல் மற்றும் அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சி அல்லது அறிவுறுத்துரைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் அதன்கண்கூறப்பட்ட தோதான தகைமைத் தராதரத்தை எய்துதலும் வேண்டும். பரிச்சயமாதலிலும் அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சியிலும் தோதான தகைமைத் தராதரத்தை எய்தியுள்ள எல்லா ஆட்களும் பற்றிய பதிவேடொன்று கலனின் தலைவரினாலும் கம்பெனியினாலும் பேணப்படவேண்டும்.

(3) கடலோடிகளுக்கு கைத்தொழில் புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி உட்பட எஸ்ரிசிடபிள்யூ கோவை மற்றும் தோதான ஆவணங்களுக்கு இணங்க அவர்களது அறிவைப் புதுப்பிப்பதற்கு புதுப்பித்தல் அல்லது மீட்புப் பயிற்சி வழங்கப்படுதலை கம்பெனி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கடமை மற்றும் காவல்காத்தல் தராதரங்களுக்கான பொருத்தப்பாடு*

30. (1) காவலுக்குப் பொறுப்பான அலுவலர் ஒருவராக அல்லது காவல் ஒன்றின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணையாளராகக் கடமை குறித்தளிக்கப்பட்ட அத்துடன் குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு தீழ்ப்புத் தடுப்பு மற்றும் பாதுகாவல் சம்பந்தப்பட்ட கடமைகளைக் கொண்டுள்ளவர்களான எல்லா ஆட்களும் பின்வரும் மணித்தியாலங்களுக்குக் குறையாத ஓய்வுக் காலப்பகுதியுடன் வழங்கப்படவேண்டுமென கம்பெனிகளைத் தடுப்பதற்கு இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் ஓய்வு ஆகக்குறைந்தது 10 மணித்தியாலங்கள்; அத்துடன்

(ஆ) ஏதேனும் ஏழு நாட்கள் காலப்பகுதியில் 77 மணித்தியாலங்கள்.

(2) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் ஓய்வு மணித்தியாலங்கள், இரண்டு காலப்பகுதிகளுக்கு மேற்படாத ஒன்றினுள் பிரிக்கப்படலாம்; அதனுள் ஒன்று ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்கள் அத்துடன் தொடர்ச்சியான ஓய்வுக் காலப்பகுதிகளிடையேயான இடைவேளை 14 மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

(3) ஓராம் மற்றும் (2)ஆம் உப ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படும் ஓய்வுக்காலப்பகுதிக்கான தேவைப்பாடுகள் அவசர விடயத்தில் அல்லது வேறு தொடருகின்ற தொழிற்பாட்டு நிலைமைகளில் பேணப்படத் தேவையில்லை. தேசிய சட்டங்களினாலும் ஒழுங்குவிதிகளினாலும் சர்வதேச அலுவலகங்களினாலும் விதித்துரைக்கப்படும் தீயுடன் போராடுதல் மற்றும் உயிர்க்காப்புப் படகுத் துளைகள், துளைகள் ஓய்வுகாலத்தில் குழப்பத்தைக் குறைப்பதாகவும் களைப்பைக் குறைப்பதாகவுமான முறையொன்றில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) காவல் அட்டவணைகள் அவர்கள் இலகுவாக அணுகக்கூடிய இடத்தில் வைக்கப்படுகின்ற எதன்வகை கம்பனிகளும் கப்பற்றலைவர்களும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வட்டவணைகள் கப்பலில் தொழில்புரியும் மொழி அல்லது மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தராதரப்படுத்தப்பட்ட மாதிரியொன்றில் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(5) எந்திர இடம் ஆளில்லாதுள்ளது போன்ற வேளையில் கடலோடியொருவர் அழைப்பிலுள்ளபோது, ஓய்வின் சாதாரண காலப்பகுதி அழைப்பில் அல்லாதவரினால் வேலை செய்ய குழப்பப்படுமாயின், கடலோடி போதுமான ஈடுசெய்யக்கூடிய ஓய்வுக் காலமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) கடலோடிகளின் ஓய்வின் நாளாந்த மணித்தியாலங்களின் பதிவேடு இவ்வொழுங்குவிதியுடன் இணங்கியொழுகுதலின் கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தலை அனுமதிப்பதற்கு கப்பலில் வேலை செய்கின்ற மொழி அல்லது மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தராதரப்படுத்தப்பட்ட மாதிரியொன்றில் பேணப்படுதல் வேண்டும். கப்பற்றலைவனால் அல்லது கப்பற்றலைவனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலும் கடலோடிகளினாலும் புறக்குறிப்பிடப்படவேண்டிய கடலோடிகளுடன் சம்பந்தப்பட்ட பதிவேடுகளின் பிரதியொன்று பெறப்படுதல் வேண்டும்.

(7) இந்த ஒழுங்குவிதியிலுள்ள எதுவும், கப்பலின், கப்பலிலுள்ள ஆட்கள் அல்லது கப்பற் சரக்கின் உடனடிப் பாதுகாப்புக்கென அவசியமான ஏதேனும் வேலை நேரத்தில் புரிய அல்லது கடலில் ஆபத்திலுள்ள வேறு கப்பல்கள் அல்லது ஆட்களுக்கு உதவியை வழங்குகின்ற நோக்கத்திற்கென கடலோடியொருவரைத் தேவைப்படுத்த கப்பற்றலைவனுக்குரிய உரிமையைப் பாதிப்பதாகக் கருதப்படலாகாது. இதற்கிணங்க கப்பற்றலைவன் சாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்படும் வரை அவசியமான வேலை நேரத்தைப் புரியுமாறு கடலோடியொருவரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன் ஓய்வு நேர அட்டவணையை நிறுத்தியும் வைக்கலாம். சாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர் இயலுமான விரைவில், கப்பற்றலைவன், அட்டவணைப்படுத்தப்பட்ட ஓய்வுக் காலத்தில் வேலை புரிந்துள்ள எவரேனும் கடலோடிகள் போதுமான ஓய்வுக் காலமொன்று வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(8) ஓய்வுக் காலம் ஏதேனும் 7 நாட்கள் காலப்பகுதியில் 70 மணித்தியாலங்களுக்குக் குறையாதுள்ளதென மேலே தரப்பட்ட (1)(அ) மற்றும் (2) உப ஒழுங்குவிதிகளில் குறிக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட ஓய்வு நேரத்திலிருந்து விதிவிலக்குகள் மற்றும் (1)(ஆ) உப ஒழுங்குவிதியில் வழங்கப்பட்ட வாராந்த ஓய்வு காலத்திலிருந்தான விதிவிலக்குகள் இரண்டு தொடர்ந்துவரும் வாரங்களுக்கு மேற்படாது அனுமதிக்கப்படலாகாது. கப்பலில் விதிவிலக்கின் இரண்டு காலப்பகுதிகளிடையேயான இடைவெளிகள் விதிவிலக்கின் காலப்பகுதியின் இரட்டிப்பினை விடக் குறைவாக இருத்தலாகாது.

(1)(அ) உப ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வு நேரம் மூன்று காலப்பகுதிகளுக்கு மேற்படாமல் பிரிக்கப்படலாம்; அதிலொன்று ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 6 மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன், வேறு இரண்டு காலப்பகுதியில் எதுவும் ஒரே தடவையில் ஒரு மணித்தியாலத்தைவிடக் குறைவாக இருத்தலாகாது. தொடர்ச்சியான ஓய்வுக் காலங்களிடையிலான இடைவெளிகள் 14 மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது. விதிவிலக்குகள் ஏதேனும் 7 நாட்கள் காலப்பகுதியில் இரண்டு 24 மணித்தியாலக் காலப்பகுதிக்கு அப்பால் நீடிக்கப்படுதலாகாது.

விதிவிலக்குகள், இயலுமான அளவில் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் டீ- VIII/1 ஆம் பிரிவில் களைப்பு தடுப்பு தொடர்பான வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

(9) கம்பனிகளும் கப்பற்றலைவர்களும், மதுசார துஷ்பிரயோகத்தைத் தடுக்கின்ற நோக்கத்திற்கென குறித்தளிக்கப்பட்ட பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் கடல்சார் சூழல்சார் கடமைகளைப் புரிகையில் கப்பற்றலைவர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு கடலோடிகளுக்கான அத்தகைய மதுசார செறிவுக்கு இட்டுச்செல்கின்ற மதுசார மட்டமொன்றை அல்லது இரத்த மதுசார மட்டம் 0.05க்கு மேற்படாமல் அல்லது சுவாசிப்பில் மதுரசாரம் 0.25 எம்ஜ/எல் மட்டத்திற்கு மேற்படாமல் மட்டுப்பாடொன்றை உறுதிப்படுத்துதல் வேண்டும். போதைப்பொருள் பாவனை தடுக்கப்படுகின்றது.

*தேசிய ஏற்பாடுகள்*

31. (1) ஏதேனும் விபத்து அல்லது கப்பல் தரைதட்டுதல், தீப்பற்றுதல், பயணிகள் இறத்தல், கப்பல் இழந்துபோதல் அல்லது கப்பற் சரக்கின் ஏதேனும் பாகம் இழந்துபோதல் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பலில் ஏதாவது வேறு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படுதல் அல்லது இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பில் ஏதேனும் வெளிநாட்டுக் கொடியுடன் கப்பல் ஏதேனும் அசம்பாவிதத்துக்கு உட்பட்டால் அதுபற்றி அது நிகழ்ந்த இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குள் தலைவரினால், சொந்தக்காரரினால் அல்லது உள்ளூர் முகவரினால் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய நிலைமையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்து அல்லது பொது மக்கள் அக்கறை தேவைப்படுத்துமானால் மேலே கூறப்பட்ட சம்பவங்களுள் எதுபற்றியும் பணிப்பாளர் விசாரணையொன்றை நடாத்துமாறு கட்டளையிடலாம்.

(3) அத்தகைய விசாரணைக்கென பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட அலுவலர்/கள் சாட்சிகள் நேரில் சமுகமளிக்கவேண்டுமென்பது உட்பட சான்று கேட்பதற்குத் தத்துவமுடையவர்களாவர்.

(4) விசாரணை செய்யும் அலுவலர்களின் அறிக்கையின் அடிப்படையில் பணிப்பாளர் தம்மால் வழங்கப்பட்ட ஏதேனும் தகைமைச் சான்றிதழை அல்லது புறக்குறிப்பை அல்லது ஆவணத்தை இடைநிறுத்தலாம் அல்லது மீளப்பெறலாம். எவ்வாறாயினும், அத்தகைய நடவடிக்கை எதுவும் எதிர்வாதி தமது நிலையை எடுத்துரைப்பதற்கு நியாயமான சந்தர்ப்பம் கொடுக்கப்படாமல் எடுக்கப்படலாகாது.

(5) பணிப்பாளர் ஆவணம் எதுவும் வழங்காத கடலோடியின் திறமையின்மை அல்லது துர்நடத்தை இருந்ததாக விசாரணை அறிக்கை தெரிவிக்குமானால், அவர் எந்நேரத்திலும் இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளுள் நுழைதல் ஆகாது எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் விரும்பத்தகாதவராகவும் வெறுக்கத்தக்கவராகவும் ஏற்றுக்கொள்ள முடியாதவராகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(6) மேலே ஒழுங்குவிதி 40.5 என்பதில் ஆவணத்தை வழங்கிய அரசு அல்லது நாடு அது அவசியமெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குப் பொறுப்புடையதாக இருக்கும்.

(7) நிர்வாக, சட்டஞ்சார் மற்றும் நடவடிக்கைமுறைக் கட்டுப்பாடு இல்லை என்பதை அத்தகைய விசாரணை தெரிவிக்குமானால், பணிப்பாளர் சம்பந்தப்பட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து தோதான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(8) ஆள்மாறாட்டம் செய்யும் கருத்துடன் இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட மோசடியான சான்றிதழை தமது உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது மோசடியான வழிகள்மூலம் அத்தகைய சான்றிதழைப் பெற்றுள்ள எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(9) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற எவரேனும் ஆள் கப்பலின் முகாமையில் அல்லது தொழிற்பாட்டில் அல்லது பாதுகாப்பில் கப்பலோட்டலில் துர்நடத்தைக்குக் குற்றவாளியாக நீதிமன்றமொன்றினால் காணப்பட்டால், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(10) மேற்பார்வையின் கீழான பயிற்சி அல்லது தெய்வச் செயல் விடயங்கள் தவிர, இவ்வொழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவரால் எத்தன்மையிலும் புரியப்படவேண்டிய ஏதேனும் பணியை அல்லது சேவையை அத்தகைய சான்றிதழை வைத்திராத ஆள் ஒருவரால் அல்லது செல்லுபடியுள்ள விசேட அதிகாரம் இல்லாத ஆளினால் புரியப்படுவதற்கு அனுமதிக்கின்ற கப்பற் தலைவன் அல்லது அது தொடர்பில் அத்தகையவொரு கப்பற் தலைவனுக்கு உதவியளிக்கின்ற அல்லது ஆதரவளிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றமொன்றிலான குற்றத்தீர்ப்பின் மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(11) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற ஆள், கப்பலில் முகாமை அல்லது தொழிற்பாடு அல்லது பாதுகாப்பான கப்பலோட்டம் தொடர்பாக தகுதியற்றவராக இருந்தால், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது நீக்கஞ் செய்யலாம் அல்லது ஒழித்துவிடலாம்.

*(12) இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற ஆள் அத்தகைய சான்றிதழுக்குத் தோதான கடமைகளைப் புரிவதற்குத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது நீக்கஞ் செய்யலாம் அல்லது ஒழித்துவிடலாம்.*

*துறைமுக அரசுக் கட்டுப்பாடு*

*32. (1) சமவாயத்தின் X ஆம் உறுப்புரையின்கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலரால் பிரயோகிக்கப்படும் துறைமுக நிலைமைக் கட்டுப்பாடு பின்வருவனவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்:-*

*(அ) சமவாயத்துக்கிணங்க சான்றிதழ் கொடுக்கப்படவேண்டிய கப்பலில் சேவைபுரியும் சகல கடலோடிகளும் சமவாயத்தின் 5ஆம் பந்தியின் I/10ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க புறக்குறிப்புக்கான விண்ணப்பம் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதென்பதற்கான ஆவணச் சான்றை, செல்லுபடியுள்ள விடுவிப்பை, அல்லது தோதான சான்றிதழை வைத்திருக்கின்றாரா என உறுப்புரை X(I)க்கிணங்க சரிபிழை பார்த்தல்.*

*(ஆ) கப்பலில் வேலைசெய்யும் கடலோடிகளின் இலக்கங்களும் சான்றிதழ்களும் கொடி அரசின் நிருவாக ஏற்புடைத்தான பாதுகாப்பான ஆளணித் தேவைப்பாடுகளுக்கிணங்க உள்ளனவா எனச் சரிபிழை பார்த்தல்.*

*(இ) சமவாயத்தின் ஏ - I/4 என்னும் பிரிவுக்கிணங்க, பின்வருவனவற்றுள் எதுவேனும் சம்பவிக்கின்ற காரணத்தினால் அத்தகைய தராதரங்கள் பேணப்படவில்லையென நம்புவதற்குத் தெளிவான காரணங்கள் இருந்தால், சமவாயத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கண்காணிப்புத் தராதரங்களைப் பேணுவதற்கு கப்பலின் கடலோடிகளுக்குள்ள திறனை மதிப்பிடுதல்;*

*(i) கப்பல் மோதிவிட்டது, தரைதட்டிவிட்டது அல்லது காணாமல் போய்விட்டது; அல்லது*

*(ii) பயணஞ்செய்யும்போது, நங்கூரமிட்டிருக்கும்போது, துறையில் இருக்கும்போது சர்வதேச சமவாயம் எதன்கீழும் சட்டவிரோதமாக இருக்கும் பதார்த்தங்களை வெளியேறவிடல்; அல்லது*

*(iii) சர்வதேச கடல்சார் ஒழுங்கமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வழமையான வழிவகைகள் அல்லது பாதுகாப்பான கப்பலோட்டல் வழங்கல்கள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படாமல், கப்பலானது பிழையான அல்லது பாதுகாப்பற்ற முறையில் செலுத்தப்படல்;*

*(iv) கப்பலானது ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சுற்றாடலுக்கு ஆபத்தாக அமையும் விதத்தில் அல்லாது வேறு விதமாக இயக்கப்படல்.*

*(2) ஆட்களுக்கு, ஆதனத்துக்கு அல்லது சுற்றாடலுக்கு ஆபத்தாக அமையும் பின்வரும் குறைபாடுகளுள் எதனையும் சீராகத் தவறியமை காரணமாக முறையாக அதிகாரமளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் சமவாயத்தின் X ஆம் உறுப்புரையின்கீழ் ஒரு கப்பலைத் தடுத்துவைக்கலாம்.*

*(அ) கடலோடிகள் சான்றிதழ் வைத்திராதோரால், தோதான சான்றிதழ் வைத்திராதிருத்தல், செல்லுபடியுள்ள விட்டுவிடுவிப்பு வைத்திராதிருத்தல், சமவாயத்தின் 5ஆம் பந்தியின் 1/10ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க கொடி அரச நிருவாகத்தக்குப் புறக்குறிப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதென்பதற்கான ஆவணச்சான்று காண்பிக்காமை;*

*(ஆ) கொடி அரச நிருவாகத்தின் ஏற்புடைத்தான பாதுகாப்புக்கான ஆளணித் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை ;*

*(இ) கொடி அரச நிருவாகத்தினால் கப்பலுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் கடற்பயண அல்லது எந்திரவியல் கண்காணிப்பு ஒழுங்குகள் இல்லாதிருத்தல் ;*

*(ஈ) பாதுகாப்பான கப்பலோட்டம், பாதுகாப்பான வானொலித்தொடர்பு அல்லது கடல் தீழ்ப்புத் தடுப்பு என்பவற்றுக்கு அவசியமான உபகரணத்தை இயக்குவதற்குத் தகுதிபெற்ற ஆளின் கண்காணிப்பு இல்லாமை ;*

*(உ) பயணம் தொடங்கும் நேரத்தில் முதலாவது கண்காணிப்பு அலுவலருக்கு அடுத்துப்பின்வரும் கடமை மாற்றக் கண்காணிப்பு அலுவலர்களுக்குப் போதியளவு ஆறுதல் எடுத்துக் கடமை செய்வதற்குத் தகுதியான ஆட்களை ஏற்பாடு செய்ய இயலாமை.*

*பதிவேடுகளைப் பேணுதலும் தரநிர்ணயமும்*

33. (1) சான்றிதழ்கள், புறக்குறிப்புக்கள் அல்லது வேறு ஆவணம் வழங்கப்பட்ட கடலோடிகள் பற்றிய பதிவேடுகள் பணிப்பாளர் தலைமையதிபதி பேணச்செய்வித்தல் வேண்டும். இதில் ஆளடையாளம், அனுபவம், பயிற்சி, மருத்துவத் தகைமை, திறன் என்பன பற்றி ஆவணச்சான்றும் தரவுகளும் உள்ளடங்கும்.

(2) பயிற்சி நிறுவனங்களையும், பரீட்சைகளையும், மதிப்பீட்டையும் அங்கீகரிப்பதற்கான நடைமுறைகள் உட்பட இவ்வொழுங்குவிதிகளை அமுலாக்குவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறையைக் கொண்டுவருதல் வேண்டும்.

(3) கப்பற்றொழில் அமைச்சர், அமைச்சின் வணிகக்கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தினுள் தொழில்புரியாத தகைமைபெற்ற கணக்காய்வாளர்களை ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கால இடைவெளிகளில் சான்றழித்தல் முறைமையினை அவ்வப்போது மதிப்பீடு செய்யுமாறு நியமித்தல் வேண்டும். அத்தகைய மதிப்பீட்டின் அறிக்கை அமைச்சரினால் சர்வதேசக் கடல்சார் ஒழுங்கமைப்பின் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*மருத்துவத் தராதரங்கள்*

34. அலுவலர் சான்றிதழ், கடலோடிகளின் தொடர்ச்சியான புரிதல் சான்றிதழ் (சீடீசீ) அல்லது விசேட தகைமைகளுக்கான சான்றுறுதிக்கான எல்லா விண்ணப்பதாரிகளும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரினால் பூர்த்திசெய்யப்பட்டதுமான மருத்துவப் படிவமொன்றில் அறிக்கையிடப்பட்ட உடல்சார் சோதனையொன்றைக் கொண்டிருக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட மருத்துவப் படிவம், அலுவலர் சான்றிதழ், கடலோடியின் அடையாள ஆவணம் அல்லது விசேட தகைமைகளின் சான்றுறுதிக்கான விண்ணப்பத்துடன் சேர்ந்திருக்கவேண்டும். இந்த உடல்சார் சோதனை அலுவலர் ஒருவர் சான்றிதழ், விசேட தகைமைகளின் சான்றுறுதி அல்லது சீடீசீ போன்றவற்றுக்கான விண்ணப்பங்கள் தேதிக்கு முன்னதாக பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாது கொண்டுநடாத்தப்படுதல் வேண்டும். சோதனையானது, விண்ணப்பதாரி பொறுப்பேற்கப்படும் விசேட கடமை குறித்தளிப்புக்கான திருப்திகரமான உடல்சார் நிலையொன்றில் உள்ளார் எனவும் கடலோடல் உயர் தொழிலின் தேவைப்பாடுகளை நிறைவேற்ற அவசியமான எல்லா உடல்சார் சரீர சக்தியையும் பொதுவாகக் கொண்டுள்ளார் எனவும் தாபிக்க வேண்டும். மேலே சொல்லப்பட்டதற்கு மேலதிகமாக, விண்ணப்பம் பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவேற்றவும் வேண்டும்.

(அ) கடலோடிகளுக்கான மருத்துவப் பொருத்தப்பாடு மற்றும் மருத்துவ சான்றிதழொன்றின் வழங்கலுக்கான நடவடிக்கை முறைகள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ - I/9 ஆம் பிரிவிற்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலாளர்கள் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ -I/9 ஆம் பிரிவிற்கிணங்க கடலோடி மருத்துவ சோதனைசார் நோக்கத்திற்கென கடலோடிகளின் மருத்துவ மற்றும் உடல்சார் பொருத்தப்பாடுபற்றி மதிப்பீடு செய்ய வேண்டும்.

(இ) கடலில் சேவைபுரிகின்ற சமவாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்படும் சான்றிதழொன்றை வைத்திருக்கின்ற கடலோடி ஒவ்வொருவரும் இவ்வொழுங்குவிதியினதும் எஸ்ரிசிடபிள்யூ கோவையின் ஏ-I/ 9 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படும் வலிதான மருத்துவச் சான்றிதழொன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) உடல்சார் மற்றும் மருத்துவப் பொருத்தப்பாடு என்பவற்றின் தராதரங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(i) கடலோடிகள், கீழே (உ) என்னும் பந்தியைக் கவனத்திற்கெடுத்து எஸ்ரிசிடபிள்யூ கோவையின் 2ஆம் பந்தி, ஏ-VI/ 9 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அடிப்படைப் பயிற்சியின் தேவைப்பாடுகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி உடல்சார் இயலுமாந்தன்மையைக் கொண்டுள்ளார்கள் எனவும்;

(ii) கடலோடிகள் வினைத்திறனான தொடர்பாடலுக்கும் ஏதேனும் செவிப்புல அவலத்தொலிகளுக்கும் போதுமான கேட்பு மற்றும் பேச்சைக் கொண்டுள்ளார் எனவும்;

(iii) கடலோடிகள் மருத்துவச் சான்றிதழின் வலிதான காலப்பகுதியின்போது கப்பலில் தமது நாளாந்த அல்லது அவசர கடமைகளின் பயனுள்ள மற்றும் பாதுகாப்பான நடாத்துதலைத் தடுக்கும் மருத்துவ நிலையை, ஒழுங்கீனத்தை அல்லது பலவீனத்தைக் கொண்டிருக்கவில்லை எனவும்;

(iv) கடலோடிகள் கடற்சேவையினால் உக்கிரமாக்கப்படும் சாத்தியமுள்ள ஏதேனும் மருத்துவ நிலையினால் அல்லது கப்பலில் வேறு ஆட்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக்கு அபாயமாக்குகின்ற நிலையினால் அல்லது அத்தகைய சேவைக்குப் பொருத்தமற்றவராக கடலோடியை மாற்றுகின்ற நிலையினால் கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கவில்லை எனவும்; அத்துடன்

(v) தீர்ப்பு அல்லது சமநிலையை அல்லது கப்பலில் நாளாந்த மற்றும் அவசர கடமைகளின் பயனுள்ளதும் பாதுகாப்பானதுமான புரிதலுக்கென வேறு ஏதேனும் தேவைப்பாடுகளைப் பாதிக்கும் பக்கவிளைவு கொண்ட ஏதேனும் மருத்துவத்தை எடுத்துக்கொண்டிருக்கவில்லை எனவும்.

(உ) நிறப் பார்வைச் சோதனை, ஏதேனும் தொடர்ந்துவந்த பார்வைகள் அல்லது அதற்குச் சமமான சோதனை முறை உட்பட (சீஜஈ 143-2001) உட்பட கமிசன் இன்டனசநலே எச்சிலேஜ் அமைப்பினால் வெளியிடப்பட்ட போக்குவரத்துக்கான நிறப் பார்வைத் தேவைப்பாடுகளுக்கான சர்வதேச சிபார்சுகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

*மருத்துவச் சான்றிதழின் செல்லுபடியாந்தன்மை*

(ஊ) மருத்துவச் சான்றிதழ்கள், கடலோடிகள் 18 வயதிற்குக் குறைந்தவராக அல்லது 55 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தாலொழிய ஆகக்கூடியது இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வலிதாக இருத்தல் வேண்டும். 18 வயதிற்குட்பட்டவராக அல்லது 55 வயதிற்கு மேற்பட்டவரான விடயத்தில் ஆகக்கூடிய செல்லுபடியான காலம் ஓராண்டாதல் வேண்டும்:

ஆயின், மருத்துவச் சான்றிதழொன்றின் செல்லுபடியான காலப்பகுதி கடற்பயணத்தின்போது காலாவதியாகுமிடத்து, மருத்துவச் சான்றிதழ் ஆகக்கூடியது மூன்று மாதங்களுக்கு அமைவாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலரை அணுகக்கூடிய அடுத்த துறைமுகம் வரை தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்:

ஆயின், அவசர விடயங்களில், பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றிற்கு அமைவாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர் அணுகக்கூடியதான அடுத்த துறைமுகம்வரை வலிதான மருத்துவச் சான்றிதழின்றி வேலைசெய்ய கடலோடியொருவரை அனுமதிக்கலாம்.

(i) அத்தகைய அனுமதிக்காலம் மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ii) கடலோடி அண்மைய தேதியில் காலாவதியான மருத்துவச் சான்றிதழை உடைமையில் கொண்டுள்ளார்.

அட்டவணை ஏ-I/9

**சேவையின்போது கடலோடிகளுக்கான ஆகக்குறைந்த கண்பார்வைக்கான தராதரங்கள்**

| எஸ்ரிசிடபிள்யூ கோவை ஒழுங்கு விதி | கடலோடிகளின் வகை | உதவியளிக்கப்பட்ட தூரப் பார்வை [1] | | கிட்டிய/ உடனடிப் பார்வை | நிறப் பார்வை [3] | செவிப்புல மண்ட. லங்கள்[4] | மாலைக்கண்[4] | டிப்லோபியா (இரட்டைப் பார்வை)[4] |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒரு கண் | மறு கண் | இரண்டு கண்கள் உதவியுடன் அல்லது உதவி இன்றி | | | | |
| I/11<br><br>II/1<br>II/2<br>II/3<br>II/4 | கப்பற்றலைவர்,<br><br>தள அலுவலர்கள் மற்றும் காவல் காத்தல் கடமையில் உள்ள கப்பற்றுணை | 0.5[2] | 0.5 | கப்பலோட்டு தலுக்கு தேவைப் பட்ட பார்வை (உதாரணமாக வரைபட கப்பற் | 6ஆம் குறிப் பைப் பார்க்க | சாதாரண பார்வை மண்ட லங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் எல்லா அவசியமான | குறிப்பிடத் தக்க நிலைமை எதுவுமில்லை |

*அட்டவணை ஏ-I/9 (தொடர்ச்சி)*

**சேவையின்போது கடலோடிகளுக்கான ஆகக்குறைந்த கண்பார்வைக்கான தராதரங்கள்**

| எஸ்ரிசி டபிள்யூ கோவை ஒழுங்கு விதி | கடலோடிகளின் வகை | உதவியளிக் கப்பட்ட தூரப் பார்வை [1] | | கிட்டிய/ உடனடிப் பார்வை [3] | நிறப் பார்வை | செவிப்புல மண்ட லங்கள்[4] | மாலைக்கண்[4] | டிப்லோபியா (இரட்டைப் பார்வை)[4] |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒரு கண் | மறு கண் | இரண்டு கண்கள் உதவியுடன் அல்லது உதவி இன்றி | | | | |
| II/5 VII/2 | யாளர்கள் | | | பயண வெளியீடு பற்றிய குறிப்பீடு, மேடை ஆவண மாக்கல் உபகரணம், கப்பற் பயணத்திற் கான அடையாளங் காண் உதவிகள்) | | | பணிகளையும் புரியத் தேவைப்படும் பார்வை | |
| I/11 III/1 III/2 III/3 III/4 III/5 III/6 III/7 VII/2 | எல்லா எந்திர அலுவலர்கள், மின் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் மின் -தொழில்நுட்ப கப்பற்றுணை யாளர்கள் மற்றும் இயந்திர அறைக் காவலொன்றின் பாகமாக அமைகின்ற கப்பற்றுணை யாளர்கள் | 0.4[5] | 0.4 (5ஆம் குறிப் பைப் பார்க்க) | சமீபத்தில் வைத்து கருவிகளை வாசிப்பதற்கு வேண்டிய பார்வை, உபகர ணத்தை இயக்கு வதற்கு வேண்டிய பார்வை, அவசியமான முறைமைகளைக் கூட்டுறுப்புக் களை அடையாளங் காண்பதற் கான பார்வை | 7ஆம் குறிப் பைப் பார்க்க | போதுமான பார்வை மண்ட லங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் அவசியமான கடமைகளை புரிவதற்கு வேண்டிய பார்வை | குறிப்பிடத் தக்க நிலைமை ஏதுவுமில்லை |
| I/11 IV/2 | ஜீஎம்டிஎஸ்எஸ் வானொலி தொழிற்படுத்து | 0.4 | 0.4 | சமீபத்தில் வைத்து கருவிகளை | | | | |

*அட்டவணை ஏ-I/9 (தொடர்ச்சி)*

**சேவையின்போது கடலோடிகளுக்கான ஆகக்குறைந்த கண்பார்வைக்கான தராதரங்கள்**

| எஸ்ரிசி டபிள்யூ கோவை ஒழுங்கு விதி | கடலோடிகளின் வகை | உதவியளிக் கப்பட்ட தூரப் பார்வை [1] | | கிட்டிய/ உடனடிப் பார்வை | நிறப் பார்வை [3] | செவிப்புல மண்ட லங்கள்[4] | மாலைக்கண்[4] | டிப்லோபியா (இரட்டைப் பார்வை)[4] |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஒரு கண் | மறு கண் | இரண்டு கண்கள் உதவியுடன் அல்லது உதவி இன்றி | | | | |
| | நர்கள் | | | வாசித்தல், உபகரணம் இயக்குதல் முறைமைகளை அவசியமான கூட்டுறுப்புக்களை அடையாளங் காணப்பதற் கான பார்வை | 7ஆம் குறிப்பைப் பார்க்க | போது மான பார்வை மண்ட லங்கள் | இணக்கப்பாடு எதுவுமின்றி இரவில் எல்லா அவசியமான கடமை களைப் புரிவதற்கு வேண்டிய பார்வை | குறிப்பிடத் தக்க நிலைமை எதுவுமில்லை |

*குறிப்புக்கள்:*

1. ஸ்னெலென் தசக் கணிப்புக் குறிப்பீட்டில் தரப்பட்ட பெறுமதிகள்.
2. ஒரு கண்ணில் ஆகக்குறைந்தது 0.7 பெறுமதியொன்று, கண்டுபிடிக்கப்படாத கண் நோயின் அச்சத்தைக் குறைக்க சிபார்சு செய்யப்படுகின்றது.
3. ஏதேனும் தொடர்ந்து வரும் திருத்தங்கள் உட்பட கமிசன் இன்டர்நஷனல் டீ எல்கிலேஜ் (சீஐஈ143-2001) என்பதால் போக்குவரத்துக்கான நிறப்பார்வை தேவைப்பாடுகளுக்கான சர்வதேசத் தேவைப்பாடுகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறாக.
4. ஆரம்ப சோதனையினால் குறிப்பிடப்படுமிடத்து, சிகிச்சைப் பார்வை நிபுணர் ஒருவரினாலான மதிப்பீட்டு அமைவானது.
5. எந்திரத் திணைக்கள ஆளணியினர் ஆகக்குறைந்தது 0.4 இணைந்த கண்பார்வை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. சீஐஈ நிறப் பார்வைத் தராதரம் 1 அல்லது 2
7. சீஐஈ பார்வைத் தராதரம் 1, 2 அல்லது 3

**அட்டவணை பீ-I/9**

**கடலோடிகளுக்கான சேவையின்போது ஆகக்குறைந்த உடல்சார் இயலுமாந்தன்மை**

| கப்பலின் பணி, பணி நிகழ்வு அல்லது நிலைமை[3] | தொடர்புபட்ட உடல்சார் இயலுமாந்தன்மை | பரீட்சார்த்தி பற்றி மருத்துவப் பரிசோதகர் திருப்திப்படவேண்டியவை |
|---|---|---|
| கலத்தைச் சுற்றி தொடர்ச்சியான பார்வையிடல் - அசையும் மேடை | சமநிலையைப் பேணல் மற்றும் ஊக்கத்துடன் அசைவு, மேலேறுதல் மற்றும் இறங்குதல் | சமநிலை நிலைமையில் குழப்பமற்றநிலை, தோதான பார்வையிடல் மற்றும் உடல்சார் செயற்பாடுகளைத் தடுக்கின்ற ஏதேனும் |

அட்டவணை பீ-I/9

கடலோடிகளுக்கான சேவையின்போது ஆகக்குறைந்த உடல்சார் இயலுமாந்தன்மை

| கப்பலின் பணி, பணி நிகழ்வு அல்லது நிலைமை[3] | தொடர்புபட்ட உடல்சார் இயலுமாந்தன்மை | பரீட்சார்த்தி பற்றி மருத்துவப் பரிசோதகர் திருப்திப்படவேண்டியவை |
|---|---|---|
| - மட்டங்களிடையே<br>- பாகங்களிடையே<br><br>குறிப்பு 1 இந்த வரிக்கு ஏற்புடையதாகும் | அத்துடன் குறுக்கான ஏணிகள் மற்றும் படிகள் வழிகள் படி (உதாரணம் 600 மி.மி. உயரம்)<br>நீர் இறுக்கமான கதவுகள் மூடுதலும் திறத்தலும். | பாதிப்பு அல்லது நோயைக் கொண்டிருக்கவில்லை.<br><br>உதவியின்றி<br>- குறுக்கான ஏணிகள் மற்றும் படி வழிகளில் ஏறுதல்<br>- உயரமான வாயிற்படிகளுக்குச் செல்லுதல்<br>- கதவு மூடுதல் முறைமைகளைக் கையாளுதல் |
| கப்பலில் நாளாந்த பணிகள்<br>- கை உபகரணங்களைப் பாவித்தல்<br>- கப்பற் களஞ்சியத்திற்குச் செல்லுதல்<br>- உயரமான இட வேலை வால்வு தொழிற்பாடு<br>- 4 மணித்தியாலங்கள் காவ லொன்றில் நிற்றல்<br><br>- அடைக்கப்பட்ட இடத்தில் வேலை செய்தல்<br>அவசர அழைப்பு, எச்சரிக்கை மற்றும் அறிவுறுத்தலுக்குப் பதிலளித்தல்<br>- வாய்மொழித் தொடர்பாடல்<br><br>குறிப்பு 1 இந்த வரிக்கு ஏற்புடையதாகும்.<br>கப்பலில் அவசர கடமைகள்<br>- தப்பியோடுதல்<br>- தீயுடன் போராடுதல்<br>- மீட்புச் செய்தல்<br><br>குறிப்பு 1 இந்த வரிக்கு ஏற்புடையதாகும். | இயந்திர கருவிகள், உயர்த்தி, பாரமொன்றை (உதாரணம் 18 கிலோகிராம்) இழுத்துக்கொண்டு செல்லுதலைக் கையாள பலம், கைவண்ணம் மற்றும் வலிமை நீடித்த காலத்திற்கு உயரத்தை அடைதல்,<br><br>நிற்றல், நடத்தல், முயற்சியுடையதாக இருத்தல்<br>சுருளும் இடத்தில் வேலை செய்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட<br><br>திறத்தல்கள் ஊடாக நடமாடுதல் (உதாரணம் 600மிமி X 600 மிமி)பொருட்கள், வடிவங்கள் மற்றும் குறியீடுகளை பார்வை ரீதியாக வேறுபடுத்தல், கேட்பு எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தெளிவான பேச்சிலான விபரணம் தருதல்,<br>உயிர்காப்பு அங்கி அல்லது அமிழ்தல் உடை<br>புகையிலிருந்து தப்புதல் - நிரப்பப்பட்ட இடங்கள்<br><br>சுவாசிக்கும் உபகரணத்தின் பாவனை உட்பட தீயுடன் போராடும் கடமையில் பங்கெடுத்தல்<br><br>கலனை மீட்டல் நடவடிமுறையில் பங்கெடுத்தல் | கலத்தின் பாதுகாப்பான தொழிற்பாட்டுக்கு அவசியமான நாளாந்த கடமைகளைப் புரிவதற்கான இயலுமாந் தன்மையைக் குறைக்கின்ற வரையறுத்த பங்கம் அல்லது மருந்தளிக்கப்பட்ட மருந்து நிலையைக் கொண்டிருக்கவில்லை.<br><br>பின்வரும் இயலுமாந்தன்மையைக்<br><br>கொண்டுள்ளார்-<br>- நீண்டகாலத்திற்கு நிற்றலும் நடத்தலும்<br>- அடைக்கப்பட்ட இடத்தினுள் நுழைதல்<br>- கண்பார்வை தராதரங்களை நிறைவேற்றுதல் (ஏ-I/9-1)-<br>- தகுதிவாய்ந்த அதிகாரியினால் தரப்படும் அல்லது சர்வதேச வழிகாட்டு நெறிகளைக் கருத்திற்கெடுத்து தரப்படும் கேட்பு தராதரங்களை<br>- நிறைவேற்றுதல்<br>- சாதாரண கலந்துரையாடலைப் பேணுதல்<br>கலத்தின் பாதுகாப்பான தொழிற்பாட்டுக்கு அவசியமான அவசர கடமைகளைப் புரிவதற்கான இயலுமாந்தன்மையைக் குறைக்கின்ற வரையறுக்கப்பட்ட பங்கம் அல்லது மருந்தளிக்கப்பட்ட மருத்துவ நிலையைக் கொண்டிருக்கவில்லை.<br>பின்வருவனவற்றுக்கு இயலுமாந்தன்மை உள்ளது<br><br>- உயிர்காப்பு அங்கி அல்லது அமிழ்தல் உடை<br>- தவழுதல்<br>- உஸ்ணத்தில் மாற்றங்களை உணர்தல்<br>- தீயுடன் போராடும் உபகரணங்களைக் கையாளுதல்<br>- (கடமையின் பாகமாகத் தேவைப்படுத்தப் படுமிடத்து) சுவாசிக்கும் உபகரணத்தை அணிதல் |

*குறிப்புகள் :*

1. மேற்தரப்பட்ட அட்டவணையின் 1ஆம் மற்றும் 2ஆம் வரிகள் (அ) சாதாரண கப்பற் பணிகள், பணிநிகழ்வுகள் மற்றும் நிலைமையையும் (ஆ) கடலோடிகள் வேறு பணி உறுப்பினர்கள் மற்றும் கப்பலுக்கு அவசியமெனக் கருதப்படக்கூடிய நேரொத்த உடல்சார் இயலுமாந்தன்மையும் (இ) கடலோடிகளின் வேறுபட்ட கடமைகள் மற்றும் அவர்கள் தொழிலிலமர்த்தப்படும் கப்பல் வேலையின் தன்மையை மனதிற்கொண்டு மருத்துவ பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்கின்ற மருத்துவ தொழிலரினால் பயன்படுத்துவதற்கான உயர்தர கட்டளைக்கற்களையும் விபரிக்கின்றன.

2. மேலுள்ள அட்டவணையின் வரி 3 ஆனது, சாதாரண கப்பற் பணிகள், பணி நிகழ்வு மற்றும் நிலைமையையும், (ஆ) கடலோடிகள் வேறு பணி உறுப்பினர்கள் மற்றும் கப்பலுக்கு அவசியமெனக் கருதப்படவேண்டிய நேரொத்த உடல்சார் இயலுமாந்தன்மையையும், (இ) கடலோடிகளின் வேறுபட்ட கடமைகள் மற்றும் அவர்கள் தொழிலிலமர்த்தப்படும் கப்பல் வேலையின் தன்மையை மனதிற்கொண்டு மருத்துவப் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்கின்ற மருத்துவத் தொழிலரினால் பயன்படுத்துவதற்கான உயர்தர கட்டளைக்கற்களையும் விபரிக்கின்றது.

3. இவ்வட்டவணை எல்லா சாத்தியமான கப்பல் நிலைமை அல்லது சாத்தியமான தகைமையிழக்கும் மருத்துவ நிலைமைகளை நிவாரணமளிக்க எண்ணப்படவில்லை. மருத்துவத் தொழிலர் (மேடை அலுவலர் மற்றும் இயந்திர கப்பல் துணையாளர்கள் போன்ற) கடலோடிகளின் வகுதிக்கு ஏற்புடையதான உடல்சார் இயலுமாந்தன்மைகள் மீதான தமது உயர்தொழில் தீர்ப்புக்குப் பயன்படுத்துதல் வேண்டும். தனிப்பட்டவர்களின் விசேட சூழ்நிலைகள் மற்றும் நிபுணத்துவ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட கடமைகளைக் கொண்டுள்ளவர் உரிய கவனம் பெறுதல் வேண்டும்.

4. ஐயத்தில் இருப்பின், மருத்துவத் தொழிலர் தோதான சோதனைகள் காணப்படும் போதிலெல்லாம் அல்லது மேலும் மதிப்பீட்டுக்கு பரீட்சார்த்தியை ஆற்றுப்படுத்துவதன்மூலம் பொருளுக்குரிய சோதனைகளின் வழிவகைகள்மூலம் ஏதேனும் தோதான பலங்குறையின் மட்டம் அல்லது கடுமையை அளவிடுதல் வேண்டும்.

5. உதவி என்ற சொற்பொருள் பணியை முடிவடைக்க வேறொரு ஆளின் பயன்பாடு எனப் பொருள்படும்.

6. "அவசரகால நிலைக் கடமைகள்" என்னும் பதமானது தன்னுரிமையைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு கடலோடியினாலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை போன்று கப்பல்களை அழித்தல் அல்லது கப்பல்களைச் சுடுவதன்மூலம் போர் செய்தல் போன்ற எல்லா நியம அவசரகாலநிலைப் பொறுப்பு நிலைமைகளை மேவுகை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

---

*ச.வ.பீ 3/2013* II

**1971ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126ஆம், 321ஆம் பிரிவுகளினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு
2013, யூலை 01.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2013 யூலை 01ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. (i) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு யூலை 17ஆந் தேதிய 1036/21 ஆம் இலக்க வரத்தமானியில் வெளியிடப்பட்ட 1998 ஆம் ஆண்டின் வணிகக்கப்பற்றொழில் (பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல்) ஒழுங்குவிதிகள் 2013 யூலை 1ஆம் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்படலாகாது.

(ii) எது எப்படியிருப்பினும் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு 1998ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல்) பற்றிய ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணங்கள் 2016ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆந் திகதி வரையில் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தொடர்ந்து செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

*வரைவிலக்கணங்கள்*

3. "சட்டம்" என்பது, 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் எனப் பொருள்படும்;

"தகுதிச் சான்றிதழ்" என்பது, 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல் பேணல்) ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்படும் அதிகாரச் சான்றிதழ் ஒன்று எனப் பொருள்படும்;

"பிரதம பொறியியல் அலுவலர்" என்பது, கப்பலின் பொறிமுறை உந்தெறிவு, தொழிற்பாடு மற்றும் பொறிமுறை மின்முறை நிறுவுகைகளின் பராமரிப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான சிரேஷ்ட எந்திரி அலுவலர் எனப் பொருள்படும்;

"பிரதான கப்பற்றுணைத்தலைவர்" என்பது, தலைவருக்கு அடுத்த பதவி வரிசையில் உள்ளவரும் தலைவருக்கு இயலாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கப்பலின் ஆணை அதிகாரம், கட்டுப்பாடு அல்லது பொறுப்பு வந்துசேருகின்றவருமான கப்பற்றள அலுவலர் எனப் பொருள்படும்;

"கம்பனி" என்பது, கப்பற் சொந்தக்காரர் என அல்லது கப்பற் சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுப் பொறுப்பை ஏற்று, அத்தகைய பொறுப்பை ஏற்றவுடன், இவ்வொழுங்குவிதியினால் கம்பனிமீது விதிக்கப்பட்ட அனைத்துக் கடமைகளையும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்க உடன்பட்டுள்ளவருமான ஆள் அல்லது வேறு ஏதேனும் ஸ்தாபனம் எனப் பொருள்படும்;

"கப்பற்றள அலுவலர்" என்பது, 2010இல் திருத்தப்பட்டவாறான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் IIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற கப்பற்போக்குவரத்து அலுவலர் எனப் பொருள்படும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"பொறியியல் அலுவலர்" என்பது, 2010இல் திருத்தப்பட்டவாறான எஸ்ரிசிடபிள்யூ கோவையின் IIIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தகைமைபெற்ற அலுவலர் எனப் பொருள்படும்;

"ஈடபிள்யூகே" என்பது, பொறியியற்துறை காவல் பேணும் அலுவலர் எனப் பொருள்படும்;

"ஜிரி" என்பது, மொத்தத் தொன் எடையளவு எனப் பொருள்படும்;

"கப்பல் தலைவர்" என்பது, கப்பலின் ஆணையதிகாரம் கொண்ட ஆள் எனப் பொருள்படும்;

"கரையோரத்தை அண்மித்த பயணங்கள் (என்சிவி)" என்பது, பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய இடங்களிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து சொல்லப்பட்ட நாடுகளிலுள்ள வேறு ஏதேனும் துறைமுகத்திற்கான அல்லது இடத்திற்கான கரையோர வியாபாரத்தில், கடற்பயணங்களின்போது, நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறான பாதுகாப்பான துறைமுகங்களின் அண்மைத் தூரம் சம்பந்தப்பட்ட குறிப்பீடுகளுக்கு அமைவாக, ஈடுபட்டுள்ள கப்பல்களின் பயணங்கள் எனப் பொருள்படும்;

"என்டபிள்யூகேஓ" என்பது, கடற்செலவு காவல் பேணும் அலுவலர் எனப் பொருள்படும்;

"அலுவலர்" என்பது, தேசிய சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் அவ்வாறு பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டவாறான தலைவர் தவிர்ந்த, அல்லது அத்தகைய பதவிப்பெயர் இல்லாத நிலையில் கூட்டு உடன்படிக்கையினால் அல்லது வழக்காறினால் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்ட கப்பற் தலைவர் தவிர்ந்த பணிக்குழுவின் தொகுதியின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்;

"வானொலி இயக்குநர்" என்பது, வானொலி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட தோதான சான்றிதழை உடைய ஆள் எனப் பொருள்படும்;

"கப்பல் துணையாளர்" என்பது, கப்பற்றலைவர் அல்லது அலுவலர் தவிர்ந்த கப்பற்பணிக் குழுவின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும்;

"பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றிய ஆவணம்" என்பது, இலங்கைக் கப்பல் விடயத்தில் வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட, அத்துடன் ஏதாவது பிற கப்பல் விடயத்தில் எந்த நாட்டின் கொடியைக் கப்பல் பறக்கவிடுவதற்கு உரித்துடையதோ அந்த நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட, அவ்வாறு விபரிக்கப்பட்ட ஓர் ஆவணம் எனப் பொருள்படும்;

"கடசெல் கப்பல்" என்பது, பிரத்தியேகமாக உள்நாட்டு நீர்ப்பரப்புகளில் அல்லது காப்பளிக்கப்பெற்ற நீர்ப்பரப்புகளுக்கு நெருக்கமாய் அண்டியதாக அமைந்த நீர்ப்பரப்புகளில் கடற்செலவு செய்கின்ற கப்பல் தவிர்ந்த வேறு வியாபாரக் கப்பல் எனப் பொருள்படும்.

"இரண்டாவது பொறியியல் அலுவலர்" என்பது, பதவிவரிசையில் பிரதான எந்திரி அலுவலருக்கு அடுத்த நிலையில் இருப்பவரும் பிரதான எந்திரி அலுவலரின் இயலாமையின்போது கப்பலில் பொறிமுறை உந்தறிவு, தொழிற்படுத்தல் மற்றும் பொறிமுறை மின்முறை நிறுவல்களின் பராமரிப்பு ஆகியவற்றுக்கான பொறுப்புகள் எவர்மீது வருகின்றனவோ அவராக இருப்பவருமான எந்திரி அலுவலர் எனப் பொருள்படும்.

*ஏற்புடைமை*

4. இவ்வொழுங்குவிதிகள், கடற்றொழில் கலங்கள், வணிகத் தொழிலில் ஈடுபடாத உவகையூட்டும் ஓடங்கள் தவிர, எங்கிருப்பினுஞ்சரி, இலங்கைக்கொடியின்கீழ் பதிவுபெற்ற ஆழ்கடற் பயணக் கப்பல்கள் அனைத்துக்கும், இலங்கை நீர்ப்பரப்பில் நிற்கும் ஏனைய ஆழ்கடல் பயணக் கப்பல்களுக்கும் ஏற்புடையனவாகும்.

*பத்திரமாக ஆட்களைப் பணிக்கமர்த்துதல் பற்றிய ஆவணம்*

5. கப்பல் ஒவ்வொன்றும் தொடர்பில்–

(அ) கப்பல் தொடர்பிலும் அதற்கு ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் தொடர்பிலும், பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றிய ஆவணம் வலுவில் இருத்தலையும்;

(ஆ) குறைந்தபட்ச மட்டங்களிலாவது, எல்லா வேளைகளிலும், கப்பலின் ஆட்களைப் பணிக்கமர்த்துதல் பேணப்படுதலையும்; அத்துடன்

(இ) கப்பலில் எல்லா வேளைகளிலும் பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணம் பேணப்படுவதையும் அதிகாரம்பெற்ற சோதனைக்கு அது கிடைக்கப்பெறுவதையும்,

உறுதிப்படுத்துவது கம்பனியின் கடமையாதல் வேண்டும்.

6. கப்பல் தளத்தில், பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணமொன்று இருந்தாலொழிய, அத்துடன் கப்பலில் ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது ஆவணத்துடன் இணங்கியொழுகுகின்றதாக இருந்தாலொழிய, இவ்வொழுங்குவிதிகள் எக்கப்பலுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதோ அக்கப்பலின் தலைவர் கப்பல் கடலுக்குச் செல்லாதிருப்பதை உறுதி செய்யவேண்டும்.

7. இலங்கைக் கப்பலொன்று தொடர்பில் பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணமொன்று விண்ணப்பிக்கும் கம்பெனியொன்று பின்வருவனவற்றைக் கவனத்திற்கெடுத்துக்கொண்டு பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்–

(அ) இவ்வொழுங்குவிதிகளின் Iஆம், IIஆம் அட்டவணைகளில் தரப்பட்டுள்ள பணிக்கமர்த்தப்படும் ஆட்களின் அளவு;

(ஆ) வியாபாரம் மற்றும் தொழிற்பாட்டு வகை உட்பட ஆனால் அவற்றோடு மட்டுப்படுத்தப்படாத சர்வதேசக் கடல் ஒழுங்கமைப்பின் விதப்புரைகள்;

(இ) தொழிற்பாட்டுத் தன்மை;

(ஈ) கப்பலின் வகை மற்றும் பருமன் உட்பட, அதன் தொழில்நுட்பத் தன்மைகள்;

(உ) கப்பலோடிகள் குழுவின் வேலைப்பளுவின் அளவு மற்றும் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகள்.

8. பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணத்தை வைத்திருக்கையில் வணிகக்கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி மேலதிக தகவல்களைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய தகவல் பெறப்பட்டதன்மேல், பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணத்தை வழங்குவிக்கலாம்.

9. பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றிய ஆவணத்தை வழங்கிய பின்னர், அங்கீகரிக்கப்பட்ட ஆட்களைப் பணிக்கு அமர்த்தும் அளவுத்திட்டத்தில் தாக்கத்தை உண்டுபண்ணக்கூடிய வகையில் அறிவிக்கப்பட்ட முக்கிய தகவல்களில் எவற்றிலாவது மாற்றம் ஏற்படுமிடத்து, அதனை விரைவாக வணிகக்கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கவேண்டியது கம்பனியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய விடயங்களில் வணிகக்கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றிய ஆவணத்தின் செல்லுபடியாந்தன்மையை நீடிப்பதற்கும் புதிய பிரேரணையைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

10. பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துதல் பற்றிய ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களைப் பணிக்கமர்த்துதல் பற்றிய அளவுத்திட்டங்கள் 2013ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (பயிற்றுதல், சான்றிதழ் வழங்குதல், காவல் பேணல்) ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டதும், தேவைப்படுத்தப்பட்டதுமான காவல் பேணல் நியமம் பேணப்படுவதையும் அத்துடன் கட்டாயமான ஆகக்குறைந்த மணித்தியால ஓய்வு பெறுவதற்கு ஆளணியினர் இயலக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு ஆகக்குறைந்த அவசியமானதாக உள்ளன.

11. பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களைப் பணிக்கமர்த்தல் அளவுத்திட்டங்கள் கம்பனி ஒன்றின் வர்த்தகத் தேவைப்பாடுகளை அல்லது உச்சவேலைச் சுமைகளைக் கணக்குக்கு எடுப்பதில்லை.

12. கப்பல்கள் பத்திரமாக, போதுமான அளவில் வினைத்திறன் உள்ள ஆட்களோடு இருக்கிறதென்ற பொறுப்பை உறுதிசெய்யும் பொறுப்பு கம்பனிகளையே சார்ந்ததாகும்.

13. ஏற்புடையற்பாலதான பத்திரமாக ஆட்களைப் பணிக்கு அமர்த்துவது பற்றிய ஆவணத்தின்படி, முறையாக சான்றிதழ் பெற்ற கப்பல் தலைவர்கள், அலுவலர்கள் கப்பலோடிகள் ஆகியோர் கப்பல்களில் பணிக்கமர்த்தப்படுவதை கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*விலக்களிப்புகள்*

14. வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி விடயவாரி அடிப்படையில் இவ்வொழுங்குவிதிகளின் எல்லா அலலது எவையேனும் ஏற்பாடுகளிலிருந்தும் அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல், விலக்களிக்கலாம்.

*தண்டங்கள்*

15. (1) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளில் எவற்றையும் மீறுகின்றவரும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகின்றவருமான கப்பலொன்றின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது முகாமையாளர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் 1,00,000 ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 02 ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளில் எவற்றையும் மீறுகின்றவரும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகின்றவருமான கப்பலொன்றின் தலைவர் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் 1,00,000 ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**தடுத்துவைப்பதற்கான தத்துவம்**

16. (அ) இலங்கைக் கப்பல் தொடர்பில், இவ்வொழுங்குவிதிகளில் எவையும் மீறப்பட்டிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) இலங்கைக் கப்பல் அல்லாத கப்பலொன்று தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளில் 14ஆம் ஒழுங்குவிதி மீறப்பட்டிருக்கின்றவிடத்து,

கப்பலானது தடுத்துவைக்கப்படலாமென்பதுடன் வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 207 ஆம் மற்றும் 208ஆம் பிரிவுகள் ஏற்புடையதாதலும் வேண்டும்.

அட்டவணை

**ஆள் பணிக்கமர்த்துதல் அளவுத்திட்டம் - கப்பற்றள அலுவலர்கள்**

வியாபாரப் பரப்பும் கப்பல்களின் விபரணமும்

| | * எல்லை யற்றது 3000 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேல் | * எல்லை யற்றது 500 மொத்தத் தொன் முதல் 3000 மொத்தத் தொன் வரை | * எல்லை யற்றது 500 மொத்தத் தொன் னுக்குக் குறைவாக | 300 மொத்தத் தொன் அல்லது அதற்கு மேல் | என். சி. வி. 500 மொத்தத் தொன் முதல் 3000 மொத்தத் அதன் வரை | என். சி. வி. 500 மொத்தத் தொன் னுக்குக் குறைவாக |
|---|---|---|---|---|---|---|
| கப்பல் தலைவர் | 1 | 1 | 1 | 1 | - | - |
| பிரதான கப்பற்றுணைத் தலைவர் | 1 | 1 | - | 1 | - | - |
| என்.டபிள்யூ. கே.ஓ | 2 | 1 | 2 | 1 | - | - |
| மாஸ்டர் 3000 மொத்தத் தொன் என்சிவி இற்குக் குறைவாக | - | - | - | - | 1 | - |
| பிரதான கப்பற்றுணைத் தலைவர் 3000 மொத்தத் தொன் என்சிவி இற்குக் குறைவாக | - | - | - | - | 1 | - |
| என்.டபிள்யூ. கே.ஓ 3000 மொத்தத் தொன் என்சிவி இற்குக் குறைவாக | - | - | - | - | 1 | - |
| மாஸ்டர் 500 மொத்தத் தொன் என்சிவி இற்குக் குறைவாக | - | - | - | - | 1 | |
| என். டபிள்யூ. கே. ஓ. 500 மொத்தத் தொன் என்சிவி இற்குக் குறைவாக | - | - | - | - | 1 | |

* எல்லையற்றது என்பது, எல்லையற்ற வியாபார இடப்பரப்புகள் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

ஆள் பணிக்கமர்த்துதல் அளவுத்திட்டம் - எந்திரி அலுவலர்

**வியாபாரப் பரப்பும் கப்பல்களின் விபரணமும்**

| | * எல்லை யற்றது 3000 கிலோ வோற் அல்லது அதற்கு மேல் | * எல்லை யற்றது 500 கிலோ வோற் முதல் 3000 கிலோ வோற் வரை | *எல்லை யற்றது 500 கிலோ வோற் றுக்குக் குறைவாக | 3000 கிலோ வோற் அல்லது அதற்கு மேல் | என். சி. வி. 500 கிலோ வோற் முதல் 3000 கிலோ வோற் வரை | என். சி.. வி. 500 மொத்தத் தொன் னுக்குக் குறைவாக |
|---|---|---|---|---|---|---|
| பிரதான எந்திரி அலுவலர் | 1 | 1 | - | 1 | - | - |
| இரண்டாவது எந்திரி அலுவலர் | 1 | 1 | 1 | 1 | - | - |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**ஆள் பணிக்கமர்த்துதல் அளவுத்திட்டம் - எந்திரி அலுவலர்**

வியாபாரப் பரப்பும் கப்பல்களின் விபரணமும்

| | * எல்லையற்றது 3000 கிலோ வோற் அல்லது அதற்கு மேல் | * எல்லையற்றது 500 கிலோ வோற் முதல் 3000 கிலோ வோற் வரை | *எல்லையற்றது 500 கிலோ வோற்றுக்குக் குறைவாக | 3000 கிலோ வோற் அல்லது அதற்கு மேல் | என். சி. வி. 500 கிலோ வோற் முதல் 3000 கிலோ வோற் வரை | என். சி.. வி. 500 மொத்தத் தொன்னுக்குக் குறைவாக |
|---|---|---|---|---|---|---|
| ஈ.டபிள்யூ.கே.ஓ | 2 | 1 | 1 | 1 | - | - |
| பிரதான எந்திரி அலுவலர் என்சிவி | - | - | - | - | 1 | - |
| இரண்டாவது எந்திரி அலுவலர் என்சிவி | - | - | - | - | 1 | 1 |
| ஈ.டபிள்யூ. கே.ஓ | - | - | - | - | 1 | 1 |

*எல்லையற்றது என்பது, எல்லையற்ற வியாபார இடப்பரப்புகள் எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.